YARL OSAI
# யாழ் ஓசை
வார இதழ்
Regested No. QD/130/News/2011
ஓசை : 01 நாதம் : 52 வெள்ளிக்கிழமை 28.10.2011 வார இதழ் விலை ரூபா: 15.00

# போர்க்குற்றம் தொடர்பில் பொறுப்புக்கூறல் அவசியம்

## சமாசிங்கவுடனான சந்திப்பில் பான் கீ மூன் வலியுறுத்தல்

வதிறகும் ... மீள் நோக்கிய செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கும் போர்க் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறும் தன்மை மிகவும் அவசியமானது என ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ. மூன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

... னால் இலங்கையின் விசேட தூதுவராக ஐ.நா.வுக்கு அனுப்பிவைக்கப் ... பான் கீ மூனை நேற்று முன்தினம் ஐ.நா. (6ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

முடங்கியுள்ள பல்கலைக்கழக கல்வி 15
கடாபியின் எழுச்சியும் வீழ்ச்சியும் 18
சமுதாயத்தில் பெண்கள்? 28

## மாநகரசபை கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை

- முஸ்லிம் உறுப்பினர்கள் தீர்மானம்

நெடுந்தீவு நிருபர்,

யாழ்ப்பாணம் மாநகரசபையின் பிரதி மேயர் பதவி தொடர்பாக ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டபடி மாநகரசபையின் முஸ்லிம் உறுப்பினர் ஒருவருக்கு இதுவரை வழங்கப்படாததைக் கண்டித்து சபை நடவடிக்கைகளில் இருந்து முஸ்லிம் உறுப்பினர்கள் விலகிக் கொள்வதாக மாநகரசபை முஸ்லிம் உறுப்பினர் (6ஆம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதே விஜயத்தின் நோக்கம்

இந்திய பாராளுமன்ற உறுப்பினர் சுதர்சன் நாச்சியப்பன்



வண்ணார்பண்ணை

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சர்வதேச தரப்புக்களின் உதவிகளை பெற்றுக்கொடுப்பதற்காகவே இவர்களை வடபகுதிக்கு அழைத்து வந்துள்ளேன் என இந்திய பாராளுமன்ற உறுப்பினர் சுதர்சன் நாச்சியப்பன் தெரிவித்தார். வெளிநாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று நேற்று யாழ். குடாநாட்டிற்கு விஜயத்தை மேற்கொண்டு யாழ். செயலகத்தில் அரச அதிபர் மற்றும் சிவில் அமைப்பு, அரச சார்பற்ற பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது அரசசார்பற்ற நிறுவனங்களின் உபதலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவிக்கையில், குறிப்பாக தமிழர் பகுதியில் (6ஆம் பக்கம் பார்க்க)




# சுகாதாரத்திற்கு பங்கமேற்படுத்துவோருக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம்,

பருவமழை ஆரம்பமானதை தொடர்ந்து சுற்றுச் சூழல் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்தி வரும் மானிப்பாய் பொலிஸார் சுகாதாரத்துக்கும் போக்குவரத்துக்கும் பங்கம் ஏற்படுத்தும் வகையில் குப்பை கூழங்களை வீதியில் போடுபவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுத்து வருவதுடன் இது குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அறிவுரையையும் வழங்கி வருகின்றனர்.

மாரி காலம் ஆரம்பமாகியுள்ளமையால் மக்கள் மத்தியில் தொற்றுநோய்கள் ஏற்படாதவாறு சுற்றுச் சூழலை பாதுகாக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் சுற்றுச்சூழல் பாதுக்காப்பிற்கென தனிப்பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

கிராமங்கள் தோறும் ரோந்து செல்லும் பொலிஸார் வீதிகளில் குப்பையை போட்டு சுகாதாரத்துக்கு பங்கம் ஏற்படுத்தும் பலர் மீதும் சட்ட நடவடிக்கை எடுத்து வருவதுடன் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சம்பந்தமாக மக்கள் மத்தியில்விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் ஈடுபடுகின்றனர்.




# இலுப்பைக்குளத்தில் நடமாடும் சேவை

தவசிக்குளம்,

உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான செயற்றிட்டத்தினால் ஒழுங்கு செய்[illegible] இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் இலுப்பைக்குளம் பொதுமண்டபத்தில் நடைபெறும்.

இந் நடமாடும் சேவையில் பிறப்புச் சான்றிதழ், இறப்புச்சான்றிதழ், திருமண பதிவுச் சான்றிதழ், அடையாள அட்டை பதிவு, காலங்கடந்த பதிவுகள் உட்பட பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

[illegible], இளைஞர் யுவதிகளுக்கான தொழில் பயிற்சிகள் மற்றும் விதவைகள், விசேட தேவையுடையவர்களுக்கான உதவிகள் மற்றும் காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு, இலவச சட்ட ஆலோசனைகளும் வழங்கப்பட உள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா மாவட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.

# யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக இரு திரையரங்குகளில் 'ஏழாம் அறிவு'

வடமராட்சி,

நடிகர் சூர்யா நடிப்பில் வெளிவந்த தென்னிந்திய திரைப்படமான ஏழாம் அறிவு திரைப்படம் யாழ்ப்பாணத்தில் ஒரே தடவையில் இரு திரையரங்குகளில் திரையிடப்பட்டுள்ளது.

மிக நீண்ட காலத்திற்குப் பின்னர் யாழ். மாவட்டத்தில் ஒரு படம் இரு திரையரங்குகளில் திரையிடப்பட்டுள்ளமை இது தான் முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது. யாழ். நகரில் ராஜா திரையரங்கிலும், தென்மராட்சியில் சாவகச்சேரி பாலா திரையரங்கிலும் இத் திரைப்படம் திரையிடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் ஒரு திரையரங்கில் மட்டுமே ஒரு படம் வெளியிடப்பட்டு அங்கு அப்படம் ஓடி வசூலான பின்னரே ஏனைய திரையரங்குகளுக்கு அப் படம் வழங்கப்படும். ஆனால் இம்முறை முதல் தடவையாக சூர்யா நடித்த ஏழாம் அறிவு திரைப்படம் இரு திரையரங்குகளில் தீபாவளி தினமான நேற்று முன்தினம் திரையிடப்பட்டு வருகின்றது.

இப்படத்தைப் பார்ப்பதற்கு இரு திரையரங்குகளிலும் ஏராளமான ரசிகர்கள் அலைமோதுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

# வல்வெட்டித்துறையில் மூடப்பட்ட வீதிகள் போக்குவரத்திற்கு திறப்பு

வடமராட்சி,

வல்வெட்டித்துறையில் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த வீதிகள் மீண்டும் போக்குவரத்திற்காக திறக்கப்பட்டு வருகின்றன. வல்வெட்டித்துறை நகர சபைக்குட்பட்ட வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்து கடற்கரை நோக்கி செல்லும் சந்தி ஒழுங்கை, சிவபுரம் வீதியில் இருந்து அளக்கடவை ஒழுங்கை ஊடாக மீன்சந்தைக்குச் செல்லுசம் பாதை ஆகியன கடந்த 16 வருடங்களாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் முட்கம்பி வேலியினால் அடைக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு தடைசெய்யப்பட்டிருந்தன.

அண்மையில் நகரபிதா நடராஜா அனந்தராஜ், இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் அதிகாரி ஆகியோருடன் நடத்திய பேச்சு வார்த்தையின் பயனாக மேற்படி இரு பாதைகளும் முட்கம்பிகள் மற்றும் மிதிவெடிகள் அகற்றப்பட்டு மக்களின் பாவனைக்காக திறந்துவிடப்பட்டுள்ளன. சுகாதார மேற்பார்வையாளர் குலத்தின் வழிகாட்டலில் நகர சபை சுகாதார தொழிலாளர்களுடன் இராணுவத்தினரும் இணைந்து சிரமதானப் பணிகளின் மூலம் பாதைகளை செப்பனிட்டு சுத்தம் செய்து திறந்துவிட்டமையால், வல்வை மண் படிப்படியாக இயல்பு நிலை நோக்கி திரும்பிக் கொண்டிருக்கின்றது.

நீண்ட தூரம் நடந்து செல்லும் சிரமத்தைக் குறைத்து மக்கள் இலகுவில் பயணம் செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தமைக்காக நகர சபை நிர்வாகத்தினருக்கும் அலுவலகர்களுக்கும் வல்வை மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர். அதேலபோன்று சுங்க வீதியையும் மக்களின் பாவனைக்காக திறந்துவிட உதவுமாறு அந்த பிரதேச மக்கள் நகரசபை நிர்வாகத்தினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.




வல்வெட்டித்துறை நகர சபைக்குட்பட்ட சில வீதிகள் முன்னர் இராணுவத்தினரால் போக்குவரத்திற்காக தடைசெய்யப்பட்டிருந்த அவ்வீதிகளில் போக்குவரத்துச் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட நிலையில் வீதிகளை சுத்தம் செய்யும் பணியில் மக்கள் ஈடுபட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்- வடமராட்சி நிருபர்)

# அளவெட்டி தபாலகத்திற்கு நிலம் வழங்கியும் கட்டிடம் நிர்மாணிக்கப்படவில்லையென விசனம்

தெல்லிப்பழை

அளவெட்டி தபாலகம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. பழைய அமைவிடத்திற்கு அருகாமையில் உள்ள கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

இத்தபாலகத்திற்கென ஊர்மக்களும் அன்பளிப்பு செய்துள்ள போதிலும் அக்காணியில் இதுவரை கட்டிடம் அமைக்கப்படாது தற்காலிக கட்டிடங்களில் இயங்கி வருகின்றது. இத் தபாலகத்திற்கென புதிய கட்டிடம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி வைத்த போதிலும் இதுவரை கட்டிடம் அமைப்பதற்கான எந்த நடவடிக்கையும் இடம்பெறவில்லை. பல வருடங்களாகியும் இதனை செயற்படுத்தாது வாடகைக் கட்டிடத்தில் தபாலகம் இயங்கி வருவது அப்பகுதி மக்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இத் தபாலகமானது பொதுமக்களுக்கான அனைத்து சேவைகளையும் இலகுபடுத்தி முற்றிலும் கணினி மயப்படுத்தப்பட்ட வலைப்பின்னல் மூலம் வழங்கி வருகின்றது. இதன் மூலம் உள்நாட்டு பணப்பரிமாற்றம், உள்நாட்டு வெளிநாட்டு பணப்பரிமாற்றம் வெஸ்டேன் யூனியன் மூலம் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள முடிகின்றது. வெளிநாடுகளில் உள்ளவர்களுக்கு பொதிகளை அனுப்புதல், ஈ - மெயில் சேவை, தேசிய சேமிப்பு வங்கியின் மின்சாரக் கட்டணம், பொலிஸ் தண்டப்பணம் வருகின்றது.

இருப்பினும் சகல நவீன வசதிகளுடன் சகல தேவைகளையும் வழங்கிவரும் தபாலகமானது மக்களுடைய பொது அமைப்புக்களுடைய முயற்சியால் நிரந்தர காணி தபாலகத்திற்கு பெற்றுக் கொடுத்தும் இதுவரை அக்காணியில் கட்டடம் அமைக்கப்படாது வாடகை கட்டடங்களில் இயங்கி வருவது மக்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் நடவடிக்கை எடுத்து புதிய காணியில் சகல வசதிகளையும் கொண்ட தபாலகத்தை அமைத்து மக்களுக்கு சேவை வழங்க வேண்டுமென பொதுமக்களும் பொது அமைப்புகளும் வினயமாக வேண்டுகின்றன.

# கிளிநொச்சியில் வினாடி வினாப் போட்டி

தெல்லிப்பழை

பாடசாலை மாணவர்களிடையே கோட்ட வலய மட்டங்களில் நடத்தப்பட்ட ''உங்களுக்குத் தெரியுமா'' வினாடி வினாப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான மாகாண மட்டப் போட்டிகள் எதிர்வரும் 6 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலய மட்டப் போட்டியில் கலந்து கொண்டு முதல் ஐந்து இடங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் இப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய நிகழ்வுகள்

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி

தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் சைவ கலைப் பண்பாட்டு பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆன்மிக சஞ்சிகையின் விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை சி. பத்மநாதனும், மதிப்பீட்டுரையை சைவப்புலாவர் ஆசிரியர் சு. நித்தியதசீதரனும் நிகழ்த்துவார்கள்.

## பருத்தித்துறையில் சிறுவர், முதியோர் தின விழா

வடமராட்சி

சர்வதேச சிறுவர், முதியோர் தினவிழா பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9. 30 மணிக்கு பிரதேச செயலர் இ. வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் கலந்து கொள்வார். இத்தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கப்படுவதுடன் முதியோர் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறும்.

## அமரர் இராசதுரையின் நினைவுப் பேருரை நிகழ்வு

தெல்லிப்பழை

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் கணபதி இராசதுரையின் நினைவுப் பேருரை நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிறபகல் 1.30 எது. நினைவுப் பேருரையை ஓய்வு பெற்ற பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் சோ. பத்மநாதன் 'எமது கல்வி முயற்சிகள் முடிவுறாத பயணங்கள்' எனும் தலைப்பில் நிகழ்த்தவுள்ளார். இந் நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள், குடும்பத்தினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அமரர் இராசதுரை நினைவுக் குழுவினரும், மத்தியகல்லூரி சமூகத்தினரும் கேட்டுள்ளனர்.

## சினேகபூர்வ உதைபந்தாட்டம்

சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையிலான சினேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

★★★

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையிலான சினேகபூர்வ உதைபந்தாட்ட போட்டி இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.



# கேட்டியளே சங்கதி




இன்னுமொரு கொஞ்சக் காலம் போனால் ,எங்கட தமிழ்ச்சனத்திட்ட உங்கட பண்பாட்டு விடயம் ஒன்றைச் சொல்லுங்கோ எண்டு கேட்டால் என்னத்தச் சொல்லப் போகினம். காட்டப்போகினம்... ஓடிப்போய் பழைய சிறுகதைப் புத்தகங்களையும், வரலாற்றுப் புத்தகங்களையும் புரட்டிப் பார்க்கிற நிலமைதான் வரப்போகுது பாருங்கோ... போன இரண்டு நூற்றாண்டுகளில் வாழ்ந்த புலவர்களும், எழுத்தாளர்களும் எழுதி வைத்த வரலாற்றுப் பதிவுகள் தான் இன்றைக்கும் எங்கட தனித்துவத்தை எடுத்துக்காட்டுறதுக்காக இருக்கின்றன. தனக்கெண்டு ஒன்றையும் நிலையாக உருவாக்காமல் அழிக்கிற சமூகமாகத் தான் இன்றைய இளம் சமூகம் போய்க்கொண்டிருக்கு.

முந்தநாள் தீபாவளி அன்று, கோயில்ல சனக்கூட்டம் கூட முன்னுக்கு சாமியப் போய் கும்பிட்டு வருவோமெண்டு விடியக்காலேலையே நல்லூரானிட்டப் போயிட்டன் அட, அங்க என்னைப் போல கொஞ்சப் பழசுகள் தான் நிண்டுதுகள். சரி இனி இனித்தான் சனம் வரும் எண்டு நினைச்சுக்கொண்டு நானும் முருகனை நெரிசல் இல்லாமல் சௌகரியமா தரிசித்துப் போட்டு கஸ்தூரியார் றோட்டால வந்தேன் பாருங்கோ... றோட்டால போகேலாத அளவுக்கு சனம். மேளதாளங்களின்ர முழக்கம் யாரோ றேடியோக்கார் வீதி நிகழ்ச்சி செய்யினமாக்கினம் எண்டுநினைச்சுக்கொண்டு சைக்கிலால இறங்கி உருட்டிக்கொண்டு போனேன். எல்லாம் இளவட்டுக்கள் தான் றோட்ட மொச்சுக்கொண்டு நிக்கினம். ஒரு பக்கம் கொஞ்சப்பேர் கியூவில நிக்கினம்... எங்க போகுது உந்தக் கியூ எண்டு பார்த்தால் அது தியேட்டருக்குள்ள போகுது. எட நாசமறுக்க இதுக்கே இவ்வளவு சனம்... உந்த படம் பாக்கிறதுக்காக வரிசையில நிக்கிறதுக்கே ஏழு,எட்டு மணிக்கே வந்திருப்பாங்கள் போல இருக்கு...

பாத்தியளே, எப்படிக்காலம் மாறியிருக்கெண்டு... எங்கட அடுத்த தலைமுறை எதுக்கு முக்கியத்துவம் கொடுக்குதெண்டு விளங்குதே... பண்டிகை என்றால் அண்டைக்கு படம் பார்ப்பதும், தண்ணியடிப்பதும் தான் ஒரு இளைஞனுக்கு சமூக அந்தஸ்தை இளம் வட்டத்தினரிடம் ஏற்படுத்திக்கொடுக்கிறது என்ற எண்ணம் உருவாகி வருகுது. தியேட்டருக்க போய் சேட்டைக் கழற்றி சுற்றிக்கொண்டு விசில் அடிக்கிறதும் (B) பாருக்குள் இருந்து தண்ணியடித்துக் கொண்டு அடுத்தவனைப் பற்றி கதை அளப்பதும் தான் ஹப்பியான தீபாவளி எண்டு இப்பத்த நவீன சமூகம் நினைக்குது. உண்மையைச் சொல்லப்போனால் இவயளச் சொல்லிக் குற்றம் இல்லை பாருங்கோ... சமாதான காலம் வந்து சுதந்திரமாய் எங்கும் போய் வரும் நிலை வந்ததும் எங்கு போவது? எதைச் சரியாகத் தெரிந்தெடுப்பது எண்டு தெரியாமல் தடுமாறும் நிலையில் தான் யாழ்ப்பாண இளம் சமூகம் பரிதவிக்கின்றது.

அணை உடைத்துப் பாயும் தண்ணியை ஒழுங்காக வரம்பு கட்டி விடுறதுக்கு ஆட்கள் இல்லை எண்டால் தண்ணி தன்ர போக்குக்கு தான் போகும் பாருங்கோ.. அது போலத் தான் இண்டைக்கு யாழ்ப்பாணத்தில இளம் சமூகத்தின்ர நிலையும். வழிகாட்டுறதுக்கு ஒழுங்கான ஆட்கள் இல்லாததால பரவிப்பாயினம். காலையில் 'பல்சர்' இல முறுக்கி கொண்டு வீட்டுக் கேட்டத் தாண்டும் போது இண்டைக்கு எங்க போக வேணும் எண்டு தீர்மானிக்காமல் தான் வெளிக்கிடுகினம். வீட்டில வெறும் தேத்தண்ணி குடிச்சாலும் பறவாயில்ல, இண்டைக்கு விஜயின்ர படம் வெளியீட்டுக்கு அவரின்ர கட்டவுட்டுக்கு குடம் குடமாக பாலாபிஷேகம் செய்ய வேணும் எண்ட மன சிந்தனை தலையெடுத்திருக்கு. முந்தநாள் யாழ்ப்பாணத்தில விஜயின் உருவம் வரையப்பட்ட பலகைக்கு பாலாபிஷேகம் நடந்திருக்கு....

அதிகாலையில் ஆலயத்துக்குப் போய் சாமிதரிசனம் பார்த்துவிட்டு வீட்டுக்குவந்து குடும்பத்தோடும், சுற்றத்தாரோடும் மகிழ்ந்துண்டு அமைதியாகக் கொண்டாடப்பட்ட தீபாவளி இண்டைக்கு அயல் நாட்டின் ரீ.வி. சினிமா மாயைக்கு மூழ்கிப் போய் எல்லாரையும் மௌனிகளாக்கி வைச்சிருக்கு... வயதுக்கு வந்த பெடியள் தியேட்டரிலும் (B) பாரிலும் இருக்க வீட்டில இருக்கிறவயள் நாள் முழுக்க ரீ.வி க்குள்ளேயே இருப்பினம். வீட்டுக்கு வாறவயளோடயும் கதைக்க மாட்டினம். வீட்டில இருக்கிறவயளோடயும் கதைக்க மாட்டினம். அப்படி கட்டிப் போட்டிருக்கும் ரீ.வி. இப்படியாக இப்ப எங்கட தமிழன்ர வாழ்க்கை போகேக்க எப்படி எங்கட எண்டு ஒன்றை இனி வரும் சந்ததியினருக்கு நாங்கள் கொடுக்கப்போறோம். கொஞ்சம் சிந்திக்க வேண்டிய விசயம் பாருங்கோ இது...

Yarl Osai
யாழ் ஓசை
2011 ஒக்டோபர் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

# இனப் பிரச்சினை தீர்வில் சர்வதேச நாடுகளின் பங்களிப்பு

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் அரசாங்கம் இனப் பிரச்சினைத் தீர்வு முயற்சிகளைத் துரிதப்படுத்த வேண்டும் என பல்வேறு சர்வதேச நாடுகளும் அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன.

இந்நிலையில்தான் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினைக் காணும் நோக்கிலும் அரசாங்கம், தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்த வேண்டும் என இந்தியா மற்றும் அமெரிக்க உள்ளிட்ட நாடுகள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

அந்த வகையில் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க செயலர் ரொபட் ஓ பிளேக் அரசாங்க பிரதிநிதிகளையும் கூட்டமைப்பு பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார்.

அவரது வருகையைத் தொடர்ந்து ஏற்கனவே தடைப்பட்டுப் போயிருந்த அரசாங்கத்திற்கும் கூட்டமைப்புக்குமிடையிலான பேச்சுவார்த்தையும் மீள ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில்தான் தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பினரை பேச்சுவார்த்தைக்கு வருமாறு அமெரிக்க அரசாங்கம் அழைப்பு விடுத்திருக்கிறது. இதற்கமைய அங்கு சென்றிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இலங்கையின் இனப் பிரச்சினை தீர்வு முயற்சிகள் தொடர்பில் தாம் கொண்டுள்ள நிலைப்பாடுகளை விளக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது எவ்வாறான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன என்பது தொடர்பில் தகவல்கள் வெளிவராவிடினும் நிச்சயம் கூட்டமைப்பு தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை முன்னிறுத்தியே தமது யோசனைகளை முன்வைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இது இவ்வாறிருக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அமெரிக்க விஜயம் தொடர்பில் உள்நாட்டில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இவ் விஜயத்தை தீர்வுக்கான சாதகமான முன்னெடுப்பாக ஒருசாரார் கருதுகின்றபோதிலும் மற்றுமொருசாரார் விமர்சனக் கண்கொண்டே நோக்குவதும் இந்த இடத்தில் சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரைநிகழ்த்திய பிரதமர் டி.எம்.ஜயரட்ண, உள்நாட்டில் பேசித் தீர்க்க வேண்டிய விடயங்களை வெளிநாடுகளுக்குச் சென்று கூறுவதில் எந்தவித நன்மையும் ஏற்படப் போவதில்லை எனக் குறிப்பிட்டிருந்தார். அதேபோன்றுதான் தமிழ் மக்களின் தேவைகளை அமெரிக்காவுக்குச் சென்று கூறவேண்டிய அவசியம் கிடையாது. அவை பற்றி பாராளுமன்றத்தில் பேச முடியும் எனவும் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்திருக்கிறார்.

இருப்பினும் அரசாங்க தரப்பினரின் இவ்வாறான கருத்துகளுக்குப் பதிலளித்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சர்வதேச நாடுகளிடம் எடுத்துக் கூறுவதில் எந்தத் தவறும் கிடையாது எனவும் அது அவர்களது ஜனநாயக உரிமை எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

தேசிய இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அரசாங்கத்திடம் உண்மைத் தன்மையோ வெளிப்படைத் தன்மையோ கிடையாது எனக் குறிப்பிட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள் இல்லாத வகையில் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

உண்மையில் அரசாங்கம் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் முன்னெடுப்புகளை மேற்கொள்ளுமானால் இலங்கை விடயத்தில் சர்வதேச நாடுகள் தலையிட வேண்டிய அவசியம் ஏற்பட்டிராது என்பதே அனைவரதும் பொதுவான அபிப்பிராயமாகும்.

அந்தவகையில் கூட்டமைப்பின் அமெரிக்க விஜயத்தை விமர்சிப்பதைப் பார்க்கிலும் அதனை பேச்சுவார்த்தைக்கு வலுச்சேர்ப்பதற்கான ஒரு விஜயமாகக் கருதி தொடர்ந்தும் கூட்டமைப்புடன் பேச்சுவார்தை நடத்துவதே அரசாங்கத்தின் முன்னுள்ள பணியாகும். அவ்வாறானதொரு நேர்மையான போக்கை அரசாங்கம் கடைப்பிடிக்குமாயின் அடுத்த கட்டப் பேச்சுக்கள் மிகவும் ஆக்கபூர்வமானதாக அமையும் என்பதில் எந்தவித சந்தேகமும் கிடையாது.

# த.தே.கூ. வின் அமெரிக்க விஜயம் தமிழர்களின் விடுதலைக்கான போராட்டதில் ஒரு மைல்கல்?

எந்தவொரு அழிவும் இன்னொரு ஆரம்பத்திற்கான அத்தியாயம் என்ற வரலாற்று உண்மைகள் தமிழர்கள் மத்தியில் இன்று நிதர்சனமாகியிருக்கின்றன. சில பது ஈழத்தமிழர்களுடைய தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு மிகப்பொருத்தமாகவே அமைகிறது என்பது காலத்தினூடாக நாம் கண்டு கொள்ளலாம்.

1961 ஆம் ஆண்டு யாழ்ப்பாண அரச செயலகத்திற்கு முன்னால் இடம்பெற்ற வரலாற்று முக்கியத்துவம் மிக்க சத்தியாக்கிரகப் போராட்டத்திலே பங்கெடுத்த தாய் ஒருவர், கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றியீட்டியதைத் தொடர்ந்து பின்வருமாறு கூறினார், ஐம்பது வருடங்கள் சென்றாலும், காட்சிகளும், ஆட்சிகளும் மாறினாலும், போராட்ட வடிவங்களும், களங்களும் மாறினாலும் எங்களது கொள்கையும், இலக்கும் மாறவில்லை யென்பதையே நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஊடாகப் பெரும்பான்மையான தமிழ் மக்கள் ஜனயாக ரீதியாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்றார்.

புலிகள் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்ட சூழலில், தமிழ் மக்கள் பெரும் மனிதப் பேரவலத்தை எதிர்கொண்டு சுமார் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் இடம்பெற்ற தேர்தல் இது என்பதால், தமிழ் மக்கள் மட்டுமன்றி, இலங்கை ஆட்சிப்பீடமும், சர்வதேச சமூகமும், குறிப்பாக அமெரிக்காவும், இந்தியாவும் குறித்த தேர்தலை உன்னிப்பாகவும், ஆழமாகவும் அவதானித்திருந்தன.

2010 ஏப்ரலில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலிலும், கடந்த ஜீலையில் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான இனம், அவர்களுடைய சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதிபடத் தெரிவித்திருந்தது.

இந் நிலையில் 2011 ஜீலையில் இடம்பெற்ற உள்ளூராட்சி அதிகார சபைக்கான தேர்தலில் கூறியதற்கிணங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ் மக்கள் அமோக வெற்றியீட்டச் செய்தனர்.

2010 ஏப்ரலில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில், தமிழ் மக்களால் ஜனநாயக ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் என்ற அடிப்படையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பை விசேட சந்திப்புக்கு அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அழைத்துள்ளது. இது தமிழர்களின் தேசிய விடுதலைக்கான போராட்டத்தில் ஒரு மைல்கல். அதே வேளை, தமிழர்களுடைய அரசியல் அபிலாசைகளை சர்வதேச சமூகத்துக்கு, குறிப்பாக பூகோள அரசியலில் வரலாற்று ரீதியான ஓர் அரிய வாய்ப்பு.

இந்த வாய்ப்பினை சம்பந்தன் எம்.பி. தலைமையில் வாசிங்டனுக்கு செல்லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் மிகவும் ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது தாயகத்திலும், புலத்திலும் வாழும் தமிழ்மக்களின் எதிர்பார்ப்பும், வேண்டுகோளும் ஆகும்.

இராஜதந்திரம் என்பது தனது தேசிய நலனை குறுகிய, மத்திம மற்றும் நீண்டகால அடிப்படையில் பூர்த்தி செய்வதனை குறிக்கோளாகக் கொண்டே செயற்படும். அக மற்றும் புற ரீதியாக உருவாகிய, உருவாகிக்கொண்டிருக்கும் மற்றும் உருவாகக்கூடிய காரணிகளை ஆழமாக ஆராய்ந்து, அதனால் தனது தேசிய நலனை எவ்வாறு பூர்த்தி செய்யலாம் என்பதற்கிணங்கவே, இராஜதந்திர காய் நகர்த்தல்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் இடம்பெற்று வந்தன.

இராஜதந்திர முன்னெடுப்பின் போது, தோற்றம் பெறும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களும், சாத்தியப்பாடுகளும் தமது நலனை பூர்த்தி செய்வதற்கு ஒரு கருவியாக பயன்படுத்தப்படும். இது, இராஜதந்திரக் களத்தில் சாதாரண விடயம்.

ஆனால், இதனை மனதில் வைத்து, இந்த நகர்வினூடாக தமிழ் மக்களுக்கு சாதகமான முறையில் எதைப் பெறலாம் என்பதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மிக உயர்ந்தபட்ச கரிசனையை செலுத்த வேண்டும்.


தமிழ் மக்களுக்கு சாதகமாக காய்களை எவ்வாறு நகர்த்தலாம் என்பது ஒருபுறமிருக்க, நடைபெற்று முடிந்த தேர்தல்களில் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு பூரண ஆதரவு தெரிவித்து வாக்களித்துள்ளார்கள் என்ற அடிப்படையில், தமிழ் மக்கள் சுயநிர்ணய அடிப்படையில் தமது இருப்பை உறுதிப்படுத்த விரும்புகிறார்கள் என்பதை மிக அழுத்தமாக அமெரிக்க இராஜங்க திணைக்கள செயலருக்கும், அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

இராஜதந்திரம் என்பது சக்திமிக்க தரப்புகளுக்கு அடிபணிந்து போவதோ அல்லது அவர்களை திருப்திப்படுத்துவது போல் செயற்படுவதோ அல்ல. மாறாக, எங்களுக்கு என்ன வேண்டும் என்பதை அவர்களுக்கு ஏற்ற மொழியில் சொல்லும் ஒரு கலையாகும். அதனூடாக, அவர்களை எங்களுடைய நிலைப்பாட்டுக்கு இணங்க வைக்க வேண்டும். (தொடரும்)

# கேரள முதல்வர் உம்மன் சாண்டி மீது ஊழல் புகார்: பதவி விலகவேண்டும் என கோரிக்கை

**திருவனந்தபுரம்:**

கேரள முதல்வர் உம்மன் சாண்டி, தனது முந்தைய பதவிக் காலத்தின் போது 256 கோடி ரூபாய் மதிப்பிலான மாசுக் கட்டுப்பாட்டு திட்டத்தை நிறைவேற்ற உத்தரவிட்டதில் ஊழல் செய்துள்ளாக, எதிர்க்கட்சியான இடதுசாரி கட்சிகள் புகார் கூறியுள்ளன. இதனையடுத்து உம்மன் சாண்டி, உடனடியாக முதல்வர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.



கடந்த 2005 இல், கேரள முதல்வராக காங்கிரஸைச் சேர்ந்த உம்மன் சாண்டி இருந்தார். அப்போது, திருவனந்தபுரத்தில் இருந்த, மாநில அரசுக்கு சொந்தமான திருவாங்கூர் டைட்டானிய நிறுவனத்தை, சுற்றுச்சூழல் பிரச்சினை காரணமாக மூடவேண்டிய நிலை ஏற்பட்டது. இதை தடுக்கும் வகையில், அங்கு 256 கோடி ரூபாய் செலவில், மாசு கட்டுப்பாட்டு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உம்மன் சாண்டி நடவடிக்கை எடுத்தார். ஆனால், இதற்கு பின் வந்த இடதுசாரி கூட்டணி அரசு, இந்த திட்டத்தை நிதி பிரச்சினை காரணமாக ரத்துச் செய்தது. இதனைத்தொடர்ந்து கடந்த மே மாதம் மீண்டும் முதல்வராக உம்மன் சாண்டி பதவியேற்றார். இந்நிலையில் மாசுக் கட்டுப்பாட்டு திட்டம் தொடர்பான விவகாரத்தில், உம்மன் சாண்டி பெரிய அளவில் முறைகேடு செய்துள்ளதாக இடதுசாரி கட்சிகள் புகார் தெரிவித்துள்ளன. இதுகுறித்து, கேரள சட்டசபையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மத்திய குழு உறுப்பினர் தாமஸ் ஐசக் கூறியதாவது,

தனது முந்தைய பதவிக்காலத்தின் கடைசி நாட்களில், மாசுக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைக் கொண்டுவருவதற்காக உம்மன் சாண்டி அவசரமாக செயற்பட்டுள்ளார். இதன்பின், நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அமைக்கப்பட்ட நிறுவனம், திடீரென மதிப்பீட்டுத் தொகையை ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட 256 கோடி ரூபாயில் இருந்து 414 கோடியாக அதிகரித்தது. இதனால், நிதிப் பிரச்சினை காரணமாக, இந்த திட்டத்தை ரத்துச் செய்தோம்.

இந்த திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பாக, மிகப்பெரிய ஊழல் நடந்துள்ளது. மத்திய தணிக்கை அலுவலகமும், இது தொடர்பாக குற்றம் சாட்டியுள்ளது. இந்த திட்டத்துக்காக 62 கோடி ரூபாய் செலவில் வாங்கப்பட்ட இயந்திரம், எந்தவித பயன்பாடும் இல்லாமல் டைட்டானியம் நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ளது.

மாசுக் கட்டுப்பாட்டு திட்டத்தை கண்காணிப்பதற்காக, கடந்த 2005 இல் உச்சநீதிமன்றால் ஒரு ஆணையம் அமைக்கப்பட்டது. இந்த ஆணையத்தின் தலைவருக்கு உம்மன் சாண்டி, அப்போது மூன்று கடிதங்களை எழுதியுள்ளார். அந்த கடிதங்களில், டைட்டானிய நிறுவனத்தை மூடக்கூடாது என்றும் இதற்காக மாசு கட்டுப்பாட்டு வாரியம் விரைவில் அமைக்கப்படும் என்றும் கூறியுள்ளார். அமைச்சரவையின் ஒப்புதல் பெறுவதற்கு முன்பே, தன்னிச்சையாக சாண்டி, இதுபற்றிய முடிவை கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேலும், இந்த விவகாரத்தில், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் முடிவு எடுக்கும் முன்பே, டைட்டனியம் நிறுவனத்தில் மாசுக் கட்டுப்பாட்டு திட்டம் செயற்படுத்தப்படுவதை வாரியம் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும், அந்த கடிதத்தில் கூறியுள்ளார். திட்டத்தை செயற்படுத்துவதற்கான குறிப்பிட்ட நிறுவனத்தின் பெயரையும் அதில் குறிப்பிட்டுள்ளார். இந்த விவகாரத்தில் நூறு கோடி ரூபாய் அளவுக்கு, ஊழல் நடந்துள்ளது. இதுகுறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண் டும். முதல்வர் உம்மன் சாண்டி, தன் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்றார்.

**சாண்டி மறுப்பு:**

இதுகுறித்து முதல்வர் உம்மன் சாண்டி கூறுகையில், 'பொதுத்துறை நிறுவனமான டைட்டானியம் நிறுவனம் மூடப்படக்கூடாது என்பதற்காகவே, மாசுக் கட்டுப்பாட்டு திட்டத்தை செயற்படுத்த முடிவுசெய்தோம். டைட்டானியம் நிறுவனத்தின் ஊழியர்கள் என்னை அணுகி, இந்த விவகாரத்தில் தலையிடு மாறு வலியுறுத்தினர். இதன் காரணமாகவே, இந்த விவகாரத்தில் தலையிட்டேன்'என்றார்.

## "ஜன லோக்பாலை நிறைவேற்றுங்கள்"

**புதுடில்லி:**

அன்னா ஹஸாரே குழுவினர் தவறு செய்திருந்தால் இரண்டு மடங்கு தண்டியுங்கள், அதே சமயம் ஜன லோக்பால் மசோதாவை உடனடியாக நிறைவேற்றுங்கள் என்று அரவிந்த் கேஜரிவால் கூறினார்.

டில்லி அருகே காஜியாபாதில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர் இது குறித்து கூறியதாவது,

120 கோடி மக்களில், ஒரு தவறுமே செய்யாத புனிதர்கள் மட்டுமே அரசின் ஊழல் விவகாரங்களைத் தட்டிக்கேட்க முடியும் என்கிறார்கள். ஒருவேளை யாராவது ஒருவர், அரசின் குறைகளைச் சுட்டிக் காட்டினால், உடனே அவரது சிறுசிறு கவனக்குறைவுகளை எல்லாம் பெரிதுபடுத்தி அவதூறுப் பிரசாரம் மேற்கொள்கிறார்கள்.

இதையெல்லாம் மக்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களது அடுத்த போராட்டம், முந்தைய போராட்டத்தைவிட 10 மடங்கு பெரிதாக இருக்கும்.

மேலும், ஹஸாரே குழுவைச் சேர்ந்தவர்கள் தவறு செய்திருந்தால் அது குறித்து விசாரணை நடத்தி சாதாரண மக்களுக்கு வழங்கப்படும் தண்டனையை விட இரண்டு மடங்கு அதிகமாக தண்டனையை வழங்குங்கள். அதுபற்றி கவலையில்லை. ஆனால், ஜன லோக்பாலை உடனடியாக நிறைவேற்றுங்கள்.

லோக்பாலை நிறைவேற்றவிடாமல் யார் குழப்பம் விளைவிக்கிறார்கள் என்பது மக்களுக்குத் தெரியும். மத்திய அரசு நேர்மையாக இருக்குமானால், ஒரேநாளில் மசோதாவை நிறைவேற்ற முடியும் என்றார்.

## கட்டடம் இடிந்து விழுந்து விபத்து

### 8 பேர் பலி

**மும்பை :**

மும்பை அருகே நான்கு மாடி கட்டடம் ஒன்று இடிந்துவிழுந்ததில், எட்டு பேர் பரிதாபமாக பலியாயினர். மேலும், இந்த விபத்தினால் 20க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

மும்பை அருகே பிவாந்தி என்ற இடத்தில் இருந்த, நான்கு தளங்களை கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்பு திடீரென இடிந்துவிழுந்தது. இந்த குடியிருப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்துவந்தனர். கட்டடம் இடிந்துவிழும் சத்தம் கேட்டதும், கீழ் தளத்தில் இருந்த பலர், பீதியில் அலறியபடி வெளியில் ஓடினர்.

இந்நிலையில், இந்த விபத்தில், எட்டு பேர் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது. அதேநேரம், இதில் 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## பட்டாசு சத்தம் இல்லாத கிராமம்: வௌவால்களுக்காக 'தியாகம்'

**புதுச்சேரி:**



வௌவால்களுக்காக பட்டாசு இல்லாத தீபாவளியை கொண்டாடி வருகிறார்கள் கழுப்பெரும்பாக்கம் கிராம மக்கள்.

இரவு முழுவதும் உணவு வேட்டை நடத்திவிட்டு பகலில் மரக்கிளைகளில் தொங்கியப்படி ஓய்வு எடுக்கும் நேரத்தில் பட்டாசுகள் வெடித்தால் வௌவால்கள் கலைந்து சென்றுவிடும் என்பதற்காகவே அவர்கள் இந்தத் தியாகத்தை கடந்த 5 தலைமுறையாக செய்துவருகிறார்கள்.

புதுச்சேரி அடுத்த காலாப்பட்டு அருகில் தமிழக பகுதியைச் சேர்ந்தது கழுப்பெரும்பாக்கம் கிராமம். இங்குள்ள மக்கள் தீபாவளியை மிகக் கோலாகலமாகக் கொண்டாடினாலும் பட்டாசை மட்டும் அண்டவிடுவது இல்லை. இதை அவர்கள் கிராமத்தில் இடம்பெறும் திருமணம், காது குத்தல், ஊர் திருவிழா என பொது விசேடங்கள் அனைத்திலும் ஒரு கொள்கையாகவே கடைப்பிடிக்கிறார்கள்.

மேலும், இவர்களுக்கு இந்த வௌவால்கள் செல்ல குழந்தைகளாக விளங்குவதால் இவை மரத்திற்கு அடியில் அடிப்பட்டு விழுந்துகிடப்பதைக் கண்டாலே அதற்கு சிகிச்சையளித்து மீண்டும் மரக்கிளையில் ஏற்றிவிடுகின்றனர். அதே நேரம், இவை இறந்து விட்டால் சில நிமிடநேரம் மௌன அஞ்சலி செலுத்தியதற்குப்பின் மண்ணில் புதைத்து விடுகிறார்கள்.

# வடமாகாணத்தின் 297 பதவிகளுக்கு வெற்றிடங்கள்

அச்சுவேலி

வடமாகாணத்தில் சேவை தர நிலையில் 297 பதவிகள் நிரப்பப்படாமல் வெற்றிடமாக உள்ளன. இதனால் மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் செயற்பாடுகளில் தடங்கல்கள் ஏற்படுவதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

வடமாகாண சபையின் கீழ் உள்ள அமைச்சுக்கள் திணைக்களங்களின் உயர் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்கள் என்ற வகையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 156 பதவி வெற்றிடங்கள், இலங்கையின் நிர்வாக சேவையில் 54 பதவி வெற்றிடங்கள், இலங்கையின் கணக்காளர் சேவையில் 35 வெற்றிடங்கள், இலங்கை பொறியியலாளர் சேவையில் 17 வெற்றிடங்கள், இலங்கையின் கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் 15 வெற்றிடங்கள், இலங்கை விவசாய சேவையில் 13 வெற்றிடங்கள், இலங்கை திட்டமிடல் சேவையில் 6 வெற்றிடங்களும் இலங்கை கட்டடக்கலைஞர் சேவையில் ஒரு இடமும் உரிய முறையில் பூர்த்தி செய்ப்படாமல் நீண்ட காலமாக காலியாக இருந்து வருவதாக அறியமுடிகின்றது.

நாடளாவிய சேவையை சேர்ந்த இந்த பதவிகளுக்கு உரிய முறையில் பதவி ஆளணியை தெரிவுசெய்வதற்கு மத்திய அமைச்சும் பொதுச்சேவைகள் ஆணைக்குழுவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தயக்கம் காட்டி வருவதால் உரிய பதவிகளுக்கான ஆட்கள் தெரிவுசெய்யப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக மேற்படி சேவைகளுக்கு பொருத்தமானவர்கள் வடக்கு மாகாணத்தில் இருந்து தெரிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதால் மேற்படி பதவிகளுக்கு தகுதியான பலர் பதவி உயர்வு இன்றி காத்திருக்கின்றனர்.

உரிய காலப்பகுதியில் அடுத்த தர நிலையில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படாமையினால் பலர் பதவி உயர்வு பெற முடியாமல் 60 வயது நிலையில் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டனர்.

எனவே உயர்தர பதவி நிலையில் பெருமளவு ஆளணி பூர்த்திசெய்யப்படாமல் இருப்பதால் மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் செயற்பாடுகளில் தாமதங்கள், குழப்பங்கள் ஏற்பட்டு வருதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

## மாநகரசபை...(தொடர்ச்சி)

எம்.எம்.எஸ்.முஸ்தபா தெரிவித்தார்.

மாநகரசபை மாதாந்தப் பொதுக்கூட்டம் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

ஏற்கனவே ஒப்புக்கொண்டபடி பிரதி முதல்வர் பதவி இதுவரை முஸ்லிம் பிரதிநிதி ஒருவருக்கு வழங்க முதல்வர் முன்வரவில்லை எனவும் இது தொடர்பாக பலதடவைகள் முதல்வருடன் பேசியபோதும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் எனவே சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதை முஸ்லிம் பிரதிநிதிகளான எம்.எம்.எஸ்.முஸ்தபா, மொகமட் றமீஸ், பதுர்தீன் அஸ்கர்ரூபி ஏ.அஸ்வர் ஆகிய நால்வரும் தவிர்த்துக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

## பாதிக்கப்பட்ட...(தொடர்ச்சி)

இயல்புவாழ்க்கை திரும்பியுள்ளது எனத் தெரிவிக்கப்படுவது பொய் எனத் தெரிவித்ததுடன் கடந்த வாரத்தில் இரண்டு பல்கலைக்கழக மாணவர்கள் இனந்தெரியாத நபர்களினால் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டுள்ளனர். இதனால் பல்கலைக்கழக மாணவர்கள் காலவரையறையற்ற பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இத்தகைய சம்பவங்கள் மூலம் வடபகுதியில் இயல்புநிலை திரும்பவில்லை என தெளிவாக அறியமுடியும். மேலும் இருபது வருடகாலமாக தடைப்பட்டிருந்த கடற்றொழில் இந்திய மீனவர்களின் அத்துமீறலால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இந்திய வீட்டுத்திட்டம் தரமற்ற செயல்பாடாகவே உள்ளது எனவும் கூறினார்.

இதேவேளை இக்கருத்தை யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரமும் வலியுறுத்தினார். இவற்றுக்குப் பதிலளித்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர், இந்திய மீனவர் அத்துமீறல் தொடர்பில் இந்திய இலங்கை மீனவர்கள் ஒரு மேசையில் கூடியே முடிவெடுக்க வேண்டும். இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதேவேளை ஊடகவியலாளர்களால் இந்த விடயம் தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டபோது குறிப்பாக சர்வதேச நாடுகளில் இலங்கை போர்க்குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுவரும்நிலையில் இதனை திசைதிருப்பும் வகையில் இந்த விஜயம் உள்ளதாக தெரியவருவதாக கேட்கப்பட்டபோது அவ்வாறு இல்லையெனவும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சர்வதேச நாடுகளின் உதவிகளை பெற்றுக்கொடுப்பதற்காகவே இவர்களை அழைத்து வந்ததாக அவர் தெரிவித்தார்.

விமானம் மூலம் பலாலி வந்த குழுவினர் யாழ். செயலகத்திற்க வருகைதந்தபோது யாழ். அரச திருமதி இமெல்டா சுகுமார் வரவேற்றதுடன் யாழ்.குடாவில் அரசாங்கம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்குச் செய்துவரும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

நேற்றைய தினம் விஜயம் செய்த வெளிநாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றப்பட்ட இடங்கள் மற்றும் சர்வதேச நாடுகளினால் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத்திட்டங்களையும் பார்வையிட்டுத் திரும்பியுள்ளனர்.

இக்குழுவில் பிரிட்டன், சீராலியோன், பங்களாதேஷ், சூர்னாம், இந்தியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களே நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தவர்களாவர்.

## போர்க்குற்றம்...(தொடர்ச்சி)

தலைமையகத்தில் சந்தித்து உரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிந்த பின்னர் தெற்காசிய நாடுகளுக்கான விஜயத்தின் ஒரு கட்டமாக கொழும்புக்கு விஜயத்தை மேற்கொண்ட ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கைக்கு அமைவாகவும் இலங்கையுடன் நடைபெறும் ஐ.நா. வின் கலந்துரையாடலின் ஒரு பகுதியாகவுமே இச்சந்திப்பு இடம்பெற்றதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

இச்சந்திப்பு தொடர்பில் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் கருத்து வெளியிடுகையில்

யுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து வடக்கில் மீள்குடியேற்றம் மற்றும் மீள்கட்டுமான பணிகளுடன் கூடிய கௌரவமான இதய சுத்தியுடன் கூடிய அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் கூடிய தேசிய கலந்துரையாடல் நடத்தப்படுவது முக்கியமாது என்றும் பான் கீ. மூன் வலியுறுத்தியுள்ளார் என தெரிவித்தார்.

யுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து மூவர் அடங்கிய ஐ.நா. நிபுணர் குழுவின் பொறுப்புக் கூறுவது தொடர்பான அறிக்கையை ஐ.நா. செயலாளர் நாயகம் கடந்த மாதம் மனித உரிமை பேரவைக்கு அனுப்பிவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

யுத்தத்தின் இறுதி மாதத்தில் அரசாங்க துருப்பினரதும் விடுதலை புலிகளதும் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் நம்பகரமான அறிக்கைகளை இந்தக் குழு கண்டறிந்துள்ளது. அரசாங்கம் நேர்மையான விசாரணையை ஆரம்பிப்பதன் மூலம் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முறையான பொறுப்புக்கூறும் தன்மையை வெளிப்படுத்த முடியும் என இந்தக் குழு விதந்துரைத்திருந்தது. இச்சந்திப்பில் ஐ.நா.வுக்கான இலங்கை தூதுவர் பாலித்த கோஹன வும் பிரதி தூதுவர் சவேந்திர சில்வாவும் கலந்துகொண்டிருந்தனர்.

மேலும் நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சந்திப்பில் எதிர்வரும் நவம்பர் 15 ஆம் திகதி வெளியிடப்படவுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஒரு ஆண்டு கழித்து ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்க அரசின் சாரல்பில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க கால அவகாசம் கோரியதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஐ.நா. செயுலாளர் நாயகம் பான் கீ மூனை சந்தித்ததைத் தொடர்ந்து இன்னர் சிற்றி பிரஸ் அமைச்சரிடம் இது குறித்து வினவவியபோது பயனுடைய வையாக இருந்ததாகவும் நவம்பர் 15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவிருக்கும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை அடுத்த வருடம் அக்டோபர் மாதம் ஜெனிவாவில் அமைந்துள்ள ஐ.நா. மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்படும் என தெரிவித்திருந்தார்.

மேலும் ஐ.நா. அறிக்கையை ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பியமை தொடர்பில் இன்னர் சிற்றி பிரஸ் எழுப்பிய கேள்விக்கு ஐ.நா. வுக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதி பாலித கோஹன பதிலளிக்கையில் அதுவொரு பிரத்தியேக விவகாரம் என்றார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளருடனான சந்திப்பின் போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் சமரசிங்க விரிவாக விளக்கிக்கூறியதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் யுத்தத்தின் பின்னரான நாட்டின் தற்போதைய முன்னேற்ற நிலைமை குறித்தும் முன்னாள் போராளிகள் தொடர்ந்து சமூகமயப்படுத்தப்பட்டுவருகின்றமை தொடர்பிலும் அமைச்சர் ஐ.நா.வுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களின் நம்பகத்தன்மையின்மை மற்றும் பக்கச்சார்புத்தன்மை உள்ளிட்ட விடயங்கள் குறித்து அமைச்சர் சமரசிங்க ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்துக்கு எடுத்துக்கூறியதாகவும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் அதிகாரி குறிப்பிட்டார்.

கடந்த செப்டெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் அமர்வு குறித்தும் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமை பேரவையின் அமர்வுகளை இலங்கை எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றது என்பது குறித்தும் சந்திப்பின்போது ஆராயப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் அமர்வில் கலந்துகொண்டிருந்த அமைச்சர் சமரசிங்க அங்கிருந்தவாறு நியூயோர்க் பயணமானார்.

நியூயோர்க்கில் இடம்பெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையின் மூன்றாவது குழுக் கூட்டத்தில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர் மஹிந்த சமரசிங்க கலந்துகொள்கின்றார்.



# கைகளை காதுகளை அழகாக்குங்கள்

அழகான கைகளும், நகங்களும் பார்ப்பவர்களை கவரக்கூடியவை. பொதுவாக பெண்கள் முகத்துக்கு காட்டும் அக்கறையை கைகளுக்கு காட்டுவதில்லை. முகத்தில் ஏற்படும் சுருக்கங்கள் வயதைக்காட்டினாலும் கைகளில் ஏற்படும் சுருக்கங்கள் அதை அதிகப்படுத்திக் காட்டுவதுடன் தராதரத்தையும் குறைத்துக் காட்டும்.





★ பாத்திரம் தேய்க்கும் போதும், துணி துவைக்கும் போதும் தண்ணீர், சோப்பால் கைகள் சொரசொரப்பாக மாறிவிடும். கைகளுக்கு அடிக்கடி ஒயில் பொட்ரோலியம் ஜெல்லியை தடவிக்கொள்ளுங்கள். கைகள் வறண்டு போகாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

★ நகத்தால் பாட்டில் திறப்பது, நகத்தை கடிப்பது போன்றவை செய்யாதீர்கள். நகங்களை ஒரே சீராக ஓவல் வடிவில் வெட்டுங்கள்.

★ சல்வாருடன் எடுப்பாக மெல்லிய கண்ணாடி வளையல்கள் (ஆறு அல்லது எட்டு) சிறு கற்கள் கொண்ட நெளிமோதிரம் அழகு சேர்க்கும்.

★ குண்டான கைகளுக்கு மெல்லிய வளையல்கள், மெல்லிய ப்ரேஸ், மெல்லிய ஸ்டிராப் வைத்த வாட்சுகள் மிகவும் அழகாக இருக்கும்.

★ கலர் கலர் கலராய் ஆடைகள், வண்ண வண்ண வளையல்கள் என உலா வரும் பெண்களே வளையல்கள் அணியும் போது அதற்கென சில முறைகள் உண்டு. அது தவறும்போது அழகை அது குறைத்து விடவும் கூடும்.

★ சில பெண்கள் அழகான உடை உடுத்தி இருப்பார்கள். அருகில் இருப்பவர்களுக்குத் தான் தெரியும் அவர்களின் காதுகள் சுத்தமில்லாமல் இருப்பது. தினமும் காதுகளை அழுத்த தேய்த்து சுத்தப்படுத்துங்கள். காது அமைப்பில் வித்தியாசம் இருக்கலாம். அதை காதணிகள், மேக்கப்பினால் சரி செய்து கொள்ளலாம்.

★ நீளக் காது என்றால் ஃபவுண்டேஷன் போட்டு சிறிதாக காட்டலாம். வித விதமான காதணிகளால் அலங்கரிக்கலாம்.

★ காதின் கீழ் விளிம்பு அகலமாக இருந்தால் பட்டையாக நிறைய கல் வைத்த பேசரி தோடுகளை போட்டுக்கொள்ளுங்கள்.

★ சின்ன காது என்றால் காது மடல்களில் 2, 3 துளை போட்டு சின்னச் சின்ன வளையங்களை மாட்டி,காது விளிம்பில் கல் பதித்த சரம் போன்ற அல்லது தொங்கட்டான் போடலாம்.

★ குண்டு முகத்துக்கு தொங்கட்டான் வேண்டாம். காதோடு ஒட்டின டிஷைன் தோடு எடுப்பாக இருக்கும்.

★ கழுத்தில் மெலிதான செயின் என்றால் காதணியை சற்று பெரிதாக அணிந்து கொள்ளுங்கள். காதோரம் குட்டித் தோடுகள் அழகாக இருக்கும்.

★ அகலமான முகம் உள்ளவர்கள் நீள் தொங்கட்டான்கள், ஒன்றின் கீழ் ஒன்று வரும் குடை ஜிமிக்கிகள், பெரிய வளையங்கள் போடலாம். கழுத்து நீளம் குறைவென்றால் காதணி நீளத்தை குறைக்கலாம்.

★ காது மடல்களில் அணியும் தோடுகள், குட்டி தொங்கட்டான்கள், வளையங்கள் முக அழகை கூட்டும்.

★ விழாக்களுக்குச் செல்லும் போது அகலமான மாட்டல், கல் வைத்த குண்டு ஜிமிக்கி, பட்டை நெக்லஸ் போட்டுக்கொள்ளலாம்.

# மரக்கறி நூடில்ஸ்





**தேவையான பொருட்கள்**

நூடில்ஸ் - 2 பாக்கெட் (4 பேருக்குத் தேவையான அளவு)
தக்காளி - 2
பச்சை மிளகாய் - 2
உப்பு - ஒரு சிட்டிகை
(நூடில்ஸில் உப்பு இருக்கும். நாம் சேர்க்கும் காய்க்கு மட்டும் தேவையான உப்பு எடுத்துக் கொள்ளவும்).
எண்ணெய் - தேக்கரண்டி அளவு
தாளிக்க சிறிது கடுகு, கறிவேப்பிலை.

**செய்முறை**

காய்களை சிறியதாக நறுக்கி ஒரு கப்பில் எடுத்துக் கொள்ளவும். வெங்காயம், பச்சைமிளகாய், தக்காளியைப் போட்டு வதக்கவும். சுருள வதங்கிய பின் காய்களைப் உப்பு, நூடில்ஸ் மசாலாத் தூள் போட்டுக் கிண்டி லேசாக நீர் தெளித்து சற்று வேகவிடவும்.

காய் வெந்தவுடன் மூன்று டம்ளர் தண்ணீர் விட்டுக் கொதிக்கவிடவும். தண்ணீர் கொதிக்கும் போது நூடில்ஸை நன்கு நொறுக்கி அதில் போடவும். (தனி நூடில்ஸ் என்றால் நான்காக உடைத்துப் போடலாம்).

காயுடன் சேர்ந்து வேக நொறுக்கிப் போடுவது நல்லது. 80 வீதம் நூடில்ஸ் வெந்தவுடன் கிளறிவிட்டு மூடி வைத்து அடுப்பை அணைத்து விடவும்.


10 நிமிடம் கழித்து மூடியைத் திறந்தால் நீர் சுண்டி வெதும்பி வந்திருக்கும். அடியோடு சேர்த்து நன்கு கிண்டி பரிமாறவும்.

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
"யாழ் ஓசை" வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்



# நீண்ட கல்விப் பாரம்பரியத்துடன் இயங்கும் தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

தாவடிப் பகுதியில் இந்துப் பாரம்பரிய விழுமியங்களுடன் கல்வி அறிவைப் போதிக்கும் கல்விக் கூடமாகத் திகழ்வது யாழ். தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையாகும்.



அதிபர்
என். சிவநேசன்

வலிகாமம் கல்வி வலயத்தில் உடுவில் கோட்டக் கல்விப் பிரிவிலுள்ள வகை - 2 பாடசாலையான இப்பாடசாலை இற்றைக்கு 135 வருடங்களுக்கு முன்பு திண்ணைப் பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அப்பாச்சிப் பிள்ளை மகள் செல்லாச்சி கல்வி கற்பதற்காக 1875 - 1880 இக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதாக அறியமுடிகின்றது. பின்னர் 1902 ஆம் ஆண்டில் சண்முக முதலியார் செல்லப்பாவினால் கொட்டில் பாடசாலையாக அமைக்கப்பட்டது. தொடர்ந்து 1910 இல் சிங்கப்பூர் சின்னையாவின் நிதிப் பங்களிப்புடன் சிறிய கட்டடம் அமைக்கப்பட்டு கல்விச் சேவையைச் செய்து வந்தது.

சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் இருந்த இப்பாடசாலையினை 1961 இல் அரசு பொறுப்பேற்றுக் கொண்டது. ஆரம்பத்தில் இப்பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் பலரின் பங்களிப்புக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இக் கல்விக் கூடத்தின் ஆரம்பப் பிரிவு தாவடி - சுதுமலை வீதியிலும் இரண்டாமிடம் பிரிவு தாவடி தேவ விநாயகர் ஆலய வீதியிலும் இரு இடங்களில் இயங்கி வருகின்றது.

இப்பாடசாலையில் பல அதிபர்கள் கடமையாற்றியுள்ள போதிலும் அனைவரின் பெயர் விபரங்களைப் பெறமுடியவில்லை. சின்னத்தம்பி, எஸ். வேலுப்பிள்ளை, கே. இராஜசிங்கம், எஸ். பசுபதிப்பிள்ளை, திருமதி எஸ். இராசலட்சுமி, அனுவை நாகராசா, திருமதி ச. சிவராஜா, த. திருநாவுக்கரசு, சு. சிவசுப்பிரமணியம், செ. செல்வராசா மற்றும் சு. சண்முககுலகுமாரன் ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளார்கள்.

பாடசாலையின் வளர்ச்சிக்கு அதிபர்களின் திறமையான செயற்பாடுகள் காத்திரமானதாக இருந்து வந்துள்ளன.

'நற்பண்புகளைக் கொண்ட உயர்ந்த சமுதாயத்தை உருவாக்குவோம்' என்ற தூரநோக்குடனும் 'சிறந்த கல்வி ஊடாக நற்பண்புகள், சமய ஒழுக்கங்கள், விழுமியங்கள், பொருளாதார மேம்பாடு என்பவற்றை உயர்த்துவதன் மூலம் உயர்ந்த சமுதாயத்தை உருவாக்க நாம் எல்லோரும் பங்காற்றுவோம்' என்ற பணிக் கூற்றை தாரக மந்திரமாகக் கொண்டு இப்பாடசாலை இயங்கி வருகின்றது. தற்போது அதிபராக என். சிவநேசன் கடமையாற்றி வருகின்றார். 296 மாணவர்கள் கல்வி கற்க 14 ஆசிரியர்கள் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டு



வருகின்றார்கள். தரம் ஒன்று முதல் தரம் 11 வரையும் வகுப்புக்கள் இடம் பெற்று வருகின்றன. இங்கு கல்வி கற்கும் மாணவர்களின் கல்வித் தரத்தினை அதிகரிப்பதற்காக அதிபர் மற்றும் ஆசிரியர்கள் மிக அர்ப்பணிப்புடன் கடமையாற்றி வருகின்றார்கள்.

மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிப்படுத்துவதற்கு களம் அமைத்துக் கொடுக்கும் முகமாக பல மன்றங்கள் செயற்படுகின்றன. அவற்றுள் இந்து மன்றம், தமிழ் மன்றம், கணித விஞ்ஞான மன்றம், ஆங்கில மன்றம், வர்த்தக மன்றம், அனர்த்த முகாமைத்துவ மன்றம், சுகாதார மன்றம், கவின் கலை மன்றம் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மன்றம் என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

மாணவர்கள் கல்வி மற்றும் இணைப்பாட விதமான செயற்பாடுகளில் சிறந்து விளங்கித் தமது திறமைகளை கோட்ட, வலய மற்றும் மாகாண மட்டங்களில் வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

இப்பாடசாலை மாணவர்களில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் வருடாந்தம் குறிப்பிட்ட தொகை மாணவர்கள் சித்தியடைந்து வருகின்றார்கள். 2009 ஆம் ஆண்டில் 15 மாணவர்களும் 2010 ஆம் ஆண்டில் 11 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 2009 ஆம் ஆண்டு இரண்டு மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன் 2011 ஆம் ஆண்டு நூறு புள்ளிக்கு மேல் 12 மாணவர்கள் பெற்றுள்ளார்கள்.

இப்பாடசாலை மாணவர்கள் மூன்று பேர் இவ்வருடம் மாகாண மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் பங்குபற்றியுள்ளார்கள். வலய மட்ட விளையாட்டுப் போட்டியில் 13 வயதுப் பிரிவு உயரம் பாய்தல் மற்றும் 100 மீற்றர் ஓட்டத்தில் எஸ். திவ்யராம் என்ற மாணவன் இரண்டாமிடத்தினைப் பெற்றுள்ளார்.

இப்பாடசாலைக்குப் பலரும் பல விதத்தில் உதவி வருகின்றார்கள். மிக அண்மையில் பாடசாலைக்கு மின்சார மணி ஒன்றினை பழைய மாணவன் அ. மயூரன் வழங்கியுள்ளார். அத்துடன் இவ்வருடம் பாடசாலையின் நலன் விரும்பிகள் பலரின் உதவியுடன் மேற்கத்தேய வாத்தியக் கருவிகள் பெறப்பட்டுள்ளன.

மேற்கத்தேய வாத்தியக் குழு அமைக்கும்பணியும் மாணவர்களுக்கான இசைக்கருவி பயிற்சியும் தற்போது இடம்பெற்று வருகின்றது.

இருப்பினும் இப்பாடசாலையில் தற்போது பல்வேறு தேவைகள் காணப்படுகின்றன. மாணவர்களின் விளையாட்டுத்திறமைகளை வளர்ப்பதற்கும் திறமைகளை வெளிக் கொண்டு வருவதற்கும் ஏதுவாக உடற் கல்வி ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்படவேண்டியுள்ளது. நவீன விளையாட்டு உபகரணங்களும் தேவையாகவுள்ளது. பயிற்சி பெறுவதற்கு ஏற்ற விளையாட்டு மைதானம் ஒன்றின் தேவையும் காணப்படுகின்றது.

மனையியல் அறை, விவசாய கூடம் என்பன அமைக்கப்படவேண்டியுள்ளது. மாணவர்களுக்கு கணினிக் கல்வியினைப் போதிப்பதற்கு ஏற்ற போதிய கணினிகள் தேவையாகவுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவிக்கின்றார்.

தேவைகள் நிறைவேற்றப்படும் பட்சத்தில் இப்பாடசாலையும் யாழ். மாவட்டத்தில் சிறந்தபாடசாலையாகத் திகழும் என்பது திண்ணம்.

நாட்டில் தலைசிறந்து விளங்கும் பல கல்விமான்களை உருவாக்கிய இப்பாடசாலையினை மேலும் வளர்ப்பதற்கு ஏதுவாக தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும் என்பது பாடசாலை சமூகத்தின் எதிர்பார்ப்பாகும்.

● [illegible]

# மாணவர் மலர்

## பழமொழியும் கருத்தும்

1. **ஆழம் அறியாமல் காலை விடாதே.**
   எந்த ஒரு காரியத்திலும் ஆராயாமல் இறங்கக் கூடாது.
2. **ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்.**
   கோபம் நல்ல சிந்தனையைத் தடுக்கும்.
3. **போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து**
   இருப்பதைக் கொண்டு திருப்தியடைய வேண்டும்.
4. **தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும்**
   சிறுவயதில் பழகுகின்ற பழக்கங்கள் கடைசிவரை நிலைத்து நிற்கும்.
5. **ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?**
   சிறுவயதில் திருத்த முடியாதவற்றை வளர்ந்த பின்னர் திருத்த முடியாது.
6. **புலி பசித்தாலும் புல்லுத் தின்னாது.**
   சிலர் வறுமையடைந்தாலும் பொருத்தமற்ற காரியங்களைச் செய்யமாட்டார்கள்.
7. **அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.**
   எந்த விடயத்திலும் அளவோடு நடந்து கொள்ளாவிட்டால் அது பாதகமாகிவிடும்.
8. **நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.**
   ஒருவர் தனது வாழ்க்கையில் சுகதேகியாக இருப்பதுதான் நிறைந்த செல்வமாகக் கருதப்படுகின்றது.
9. **மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.**
   அனுபவம் முதிர்ந்தவர்கள் கூறும் புத்திமதிகள் எப்போதும் நல்லனவாகவே அமையும்.
10. **ஆறின கஞ்சி பழங்கஞ்சி.**
    எதையும் உரிய வேளையில் செய்யாவிட்டால் அதனால் ஏற்படவுள்ள பயன் குறைந்து. விடும்.

## குரு பக்தி



துறவியான ஆதிசங்கரர் காசி மாநகரில் மணிதர்ணிதை என்ற இடத்தில் தங்கியிருந்தார். சீடர்கள் அவரிடம் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தனர். அவர்களில் சனந்தனர் என்பவர் குரு பக்தியில் மற்றவர்களை மிஞ்சியவராக இருந்தார். ஆதிசங்கரரும் அவரிடம் அதிக அன்பு காட்டினார். இதனால் மற்ற சீடர்கள் சனந்தனர் மீது பொறாமை கொண்டனர்.

இதை அறிந்த ஆதிசங்கரர் மற்ற சீடர்கள் சனந்தனரின் பெருமையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நினைத்தார். வழக்கம் போல கங்கைக் கரையில் அவர் சீடர்களுக்குப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். கங்கை ஆற்றில் தண்ணீர் கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தது.

சனந்தனரைப் பார்த்து அவர் 'சனந்தனர் கங்கை ஆற்றில் நடந்து அக்கரை சென்று திரும்பி வா' என்றார். இதைக் கேட்ட சனந்தனர் தண்ணீரின் மேல் தன்னால் நடக்க இயலுமா என்று சிந்திக்கவில்லை. குருவின் கட்டளையை உடனே நிறவேற்றத் துணிந்தார்.

'குருவின் திருவடிகளே துணை' என்றபடி கங்கை ஆற்றில் நடக்கத் தொடங்கினார். என்ன வியப்பு. தரையில் நடப்பது போன்றே தண்ணீரின் மேல் நடந்தார். தண்ணீரில் மூழ்கவில்லை. அக்கரை சென்று திரும்பிய அவர் ஆதிசங்கரரைப் பணிவாக வணங்கினார். இந்த அதிசயத்தைப் பார்த்து எல்லாச் சீடர்களும் வியப்படைந்தனர்.

சனந்தனரைப் பார்த்து ஆதிசங்கரர் 'உன்னை ஆற்றில் நடந்து செல் என்றேன். அது உன்னால் இயலுமா என்று நீ சிறிதும் சிந்திக்கவில்லை. உன்னால் எப்படி தண்ணீரின் மேல் நடக்க முடிந்தது?' என்று கேட்டார்.

'குருவே! தங்கள் அருள் இருந்தால் எதுதான் இயலாது?. குருவின் திருவடிகளே துணை என்று தங்களை வேண்டியபடியே சென்றேன். இயலுமா, இயலாதா என்பதைப் பற்றி நான் சிந்திக்கவே இல்லை' என்று பணிவுடன் சொன்னார்.

'சனந்தனா! கங்கை ஆற்றைப் பார்!' என்றார் அவர். எல்லோரும் ஆற்றைப் பார்த்தனர். அங்கே சனந்தனர் கால் வைத்த இடங்களில எல்லாம் தாமரை மலர்கள் தோன்றி இருந்தன. அவைதான் அவர் தண்ணீரில் மூழ்காமல் தாங்கின என்பது அவர்களுக்குப் புரிந்தது.

'சனந்தனா! குரு பக்தியின் பெருமையை நீ உலகுக்கு உணர்த்தி விட்டாய். நீ கால் வைத்த இடங்களில் எல்லாம் தாமரை மலர்கள் தோன்றின. அதனால் இன்று முதல் நீ பத்மபாதன் என்ற பெயர் பெறுவாய்' என்று வாழ்த்தினார்.

## நான் ரசித்த கன்னியா வெந்நீர் ஊற்று

திருகோணமலையில் இருக்கும் கன்னியாவில் ஏழு வெந்நீர் கிணறுகள் உண்டு. அக் கிணறுகள் ஒவ்வொன்றிலும் சூடு அதிக சூடு, குளிர் அதிக குளிர் என வெவ்வேறு வித்தியமாக இருக்கும். உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இதனை வந்து பார்வையிடுகின்றனர். இக்கிணறுகள் இயற்கையாகவே அமைந்துள் என.

பாடசாலை விடுமுறைக் காலத்தில் நானும் தந்தையும் அங்கு சென்று குளித்தோம்.

இந்துக்களின் புனித தீர்த்தமாகக் கூறப்படும் இவ் வெந்நீர் கிணறில் குளித்தது எனக்கு மிகவும் சந்தோஷமாக உள்ளது.

*த. இலக்கியன்*
*யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.*



சிறுமி மறுபக்கம் செல்வதற்கு வழிகாட்டி உதவுங்கள் பிள்ளைகளே...

## எமக்கும் உரிமையுண்டு



கே.எஸ். சிவஞானராஜா
யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியர் வித்தியாலயம்.

சிறுவர்களே! உங்களது ஆக்கங்களை எமக்கு அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**

'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக் காரியாலயம்.
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# தலிபான் தீவிரவாதிகளுக்கு பயிற்சியளிக்கும் பாகிஸ்தான்



பாகிஸ்தான் பல முறை மறுத்து வந்த போதிலும், ஆப்கானிஸ்தான் எல்லையில் தலிபான் தீவிரவாதிகளுக்கு முகாம் அமைத்து பயிற்சியளித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த பயிற்சியை பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ., நடத்தி வருகிறது.

குண்டு தயாரிப்பது குறித்து பயிற்சியளிக்கப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது குறித்து தலிபான் பயங்கரவாத அமைப்பின் ஒருவர் கூறுகையில், பயற்சி முகாம் நடத்தி வருபவர்களில் ஐ.எஸ்.ஐ. ,அமைப்பை சேர்ந்தவர்களும் உள்ளனர். அவர்கள் முதலில் குண்டு தயாரிப்பது பற்றி கற்றுத்தருகின்றனர். பின்னர் செயல்முறை பயிற்சியளிக்கின்றனர். இந்தபயற்சியின் போது ஐ.எஸ்.ஐ., அமைப்பின் அதிகாரிகள் உடன் உள்ளனர். தலிபான் அமைப்பு ஐ.எஸ்.ஐ., உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது என்றார்.

# சவூதியின் புதிய இளவரசராக உள்துறை அமைச்சர்

சவூதியின் புதிய இளவரசராக அந்நாட்டு உள்துறை அமைச்சர் நியமிக்கப்பட்வுள்ளார். சவூதி மன்னராக அப்துல்லா உள்ள நிலையில் உடல்நலக்குறைவு காரணமாக சவூதி அரேபியா நாட்டின் இளவரசராக இருந்த சுல்தான் கடந்த வாரம் காலமானார். இதைத்தொடர்ந்து புதிய இளவரசரை தேர்வு செய்யும் பணி நடந்து வருகிறது. தற்போது உள்துறை அமைச்சராக உள்ள நையீப் என்பவர் புதிய இளவரசராக தேர்வு செய்யப்படலாம் எனவும், அதற்கான முறையான ஒப்புதலை அரண்மனை நிர்வாகம் இன்னும் சில நாட்களில் அறிவிக்கப்படலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# இன்னும் சில தினங்களில் 700 கோடியை எட்டவுள்ள உலக சனத்தொகை

உலகின் மொத்த சனத்தொகை இன்னும் சில தினங்களில் 700 கோடியை எட்டவுள்ளது. இந்தக் கணக்கெடுப்பு, ஐ.நா.வின் கணிப்புகளை அடிப்படையாகக் கொண்டதாகும். எதிர்வரும் 31 ஆம் திகதி உலகின் 700 கோடியாவது குழந்தை பிறக்கவிருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.

உலக சனத்தொகை கடந்த 25 ஆண்டுகளுக்குள் 200 கோடி அதிகரித்திருப்பது இங்கே கவனத்துக்குரியது. வளரும் மற்றும் ஏழை நாடுகளில் தான் மக்கள் தொகை அதிகரிப்பு காணப்படுகிறது. இந்த உயர்வு காரணமாக, உலகில் வளப் பற்றாக்குறை மிகுதியாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த அதீத மக்கள் தொகை பெருக்கத்தை இந்த உலகம் எவ்வளவு காலத்துக்கு தாங்கும் என்பதே சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த கேள்வியாகிறது.

கடந்த 60 ஆண்டுகளில், உலகின் கருத்தரிப்பு விகிதம் பாதியாக குறைந்துள்ளது. ஆனால், இன்றும் ஒவ்வோர் ஆண்டும் 7 கோடியே 80 லட்சம் குழந்தைகள் பிறக்கின்றன. இதில் வளரும் நாடுகளின் பங்கு தான் மிக அதிகம்.

ஏழை மற்றும் வளரும் நாடுகளில் வறுமை, கல்வியறிவின்மை மற்றும் விழிப்புணர்வுகள் இல்லாமை போன்ற காரணங்களால் பெண்கள் பெருமளவு குழந்தைகளைப் பிரசவிக்கின்றனர். மேலும், அந்தப் பெண்களும், குழந்தைகளும் மோசமான சுகாதாரக் கேடுகளை எதிர்கொள்கின்றனர்.இத்தகைய காரணங்களால், ஏழைப் பெண்களுக்கான கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை ஊக்குவிக்க வேண்டியது அவசியம் என ஐ.நா. வலியுறுத்துகிறது.

அதேவேளையில், உலக வளப் பகிர்வும் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாக ஐ.நா. ஆய்வுகள் கூறுகின்றன. அதாவது, உலகிலுள்ள 20 சதவீத செல்வந்தர்களிடம், உலகின் மொத்த வருமானத்தில் 77 சதவீதம் உள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது. உலக வளத்தை பெருக்குவதுடன், அதனை முறையாக பகிர்வதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதையே இந்தப் புள்ளிவிவரம் வலியுறுத்துகிறது.

# அரசின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பின்தங்கிய பகுதிகளுக்கும் கிடைக்க வேண்டும்

## -பியசேன எம்.பி. தெரிவிப்பு

(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)

அரசின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அம்பாறை மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேச மக்களுக்கு கிடைக்க வேண்டுமென்பதில் நாம் அவதானமாக இருந்து வருகின்றோம். எதிர்காலத்தில் எமது அவா நிறைவேறும் என்பதில் ஐயமில்லை என திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பீ.எச். பியசேன தெரிவித்தார்.

ஹட்ச் நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவை நிலையம் அக்கரைப்பற்றில் திறந்து வைக்கப்பட்டது. அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஹட்ச் நிறுவனத்தின் அம்பாறை மாவட்ட வாடிக்கையாளர் சேவை நிலையம் அக்கரைப்பற்றில் திறந்து வைக்கப்படுவது மகிழ்ச்சியளிக்கின்றது. கொழும்பு போன்ற தூர இடங்களுக்குச் சென்று பெற்று வந்த வசதிகளை மக்கள் தாம் பிறந்த மண்ணிலேயே பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் கிடைத்துள்ளது. அம்பாறை மாவட்டத்திலுள்ள பின் தங்கிய பிரதேசங்களான நாவிதன் வெளி, பாணமை போன்ற பிரதேச மக்களுக்கும் இவ்வாறான சேவை வசதிகள் கிடைக்க வேண்டும். போக்குவரத்து உட்பட பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்க்கை நடத்திவரும் மக்களின் காலடிக்குச் சென்று சேவை வழங்குவது சிறப்பாகும். எதிர்வரும் காலங்களில் இவ்வாறான பிரதேசங்களுக்கு விஸ்தரிப்புப் பணிகளை மேற்கொண்டு உதவ வேண்டும் என்றார்.

# ஜனாதிபதிக்கு மகஜர்

(திருகோணமலை மேலதிக நிருபர்)

மூதூர் மத்திய கல்லூரி, விளையாட்டு மைதானத்தைப் புனரமைத்துத் தருமாறு கோரி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கல்லூரி அதிபரினால் மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 1124 மாணவர்களையும் 66 ஆசிரியர்களையும் கொண்ட இக்கல்லூரியில் மாணவர்களின் விளையாட்டு திறமையை வெளிக்காட்டக்கூடிய மைதானம் சீராக இல்லை. அத்துடன் பாடசாலை விளையாட்டுப் போட்டி மட்டுமல்லாது வலய மட்டப் போட்டிகள், பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகள் உள்ளிட்ட பல பொது நிகழ்வுகளும் இம் மைதானத்திலே இடம் பெறுகின்றன.

குண்டும் குழியுமாக சமமின்றி மைதானம் காணப்படுகின்றன. ஆகவே இம் மைதானத்தைப் புனரமைத்துத் தருவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் எனவும் கூறப்பட்டுள்ளது.

# உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் மீட்பு

பதுளை,

இரு வாரங்களுக்கு முன் மரணமானதாகக் கருதப்படும் ஆணொருவரின் உருக்குலைந்த சடலமொன்றினை கதிர்காமம் பொலிசார் புதன்கிழமை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட சடலத்தின் அருகே கண்டெடுக்கப்பட்ட உடைப்பையிலிருந்து மீட்கப்பட்ட ஆவணமொன்றின் அடிப்படையில் விஜேசிங்கலாகே சேனாரட்ன துனக்க என்பவரின் சடலமென்றும் இவர் சிலாபத்தைச் சேர்ந்தவரென்றும் தெரிய வந்துள்ளது. இந்நபர் சிலாபம் மக்கள் வங்கிக் கிளையில் ஒரு இலட்சம் ரூபா நிதி வைப்பிலிட்டிருப்பதை உறுதிப்படுத்திய வங்கி வைப்பீட்டுப் புத்தகமொன்றும், இவரின் உடைப் பையிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் குறித்து கதிர்காமம் மஜிஸ்ரேட் நீதிபதி உதயசன்ஜீவ ரம்யகுமார ஸ்தல விசாரணைகளை மேற்கொண்டு, பிரேத பரிசோதனைக்காக, கதிர்காமம் அரசினர் மருத்துவமனை பிரேத அறைக்கு அனுப்பவும் உத்தரவிட்டார்.

கதிர்காமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லக்சிரி சந்திமால் மேற்படி மரணம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்.

# தங்க நகைகளை மோசடி செய்த பெண் கைது

பதுளை,

வணக்கஸ்தலமொன்றிலிருந்து தங்க நகைகள் மற்றும் நிதியினைப் பெற்றுத் தருவதாகக் கூறி பெண்ணொருவரிடமிருந்த தங்க நகைகளை மோசடி செய்த பெண்ணொருவரை பதுளைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் மோசடி செய்ததாகக் கூறப்படும் தங்கச் சங்கலி, தங்க மோதிரம் தங்கத் தோடுகள் ஆகியன பதுளை நகரின் தங்க நகைகள் அடகு வைக்கப்படும் நிலைமொன்றிலிருந்து பதுளைப் பொலிசார் மீட்டுள்ளனர்.

மேற்படி கைது செய்யப்பட்ட பெண் 18 வயது நிரம்பியவரென்றும் மாத்தளைப் பகுதியைச் சேர்ந்தவரென்றும் கண்டியின் காப்பகமொன்றிலிருந்து தப்பியோடி வந்தவரென்றும் ஆரம்ப விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக பதுளைப் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அஸ்மாவை மருந்துகள் மூலம் எவ்வாறு தடுக்கலாம்



1. நோயாளியின் கடுமையினை அளவிடல் அஸ்மாவிற்கு உரிய சிகிச்சை சுவாச உறிஞ்சிகள் மூலமான மருந்துகளே ஆகும்.
2. நோயின் தீவிர தன்மையில் ஒன்று காணப்படின் குறித்த வகையில் அடக்கப்பட்ட நிலையில் இடப்படும்.
3. சிறுவர்களின் வயதிற்கு ஏற்ப மருந்தின் தாக்கம் அமையலாம்.

உட் சுவாசம் மூலம் உள்ளெடுக்கும் மருந்து உயர் அமுக்கத்தில் திரவ நிலையில் அல்லது உலர் துகள் மூலம் வழங்கப்படும். இது பல வகையான உபகரணங்கள் மூலம் வழங்கப்படுகின்றது. அவை பிரயோசனமானவை, எளிமையானவை, பாதுகாப்பானவை, ஓரளவு மலியான விலைக்கு வேண்டப்படக்கூடியவை.

**உட்சுவாசம் மூலம் சுவாச உறிஞ்சிகளால் உள்ளெடுக்கும் மருந்துகளின் அனுகூலங்கள்-**

1. மிகச் சிறிய அளவிலான மருந்துகளே தேவை. உரிய விளைவை ஏற்படுத்த வாயினால் உள்ளெடுக்கும் மருந்துகளிலும் பார்க்க
2. மருந்துகள் தொழிற்பட வேண்டிய நுரையீரலின் உள்ளேயே செலுத்தப்படுகின்றன.
3. மருந்துகள் விரைவில் செயற்படும்.
4. மிகவும் குறைந்த பக்க விளைவுகள் மிகக் குறைந்த அளவில் பாவிப்பதனால்

**அஸ்மா நோய் தொடர்பான புனைவுகளையும் தவறான நம்பிக்கைகளையும் தெளிவுபடுத்தல் -**

1. சுவாசம் மூலம் சுவாச உறிஞ்சியினால் சுருக்கும் மருந்துகள் அடியாதலை ஏற்படுத்தும் என்பது உண்மையில்லை.
2. அதிக வலிமையானது அல்ல (அதிக அளவு மருந்தல்ல)
3. அதிகம் விலை கூடியதல்ல.

சராசரி செலவினை குறைக்கின்றது. வைத்திய சாலை அனுமதியைத் தடுக்கின்றது.

4. உபயோகித்தல் சிரமமில்லை. பயிற்சி அளிக்கப்பட்ட பின் இதனை உபயோகித்தல் பிள்ளைகளிற்கோ பெற்றோரிற்கோ சிரமமாக அமைவதில்லை. மேலும் அவர்களுக்கு ஒரு நட்பான பொறிமுறையாக அமைகின்றது.

**நோயாளிக்கு ஏற்ற சுவாச உறிஞ்சிகளைத் தெரிவு செய்தல் வேண்டும்.**

பல்வேறு தெரிவுகள் உள்ளன.

அளவிடப்பட்ட திரவ நிலை சுவாச உறிஞ்சிகள் (MDI), உலர் துகள் சுவாச உறிஞ்சிகள் (DPI) ஆவி நிலை சுவாச உறிஞ்சிகள் (Negulizer).

1. ஆவி நிலை சுவாச உறிஞ்சிகள் (Negulizer) கடுமையான அஸ்மா நிலையிலேயே உபயோகித்தல் வேண்டும். வேறு வழிகளை உபயோகிக்க முடியாத நிலையில் கடுமையான நிலையில்கூட திரவ நிலை மிகவும் பிரயோசனமானது. மலிவானது.
2. 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் திரவ நிலை சுவாச உறிஞ்சியும் குடுவையும் முக மேந்து மூடியும் உபயோகித்தல் வேண்டும்.
3. வளர்ந்த பிள்ளைகளுக்கு திரவ நிலைச் சுவாச உறிஞ்சிகள் அல்லது உலர்துகள் சுவாச உறிஞ்சிகளை உபயோகிக்கலாம்.

அதிக அளவு சுவாச உறிஞ்சி மூலமான ஸ்ரொயிட் தேவைப்படும் போது திரவ நிலை சுவாச உறிஞ்சியினை குடுவை உடன் உபயோகிக்க வேண்டும். இதனால் தொண்டை பகுதியில் ஸ்ரொயிட் படியும் அளவு குறைவாகும்.

**டாக்டர் ஜமுனானந்தா**
MBBS (Jaf) DTCD (Col)



## வைத்தியரிடம் கேளுங்கள்

டாக்டர் ஜமுனானந்தா MBBS (Jaf) DTCD(Col)

*காந்தன், (22 வயது), தெல்லிப்பழை*

**கேள்வி : பாலியல் தொற்றுநோய்களைத் தடுப்பது எப்படி?**

பதில் : பாலியல் நடத்தைகளை மாற்றிக்கொள்ளாமல் இருந்தால் பாலியற் தொற்றுநோய் பரவாதபடி தடுக்க முடியும். பலருடன் பாலுறவு கொள்ளும் ஆண்களும் பெண்களும் பாலியற் தொற்று நோய்கள் ஏற்பட அதிக சாத்தியமுடையவர்களாவர். பாலியற் தொழிலாளருக்கும் அவர்களோடு சம்பந்தப்பட்டவர்களுக்கும் பாலியற் தொற்றுநோய்கள் ஏற்பட அதிக வாய்ப்புண்டு. மேலும் இவர்கள் மற்றையோருக்கு இந்நோய்கள் பரவும் முக்கிய மூலமாகத் தொழிற்படுகின்றனர்.

ஏனைய தொற்றுநோய்களைப் போல பாலியற் தொற்றுநோய்களை நோயாளிக்குச் சிகிச்சையளிப்பதால் மட்டும் கட்டுப்படுத்திவிட முடியாது. அவர்களுடைய பாலுறவுப் பங்காளரையும் அடையாளம் காண் சிகிச்சையளிக்கப்படவேண்டும். தொற்று நடக்கும் தொடர்ச்சியை முறியடித்து பரவலைத்தடுத்தலே இதன் நோக்கமாகும்.

எனவே ஆண், பெண் இருபாலாருக்கும் பின்வருவனவற்றைக் குறித்து விளக்கம் கொடுக்கப்பட வேண்டும்.

ஒருவரோடு மட்டும் பாலுறவு கொள்ளுதல்-

ஒருவரோடொருவர் பரஸ்பர விசுவாசத்துடன் நடந்துகொள்ளுதல், அறிந்த பாலியல் தொழிலாளியுடன் பாலுறவைத் தவிர்த்தல், பாலுறவு கொள்ள முன்னர் சிகிச்சை பெறல், மற்றைய பாலுறவுப் பங்காளரை சிகிச்சை பெற ஊக்குவிப்பதன் மூலம் ஏனையோருக்குப் பரவுதலைத் தடுத்தல்.

*அமலா,(வயது 45) திருநெல்வேலி*

**கேள்வி : மாதவிடாய் நின்று போகும் போது ஏற்படும் மாற்றங்கள் என்ன?**

பதில் : இது ஒரு பெண்ணின் வாழ்க்கையில் இனவிருத்தித் தொழிற்பாடு நின்று போகும் காலமாகும். பூப்படைதலில் ஆரம்பித்த மாதவிடாய் சிறிது சிறிதாகக் குறைந்து நின்று போவதால் மலட்டுத்தன்மை ஏற்படுகின்றது. இது ஏறக்குறைய 45-50 வயதுகளில் நடைபெறுகின்றது. இக்கால கட்டத்தில் ஏற்படும் ஓமோன் மாற்றங்களின் விளைவாக சில உடல் உள வேறுபாடுகள் உணரப்படலாம்.

சில பெண்களுக்கு உடலின் பல பாகங்களில் நீடிக்கும் எரிவுணர்வு, களைப்பு, தலைச்சுற்று, மயக்கம், இதயப் படபடப்பு கைகால்களில் விறைப்பு, பிரச்சினைகளைக் கையாள முடியாத நிலை, எரிச்சல், மனமொன்றிக்க முடியாத நிலை, உணர்வு மாற்றங்கள் வழமையாக அநேக பெண்கள் மேற்கண்ட குணங்குறிகளைத் தாங்களாகவே சமாளித்துக்கொள்வதால் ஏனையோரைத் தொல்லைப்படுத்துவதில்லை.

இவர்களுக்குத் தோலிலும் சீத மென்சவ்வுகளிலும் உலர்வுத் தன்மை உணரப்படுவதுடன் யோனி வழியில் உணரப்படும் உலர்வு காரணமாக பாலுறவு கஷ்டமாகவோ சில வேளைகளில் வேதனையுள்ளதாகவோ இருக்கும். காலப்போக்கில் யோனி மேலணியில் கல இழப்பும் குறைந்து போகும். பாலியல் ஆர்வமும் காணப்படும். எலும்புகளில் ஏற்படும் கல்சியம் இழப்பானது எளிதில் எலும்புகள் உடைந்து போக வழிகோலும்.

மன ஆறுதலும், தேற்றுதலும் இக்கால கட்டத்தில் இவர்களுக்குத் தேவை. ஒழுங்கான உடற்பயிற்சி, போசாக்காண உணவு, நல்ல நிலையில் பேணப்படும் தனிநபர் சுகாதாரம் என்பன மாதவிடாய் நின்று போகும் நிலையிலுள்ள பெண்களுக்கு சிபார்சு செய்யப்படவேண்டும்.

*தம்பையா ,(வயது 65)கொடிகாமம்*

**கேள்வி : எனக்கு சிறுநீர் கழித்தலில் சிரமங்கள் உள்ளது. சிறுநீர் வருவதில் தாமதம் உள்ளது. அடிக்கடி சிறிதளவு சிறுநீரே கழிக்கப்படுகின்றது. இரவில் அடிக்கடி சிறுநீர் வருவது போல் தோன்றுகின்றது. அடி வயிற்றில் வேதனையும் உள்ளது. எனக்கு என்ன வருத்தம் ஏற்பட்டுள்ளது?**

பதில் : உங்களது அறிகுறிகள் உங்களது சிறுநீர்ப் பாதையில் உள்ள முன்னிற்கும் சுரப்பியின் வளர்ச்சியால் ஏற்படுவது. இதற்கு சத்திரசிகிச்சை நிபுணரிடம் காட்டி ஆலோசனை பெறுவது நல்லது.

# படலை இல்லாத சுடலையில் நடக்கின்றது பலதும்



வலிகாமம் மேற்கு, சங்கானைப் பிரதேசத்தில் 'சங்கானை கரைச்சி மயானம்' ஒதுக்குப் புறமான இடத்தில் அமைந்துள்ளது. இங்கு இந்து மற்றும் கிறிஸ்தவர்களுக்கென தகனம், அடக்கம் செய்யப்படும் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் மழை காலங்களில் இறுதிக் கிரியைகளைச் செய்வதற்குச் செல்லும் மக்கள், இம் மயானத்தின் பாதையைப் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தனர்.

*வேல்ட் விஷன் நிறுவனம்* இப்பாதையை புனரமைத்து செப்பனிட்டுக் கொடுத்தது. இதனால் மக்கள் எவ்வித சிரமமுமின்றி தமது தேவைகளை இப்பாதையின் ஊடாக செய்து வருகின்றனர். இதே வேளை மயானக் கிணற்றுக்கு அருகாமையில் அமைந்த வைரவர் ஆலயம் சேதமடைந்திருந்ததை அவதானித்த அகால மரணமடைந்த சங்கானை வெல்வில் முருகமூர்த்தி ஆலய பிரதம குருவின் பிள்ளைகள், இப்பாதையோரம் புதிய வைரவர் கோவிலையும் அமைத்திருந்தனர்.



இது இவ்வாறிருக்க இப்பாதைக்குச் சமாந்தரமாக இப்பாதையுடன் இணையும் வகையில் ஓர் புதிய பாதை வலி. மேற்கு பிரதேச சபையால் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்புதிய பாதையை அமைப்பதற்கு சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தினால் கடந்த 15 வருடங்களுக்கு முன் நடப்பட்டு, வடலியாக இருந்த 50 இற்கும் மேற்பட்ட வடலிகள் தறிக்கப்பட்டதோடு அவை எரித்தும் நாசமாக்கப்பட்டுள்ளன. அவற்றை எரிக்கும் போதும் அருகிலிருந்த மேலும் 25 க்கும் மேற்பட்ட வடலிப் பனைகள் கருகிப் பயன்பெறமுடியாத நிலைக்கு வந்துள்ளன.

இவற்றை ஏன் செய்ய வேண்டும்? ஓர் பாதை *வேல்ட் விஷன்* நிறுவனத்தால் புனரமைக்கப்பட்டுப் பாவனையில் இருக்கின்ற போது புதிய பாதை போடப்பட வேண்டியதன் அவசியம் என்ன? ஏன்? எதற்காக? என பொது மக்கள் விசனத்துடன் கேள்வி எழுப்புகின்றனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிந்த பின் வலி. மேற்கு பிரதேச சபைச் செயலாளர் நிர்வாகத்திலிருந்து சபைத் தவிசாளரின் பொறுப்பிற்கு வந்துள்ளது. இந்நிலையில் புதிதாக அமைக்கப்பட்ட பாதையில் ஓர் வளைவு அமைப்பதற்கு இரும்புக் கம்பியினாலான அத்திவாரம் போடப்பட்டு வளைவு அமைக்கும் முயற்சியில் பிரதேச சபை அண்மையில் ஈடுபட்டுள்ளது.

ஏற்கனவே உள்ள சீரான பாதையை விட்டுப் புதிய பாதை போடவேண்டிய அவசியமென்ன?. யார் இதற்கான பதிலைச் சரியாகக் கூறுவார்கள்?.

இம் மயான வளாகத்துள் ஓர் கொல்களம் (விலங்கறுமனை) பிரதேச சபையால் கட்டப்பட்டு மாடுகள் வெட்டப்படும் வருகின்றது. இதன் போது கழிக்கப்படும் மிருக எச்சங்கள், இம் மயானம் முழுவதும் பரவி இருப்பதோடு துர்நாற்றம் வீசுவதனால் மயானத்திற்குச் செல்வோர் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.



**இம் மயான வளாகத்துள் ஓர் கொல்களம் (விலங்கறுமனை) பிரதேச சபையால் கட்டப்பட்டு மாடுகள் வெட்டப்பட்டும் வருகின்றது. இதன்போது கழிக்கப்படும் மிருக எச்சங்கள், இம் மயானம் முழுவதும் பரவி இருப்பதோடு துர்நாற்றம் வீசுவதனால் மயானத்திற்குச் செல்வோர் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்**

மேலும் இம் மயானத்தில் ஒரு கிணறு இறுதிக் கிரியைகள் செய்யவரும் மக்களின் பாவனைக்காக உள்ளது. இக் கிணற்று நீரை எவருமே பாவனை செய்யமுடியாத நிலை தற்போது காணப்படுகின்றது. கொல்களத்தில் வெட்டப்பட்டு கழிக்கப்படும் மிருக எச்சங்கள் உட்பட, பாசிகள் நிறைந்து கிணறு, மனித பாவனைக்குதவாத நிலையிலுள்ளது.

இதனால், இறுதிக் கிரியைகளின் பின்னர் சமயசார்ந்த 'காடாத்து' போன்ற சடங்குகளைச் செய்வதற்கு அவரவர் வீட்டிலிருந்தே தண்ணீர் கொண்டு செல்கின்றனர்.

பிரதேச சபையினருடன் இது பற்றிக் கேட்டபோது மாதம் இரு முறை இக்கிணறு இறைத்துத் துப்புரவு செய்யப்படுவதாகத் தெரிவிக்கின்றனர். ஆனால் பொதுமக்கள் தமது தண்ணீர் தேவையை இக் கிணற்றின் மூலம் நிறைவேற்ற முடியாமலுள்ளனர். கட்டாக்காலி நாய்கள் மூலம் எடுத்துவரப்படும் மிருக எச்சங்கள் இக் கிணற்றில் மிதப்பதையும் அழுக்கும் சேறுமாகப் பாவனை செய்ய முடியாத நிலையில் உள்ளதையும் யார் கவனிப்பார்கள்.

இவற்றைவிட மயானத்திற்குச் செல்லும் பாதை ஓரம் கொட்டிக் குவிந்து உள்ள குப்பைகள் ஒருபுறம் துர்நாற்றம் வீசி சூழலை மாசுபடுத்துகின்றது.


மயானம் என்பது சிவ பூமியாக இருக்க வேண்டும். அசுத்தமும் அசிங்கமும் நிறைந்த பொட்டல் வெளியாக இருக்கக் கூடாது.

அண்மையில் இம்மயானத்தின் நிலைமைகளை வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் நேரிற் சென்று பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வலி. மேற்கு பிரதேச சபை மக்கள் மயப்படுத்தப்பட்ட பின்பும் ஏன் இவ்வாறு நடைபெறுகின்றது. பிரதேச சபையினரே இதற்கான தங்களின் பதில் என்ன?. நடவடிக்கைகள் என்ன?. பத்திரிகை மூலம் அறியத் தருவீர்களா?. பொது மக்களின் நன்மைகருதி இவற்றைச் சீர் செய்வீர்களா?.

**சந்திரகுமார்**
***சங்கானை***

# சூழலை மாசுபடுத்தும் புகை கக்கி வாகனங்கள்



பொ. ஐங்கரநேசன்

யாழ். குடா நாட்டில் வாகனங்களின் பெருக்கம் அபரிமிதமான முறையில் பெருகி வருகின்றது. சுவட்டு எரிபொருட்களை மூலமாகக் கொண்டியங்கும் இவ்வாகனங்கள் சூழலுக்கு நட்பானவையல்ல. இவை சூழலில் பல பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தி வருகின்றன. யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் இன்று வாகனங்களின் பெருக்கம் என்றுமில்லாதவாறு அதிகரித்து வருகிறது. இவ்வாறு பெருகிவரும் வாகனங்களில் பெரும்பாலானவை தரமற்ற பழைய இயந்திரங்களைக் கொண்டியங்குபவையாகவே உள்ளன. இதன்காரணமாக இவை அதிகமாகக் கக்கும் நச்சுப்புகைகளை சுவாசிக்க முடியாது மக்கள் அவஸ்தைப்படுவதை எம்மால் அவதானிக்க முடிகிறது.

யாழ். குடாநாட்டை அச்சுறுத்திவரும் இவ்வாகனங்கள் பற்றியும் அவற்றால் வெளிவிடப்படும் நச்சுப் புகைகளால் மனிதனுக்கும் சூழலுக்கும் ஏற்படும் விளைவுகள் பற்றி சூழலியலாளரான பொ. ஐங்கரநேசனிடம் வினவிய போது,

புகை கக்கும் வாகனங்கள் பற்றிக் கருத்துக் கூறிய அவர் இலங்கையைப் பொறுத்தவரை கடந்த வருடத்தைக் காட்டிலும் இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதிக் கணிப்பின்படி வாகனங்களின் பெருக்கம் சுமார் 70 சதவீதம் அதிகரித்திருப்பதாகக் கூறினார். இத்தகைய வாகனங்களின் பெருக்கம் காரணமாக யாழ். குடாநாட்டு மக்கள் பல்வேறு போக்குவரத்து நெருக்கடிகள், விபத்துக்களைச் சந்தித்து வருவதுடன் இவற்றில் கணிசமான அளவு வாகனங்கள் பாவனைக்குத் தரம் அற்றவையாகக் காணப்படுவதாகத் தெரிவித்தார். நீண்டதூரப் போக்குவரத்துக்கு வாகனங்களைப் பயன்படுத்தும் நிலை கடந்து இன்று குறுந்தூரப் பாவனைக்குக் கூட மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்தும் போக்கு எம்மவரை ஆட்கொண்டுள்ளதால் துவிச்சக்கர வண்டிப் பாவனை அருகி வருவதாகவும் இன்று எமது யாழ்ப்பாண மக்கள் தமது சமூக அந்தஸ்தை உயர்த்திக் காட்டும் ஓர் சாதனமாக மோட்டார் சைக்கிளைக் கருதுவதால் மோட்டார் சைக்கிள் இல்லாத தனி நபரே இல்லை எனும் அளவில் மோட்டார் சைக்கிள் பாவனை குடாநாட்டு மக்கள் வாழ்க்கையில் பின்னிப்பிணைந்துள்ளது.

இத்தகைய மோட்டார் வாகனங்கள் சுவட்டு எரிபொருளை எரித்து இயங்கும் திறன் வாய்ந்தவை. ஆகையால் இவை வெளிவிடும் புகைகள் காபன் மொனொக்சைட் (carbanmonoxide $Co_2$), நைதரசனொட்சைட் ($No_2$), சல்பர்டைஒக்சைட் ($So_2$), Benzene, Formaldehide போன்ற நச்சுவாயுக்களுடன் உலோகத்துகள்களையும் ஈயத்துணிக்கைகளையும் வெளியில் சேர்க்கின்றன. இத்தகைய கட்புலனாகாத இரசாயனச் சேர்வைகள் சூழலுக்கும் மனிதனுக்கும் பெரும் கேடுவிளைவிக்கக் கூடியன. இதில் காபனோர் ஒக்சைட்டானது ஈமோகுளோபினுடன் மிக நாட்டமாகப் பிணைப்படையக் கூடியதாகும். இதனால் காபொட்சி ஈமோகுளோபின் உருவாகிறது. இதன் விளைவாக ஈமோகுயோபினால் ஒட்சிசனைக் ($O_2$) காவிச் செல்லும் திறன் குறைவடைகிறது. அது மட்டுமன்றி இவ்வாகனப் புகையுடன் வெளியேறும் ஈயமானது மனித உடலிலுள்ள செங்குருதிக் கலங்களைப் பாதித்து குருதிச் சோகையை ஏற்படுத்தும் திறன் வாய்ந்தது. Benzene என்புமச்சையைப் பாதிக்க வல்லது என்றார்.

மேலும் சூழல் குறித்து தமது ஆதங்கத்தினை வெளிப்படுத்தியவர் வளர்ச்சியடைந்த நாடுகள் தனிநபர் மோட்டார் வாகனப் பாவனைகளைக் குறைத்து பொதுப் போக்குவரத்தை ஊக்குவித்து வருவதாகவும் தரமான இயந்திரங்கள் பொருத்தப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்தவே அனுமதிக்கும் அந்நாடுகளில் ஒவ்வொரு வாகனமும் Vehicle emission test எனப்படும் புகை வெளிவிடும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தரச் சான்றிதழ் பெற்ற பின்னரே போக்குவரத்தில் ஈடுபட அனுமதிக்கப்படுகின்றன. எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் இத்தகைய பரிசோதனைகள் இடம்பெறாமையே இவ்வாறு தரக்குறைவான வானங்கள் போக்குவரத்துக்களில் ஈடுபடக் காரணம் என்றார்.

வளிமண்டலத்திலுள்ள இயற்கை வாயுக்களின் வீதத்தை மாற்றும் வாகனங்களின் இச் செயற்பாடு நமது சுற்றுப்புறச் சூழலில் பாரிய சுவாச நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறது. வாகனங்களின் பாவனைத் தரத்தினைக் கருத்திற்கொள்ளாது வெறுமனே வருமானத்தை மட்டும் நோக்காகக் கொண்டு செயற்படும் வாகனச் சாரதிகள் புகை கக்கும் வாகனங்களைச் செலுத்துவதை அவதானிக்க முடிகிறது. யாழ். நகரப்பகுதியில் (Jaffna Metro politant Region) புகை கக்கும் வாகனங்களின் பெருக்கத்தினால் அப்பிராந்தியம் விரைவான சூழல் மாசடைதலுக்குட்பட்டு வருகின்றது. இதனால் அப்பிராந்தியத்தை அண்டி வாழும் மக்கள் பல்வேறு சுவாச நோய்களுக்கும் இருதய நோய்களுக்கும் ஆட்படும் வீதம் கணிசமான அளவு அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் இவ் வாகனங்கள் கக்கும் புகைகள் மனித உடலுக்கு விளைவிக்கும் கேடுகள் பற்றி வைத்திய கலாநிதி லக்ஷ்மனைச் சந்தித்துக் கேட்டபோது,

வாகனங்களால் வெளிவிடப்படும் புகையில் கலந்துள்ள நச்சுவாயுக்களானது நமது சுற்றுப்புறச்சூழலுக்கு குந்தகம் விளைவிப்பதோடு மனித உடலின் முக்கிய உடலுறுப்பான நுரையீரலை நேரடியாகத் தாக்குகின்றன. இவ்வாறு நுரையீரல் தாக்கத்துக்குள்ளாவதால் இது பல்வேறு புற்று நோய் ஏற்படவும் வாய்ப்பளிக்கிறது எனக் கூறினார். அது மட்டுமன்றி நகர மயமாக்கலுக்கு உட்படும் பிரதேசங்களிலும் குறிப்பாக கட்டட நெருக்கடி கூடிய யாழ். நகரப் பகுதியிலும் இவ் வாகனங்கள் வெளிவிடும் நச்சுப் புகைகளின் தாக்கம் அதிகமாக உணரப்படுவதாகவும் ஆரம்பகாலத்தில் பரம்பரையாகக் கடத்தப்பட்டு வந்த ஆஸ்துமா நோய் தற்போது மனித வாழ்வில் இடைப்பட்ட காலப்பகுதியில் ஏற்படுவதற்கும் இவ்வாகனப் புகைகள் வெளியில் கொண்டு சேர்க்கும் தூசி துணிக்கைகளே காரணம் எனத் தெரிவித்தார்.

பாவனைத்தரம் உறுதிப்படுத்தப்படாத பழைய இயந்திரங்களைக் கொண்டியங்கும் வாகனங்களால் சூழலில் விடப்படும் புகைகள் மனித சுவாசத்துக்குரிய தூய வளியின் செறிவைக் குறைத்து வருவதாகக் கூறினார்.

**வாகனங்களின் பாவனைத் தரத்தினைக் கருத்திற்கொள்ளாது வெறுமனே வருமானத்தை மட்டும் நோக்காகக் கொண்டு செயற்படும் வாகனச் சாரதிகள் புகை கக்கும் வாகனங்களைச் செலுத்துவதை அவதானிக்க முடிகிறது**

சுற்றுப்புறச் சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத வகையில் தனது போக்கை மாற்றிக் கொள்ள வேண்டியது எமது கடமையாகும்.

எனவே பாவனைத் தரம் அற்ற பழைய வாகனங்களின் பாவனையைப் புறமொதுக்கி சூழலை அதிகளவு மாசுபடுத்தாத பாவனைத்தரம் உறுதிப்படுத்தப்பட்ட இயந்திரங்களைக் கொண்டியங்கும் வாகனங்களைத் தேவைக்கேற்ப பயன்படுத்த யாழ். குடாநாட்டு மக்கள் அனைவரும் முன்வரவேண்டும். அவ்வாறின்றி சூழலுக்குப் பங்கம் விளைவிக்கும் தரமற்ற வாகனங்களைப் போக்குவரத்தில் ஈடுபடுத்துபவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட வேண்டும். இனிவருங் காலங்களில் குடாநாட்டிலும் வாகனங்களை புகை வெளியிடும் பரிசோதனைக்கு (Vehicle Emission test) உட்படுத்தி தரச் சான்றிதழ் வழங்க அது சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வரவேண்டும் என்பதே யாழ். குடா நாட்டு மக்களின் பெருவிருப்பமாகும்.

தீரன்

# சிங்களம் கற்போம்

**கணவா** - சாப்பிடுகிறேன்
**கேவா** - சாப்பிட்டேன்
**மம** - நான்
**பத்** - சோறு
**எக்க** - உடன்
**மல்லி** - தம்பி
**பள்ளா** - நாய்
**புரனவா** - குரைக்கிறது
**பிருவா** - குரைத்தது
**மினிஹாட** - மனிதனுக்கு
**செல்லம் கரனவா** - விளையாடுகிறது

## கெட்டி வாக்கிய சிறிய வசனங்கள்

**மம கணவா**
நான் சாப்பிடுகிறேன்

**மம கேவா**
நான் சாப்பிட்டேன்

**மம பத் கணவா**
நான் சோறு சாப்பிடுகிறேன்

**மம பரிப்பு எக்க பத் கேவா**
நான் பருப்புடன் சோறு சாப்பிட்டேன்

**லமயா செல்லம் கரணவா**
பிள்ளை விளையாடுகிறது

**லமயா செல்லம் கரா**
பிள்ளை விளையாடியது

**லமயா கிரிக்கட் செல்லம் கரணவா**
பிள்ளை கிரிக்கட் விளையாடுகிறது

**லமயா கிரிக்கெட் செல்லம் கரா**
பிள்ளை கிரிக்கெட் விளையாடியது

**லமயா மல்லி எக்க கிரிக்கெட் செல்லம் கரணவா**
பிள்ளை தம்பியோடு கிரிக்கெட் விளையாடுகிறான்

**லமயா மல்லி எக்க கிரிக்கெட் செல்லம் கரா**
பிள்ளை தம்யோடு கிரிக்கெட் விளையாடியது

**பள்ளா புரனவ**
நாய் குரைக்கிறது

**பள்ளா (B) பிருவா**
நாய் குரைத்தது

**பள்ளா மினியாட்ட பிருவா**
நாய் மனிதனைப் பார்த்து குரைத்தது

**பள்ளா ஹொறாட்ட பிருவா**
நாய் கள்வனைப் பார்த்து குரைத்தது

## பொன்மொழிகள்

தரையோடு தரையாக நசுக்கப்பட்டாலும் சத்தியம் மறுபடியும் எழுந்து நின்றுவிடும். ஆண்டவனுடைய முடிவில்லாத நாட்கள் அதற்கும் உண்டு. - பிரையண்ட்

எதைக் கண்டு ஒரு மனிதனுக்கு சிரிப்பு வருகிறதென்று கவனி. அவன் எப்படிப் பட்டவனென்று மிக நன்றாகத் தெரிந்து கொண்டு விடலாம். -கெதே

அறிவு என்பது நம்முடைய ஒரு பகுதியாக இருக்கிறது. ஆனால், இதயம் நம்முடைய ஒவ்வொரு பகுதியாக இருக்கிறது. -ரிரேஸ்

சட்டம் ஒரு சிலந்திக்கூடு. வண்டுகள் அதை அறுத்துக்கொண்டு அப்பால் போகின்றன. ஆனால், பூச்சிகள் அதில் சிக்கிக்கொள்கின்றன.- செக்கோஸ்லோவேகியா

செய்யத் தெரிந்தவன் சாதிக்கிறான். செய்யத் தெரியாதவன் போதிக்கிறான். - கர்னல் கீல்

தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயங்காதே. தோல்வியிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது. - லெனின்

வாழ்க்கை என்கிற ஆடையில் நன்மை, தீமை என்ற இரு நூல்களும் இருக்கும். - ஷேக்ஸ்பியர்

அவரவர் விதி அவரவர் கையிலேயே இருக்கிறது. -விவேகானந்தர்

தனக்குத் தெரிந்த விஷயங்களை மட்டுமே மனிதன் பேச ஆரம்பித்தால் உலகில் பூரண அமைதி ஏற்படும். - பெர்னாட்ஷா

அன்பு என்பது கண்ணுக்குத் தெரியாத நீரூற்று. அது எப்போது எப்படி தோன்றுகிறது என்பதை நாம் அறிய முடியாது.

நமக்கு கற்றுக்கொடுக்கப்பட்ட அனைத்தையும் நாம் மறந்துபோன பின், எஞ்சி நிற்பதற்குப் பெயர்தான் கல்வி.

ஒரு பெண்ணின் வயதை மறந்துவிட்டு, அவள் பிறந்தநாளை மட்டும் நினைவில் வைத்திருப்பவனே புத்திசாலி.

## பொது அறிவுப் போட்டி 11

1. லிபியாவின் தலை நகரம் எது?
2. சதாம் ஹுசைன் எந்த நாட்டின் அதிபராக இருந்தார்?
3. பின்லேடன் தலைமை தாங்கிய அமைப்பு எது?
4. பராக் ஒபாமா அமெரிக்காவின் எத்தனையாவது ஜனாதிபதி?
5. சர்ச்சைகளில் அடிக்கடி சிக்கும் இத்தாலியப் பிரதமரின் பெயர் என்ன?
6. தமிழில் பௌத்த மதம் பற்றிக் கூறும் இதிகாச சொல் எது?
7. இந்தியா சுதந்திரம் பெற்ற ஆண்டு?
8. வானொலியைக் கண்டு பிடித்தவர் யார்?
9. இந்தோனேஷியாவின் தலை நகரம் எது?
10. இலவச கல்வித்திட்டத்தை இலங்கையில் அறிமுகம் செய்தவர்?

செ. கார்த்திகா
நீர்வேலி மத்தி, நீர்வேலி
யாழ்ப்பாணம்.

### பொது அறிவுப்போட்டி -09 விடைகள்

1. நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயம் நாகவிகாரை
2. திலகரட்ண டில்சான்
3. மும்பை இந்தியன்ஸ்
4. 7 ஆம் இடம்
5. றஞ்சன் மத்தாய்
6. ஸ்டீவ் ஜோப்ஸ்
7. விஜயகாந்த்
8. ஜனாதிபதி ஹமீத் கர்சாய்
9. 1696 ஆம் ஆண்டு
10. லியனாடோ டாவின்சி

சரியான விடைகளை எழுதி அனுப்பும் முதலாவது அதிஷ்ட சாலிக்கு மூன்று மாதத்துக்கான 'யாழ் ஓசை' வாரஇதழ் இலவசமாக வழங்கப்படும். சரியான விடைகள் அடுத்த வார யாழ் ஓசையில் பிரசுரிக்கப்படும். உங்கள் விடைகளை தபால் அட்டையில் எழுதி எதிர்வரும் 03ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.

வீரகேசரி/யாழ் ஓசை காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# பிடிவாதப் போக்கினால்

## முடங்கியுள்ள பல்கலைக்கழக கல்வி

ஓய்ந்து போகுமென எதிர்பார்க்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம், அடுத்த கட்டத்தை நோக்கி நகரத் தொடங்கியுள்ளது. கடந்த காலங்களைப் போல ஒப்புக்கு இம்முறையும் யாழ். மாவட்ட இராணுவத் தலைமை உறுதி மொழிகளை வழங்கியுள்ளது. மாணவர்களது பாதுகாப்பிற்கு தாங்கள் பொறுப்பென யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி ஹத்துருசிங்க உறுதியளித்துள்ளார். ஆனால் இப்போலி உறுதி மொழிகளை நம்பிக் கொள்ள இம்முறை மாணவர்கள் தயாராக வில்லை.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் தவபாலசிங்கம் மீதான தாக்குதலைத் தொடர்ந்து, மாணவர்களால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள ஹர்த்தால் போராட்டம் தொடர்கின்றது. விரிவுரைகள் ஏதுமின்றி வகுப்பறைகள் ஓய்ந்து கிடக்கின்றன. வெளிமாவட்ட மாணவர்கள் ஊர் திரும்பி விட்டனர். குறிப்பாக சிங்கள மாணவர்களும் ஊருக்குத் திரும்பிவிட்டார்கள். நிலைமை கட்டுங்கடங்காது சென்று கொண்டிருக்கும் நிலையில் துணைவேந்தர் தலைமையில் பீடாதிபதிகள் யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியைச் சந்தித்து உறுதி மொழி பெற்றுத் திரும்பியுள்ளனர்.

மாணவர்கள் மீது தாக்குதல்களை நடத்துபவர்கள் படையினரே என்ற வகையில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியை சந்தித்து பேசியது நியாயமானதே என்கின்றனர் பல்கலைக்கழக மாணவர்கள். ஆனால் இவ்வாறு பல தடவைகள் வாய் மூல உறுதிமொழிகள் வழங்கப்பட்ட போதும், பின்னர் அவை காற்றில் பறக்கவிடப்பட்டு விடுவதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அதனால் இம்முறை, இனி மேல் தாக்குதல் நடக்காதென்ற எழுத்து மூல உறுதிமொழியை மாணவர்கள் வேண்டி நிற்கின்றனர். ஆனால் மறுபுறத்தே அவ்வாறு கடிதமொன்றை வழங்கினால் இதுவரை தாக்கியவர்கள் படையினரே என்பதை பகிரங்கமாக படைத்தலைமை ஒப்புக்கொண்டதாகிவிடும். அவ்வாறு உறுதி மொழி வழங்கிவிட்டு தாக்குதலை நடத்திவிட்டுத் தமக்கு எதுவுமே தெரியாதென்றாலும் கேட்டுக்கொண்டு செல்வதைத் தவிர மாணவர்களாலும் வேறெதுவும் செய்யமுடியாது.

ஆனாலும் யாழ். பல்கலைக்கழகத்தினில் முன்னின்று செயற்படும் மாணவர்களை முடக்கிவிட படைத்தரப்பு திட்டமிட்டே செயற்பட்டு வருகின்றது. அரச உயர் மட்ட ஆதரவோ, உத்தரவோ இன்றி இவ்வாறான தாக்குதல்கள் நடந்திராதென்பதையும் மறுக்கமுடியாது. தவபாலசிங்கத்தைத் தொடர்ந்து பூநகரியில் மற்றுமொரு பல்கலைக்கழக மாணவன் தாக்கப்பட்டுள்ளான். திட்டமிட்டு படைப்புலனாய்வாளர்களே அவனைத் தாக்கியதாக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். தவபாலசிங்கம் மீதான தாக்குதலைக் கண்டித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் இம்மாணவன் முன்னின்று செயற்பட்டதாகக்கூறப்படுகின்றது.

மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தை படைத்தரப்பு வீடியோ படம் பிடித்துள்ளது. அதனை அடிப்படையாக வைத்து வேட்டையாடலில் ஈடுபடுவதாக மாணவர்கள் தெரிவிக்கின்றார்கள். மாணவ பிரதிநிதிகள் சிலர் காவலரண்களில் அடையாளங் காணப்பட்டு, அச்சுறுத்தப்பட்டமை தொடர்பிலும் செய்திகள் வெளியாகியுள்ளன.

1980 களின் பின்னரான காலப் பகுதிகளில் குறிப்பாக போராட்டம் முனைப்புப் பெற்று வந்த காலப்பகுதிகளிலெல்லாம் மாணவ பிரதிநிதிகள் தாக்கப்படுவதும் படுகொலை செய்யப்படுவதும் வழமையானதொன்றாக உள்ளது. அரச படை, அமைதிப்படையென்பவற்றிற்கு அப்பால் ஆயுதம் தாங்கி மக்களுக்காகப் போராடப் புறப்பட்ட ஆயுதக் குழுக்களும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டே வந்துள்ளன. மாணவ ஒன்றியப் பிரதிநிதிகள் கைது செய்யப்படுவதும் தாக்கப்படுவதும் அதனைத் தொடர்ந்து மாணவர்கள் போராட்டங்களில் குதிப்பதும் தொடர்கதையாகவே உள்ளது.

தற்போதைய சூழலில் பல்கலைக்கழக நிர்வாகம், சுதந்திரமாகச் செயற்பட முடியாதிருப்பதே பெரும்பாலான பிரச்சினைகளுக்கு வழி கோலி வருகின்றது. பல்கலைக்கழக சூழலிலிருந்து அரசிற்கு எதிராக கிளம்பும் எதிர்ப்புக்களை அடக்கி ஒடுக்கிவிட நிர்வாக இயந்திரத்தையே அரசு பயன்படுத்தி வருகின்றது. அவ்வகையில் துணைவேந்தர் நியமனம் மற்றும் மூதவை நியமனமென்பவை முற்றாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மூதவை அரசு ஆதரவுக் கட்சியொன்றின் கூடாரமென பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டியிருந்தார் பேராசிரியர் ரட்ண ஜீவன் கூல், துணைவேந்தர் கதிரைக்கான போட்டியில் இறுதி நேரத்தில் அரசியல் நோக்கங்களிற்காக ஆளுந்தரப்பின் பங்காளி கட்சியால் வெளியேற்றப்பட்டவர். நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் போட்டியிட்டு படுதோல்வியைச் சந்தித்துக் கொண்ட கட்சி ஆதரவாளர்களே மூதவையினுள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு அழுத்தங்களை பிரயோகிப்பதன் மூலம், மாணவர்களது நடவடிக்கைகளை முடக்கலாமென்ற எதிர்பார்ப்பு பிசுபிசுத்துப்போயுள்ளது. குறிப்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் சுதந்திரமாகச் செயற்பட்டு வருவதால் எதிர்பார்ப்புக்கள் பொய்த்துப்போயே உள்ளன. முன்னதாக அரசியல் அழுத்தங்கள் காரணமாக புதிய பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தெரிவை ஏற்று அங்கீகரிக்க பல்கலைக்கழக நிர்வாகம் மறுதலித்து வந்திருந்தது. மாணவர்களால் தெரிவுசெய்யப்பட்ட மாணவர் ஒன்றிய தலைவரைப் பதவியிலிருந்து நீக்குமாறு பேரங்கள் பேசப்பட்டன. அமைச்சர்களைச் சந்திக்க ஆலோசனைகள் கூட வழங்கப்பட்டது. இதற்கெதிராகவும் மாணவர்கள் ஒன்றுதிரண்டு போராட வேண்டியிருந்தது. சுமார் ஒன்பது மாத காலப் பகுதியின் பின்னரே, மாணவர் ஒன்றிய புதிய நிர்வாக தெரிவை பல்கலைக்கழக நிர்வாகம் ஏற்றுக்கொண்டிருந்தது. நிர்வாகத்திற்கோ தமது விசுவாசத்தை வெளிப்படுத்திக்கொள்ளவுமே நேரம், காலம் போதுமானதாகவும் இருந்தது.

பல்கலைக்கழக மாணவ சமூகம் தனது போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு முன்னகர்த்த, சிவில் சமூக அமைப்புக்களது உதவியை நாடியுள்ளது. தேர்தல் காலத்தில் மட்டும் மாணவர்களை நாடிவரும் கூட்டமைப்பினரை நம்ப, இப்போது மாணவர் ஒன்றியம் தயாராகவில்லை. தேசியத்தின் பால் அக்கறை கொண்டுள்ள அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைக்க அவர்கள் முற்பட்டுள்ளனர். புத்திஜீவிகள், மதப் பெரியார்கள், வைத்தியர்கள், தொழிற்சங்கங்கள், ஊடக கூட்டமைப்புக்கள், கல்விச் சமூகத்தைச் சேர்ந்தோரென பெரியதொரு அணியை வெற்றிகரமாக மாணவர்கள் ஒன்று திரட்டியுள்ளனர்.

ஏற்கனவே யுத்தம், நின்றுபோன கல்வியை மீட்டெடுக்க வகுப்பு பகிஷ்கரிப்புப் போராட்டத்தை கைவிடுமாறு சிவில் சமூக அமைப்புக்கள் மாணவர் ஒன்றியத்தைக் கோரியுள்ளன. மாணவர் ஒன்றியத்தையும் உள்ளடக்கி அடுத்த கட்ட நகர்விற்காக அவை செயற்படத் தொடங்கியுள்ளன. வெறுமனே வானத்திலிருந்து எல்லாவற்றையும் அரசியல்வாதிகள் எடுத்து வந்து தரப்போவதில்லையென்பதை அவர்கள் புரிந்து வைத்துக் கொண்டுள்ளார்கள். மாணவர்களுடன் சிவில் சமூக அமைப்புக்கள் இணைந்து கொண்டிருக்கின்றமை முக்கியமான மாற்றத்திற்கு வழிகோலுமென்ற நம்பிக்கையினை பலரிடையேயும் தோற்றுவித்துள்ளது என்பதும் மறுதலிக்கமுடியாததொன்றே.



● பாவலன்

# இசைப்புயலுக்கு 'மக்கள் தெரிவு' விருது

பெல்ஜியம் நாட்டில் நடந்த உலக சவுண்டு டிராக் அகடமி விருதுகள் 2011 நிகழச்சியில் இசைப்புயல் ஏ.ஆர். ரஹ்மானுக்கு 127 அவர்ஸ் படத்திற்காக மக்கள் தெரிவு விருது கிடைத்துள்ளது. இசைப்புயல் ஏ.ஆர். ரஹ்மான் ''ஸ்லம்டாக் மில்லியனர்'' படத்திற்காக இரண்டு ஆஸ்கர் விருதுகள், இரண்டு கிராமி விருதுகள் வாங்கி இந்தியாவுக்கு பெருமை சேர்த்துள்ளார். 127 அவர்ஸ் என்ற ஹாலிவுட் படத்தில் இடம் பெறும் ஒரு பாடலுக்கு சிறப்பான முறையில் ஒரிஜினல் இசையை கம்போஸ் செய்துள்ளமைக்காக ஏ.ஆர். ரஹ்மானின் பெயர் மறுபடியும் ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டது. ஆனால் அவருக்கு ஆஸ்கர் கிடைக்காமல் போனது. இந்நிலையில் பெல்ஜியம் நாட்டில் உலக சவுண்டு டிராக் அகடமி விருதுகள் நிகழ்ச்சியில் '127 அவர்ஸ்' படத்தில் சிறப்பாக இசையமைத்தற்காக ஏ.ஆர். ரஹ்மானுக்கு மக்கள் தெரிவு விருது வழங்கப்பட்டது. '127 அவர்ஸ்' படத்திற்காக எனக்கு மக்கள் தெரிவு விருது கிடைத்ததற்காக எனது ரசிகர்கள் மற்றும் உலக சவுண்டு டிராக் அகடமிக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று ரஹ்மான் பேஸ்புக்கில் தெரிவித்துள்ளார்.



கம்பன் - கழகம்



வினை

## நான் அண்ணியாக நடிக்கிறேனா? - த்ரிஷா மறு...

மகேஷ் பாபுவுக்கு அண்ணியாக ஒரு படத்தில் தான் நடிக்கப்போவதாக வந்த செய்திகளை மறுத்துள்ளார் நடி... த்ரிஷா. மங்காத்தாவுக்குப் பின் த்ரிஷா நடித்து வரும் தெலுங்குப் படம் 'கங்கா'. ஏற்கெனவே பாடிகார்ட் படத்... முடித்துவிட்டார். இந்தப் படங்களுக்குப் பிறகு தெலுங்கில் அவருக்கு வாய்ப்புகளில்லை. தமிழில் விஷாலுக்கு ஜோடியாக 'சமரன்' படத்தில் நடித்து வருகிறார். அதற்குப் பிறகு வேறு படம் இல்லை. இந்த நிலையில் த்ரிஷா தெலுங்கு படமொன்றில் அண்ணி வேடத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்து இருப்பதாக வதந்தி பரவியது. பட வாய்ப்புகள் இல்லாததால் அண்ணி கேரக்டருக்கு இறங்கி வந்துள்ளதாகவும் கூறப்பட்டது. அப்படத்தில் வெங்கடேஷ், மகேஷ் பாபு என இரு நாயகர்கள் நிடிக்கின்றனர். வெங்கடேஷின் தம்பியாக மகேஷ்பாபு நடிக்கிறார். வெங்கடேஷ் மனைவி வேடத்தில் த்ரிஷா நடிக்கிறார். அதாவது மகேஷ் பாபுவின் அண்ணியாக வருகிறார் என்று செய்திகள் வெளியாயின. இது பற்றி த்ரிஷாவிடம் கேட்டதுமே கடுப்பாகிவிட்டார். அவர் கூறுகையில், ''மகேஷ்பாபு, வெங்கடேஷ் இணைந்து நடிக்கும் படத்துக்கு நான் ஒப்பந்தமாகவில்லை. எனவே மகேஷ்பாபுவின் அண்ணியாக நடிக்கிறேன் என்ற கேள்வியே எழவில்லை. விஷால் ஜோடியாக நடிக்கும் சமரன் படத்தில் எனக்கு நல்ல கேரக்டர் அமைந்துள்ளது. திறமையை காட்டுவதற்கு இப்படத்தில் நிறைய வாய்ப்புகள் உள்ளன. இந்தப் படத்துக்குப் பிறகே வேறு படம்,'' என்றார்.



தீருப்பங்கள்

## சினி பிட்ஸ்

- 100 ஆவது நாளை கொண்டாடியுள்ளது விக்ரம் நடிப்பில் வெளியான 'தெய்வத் திருமகள்.
- இறுதிக்கட்ட பணிகள் முடியாததால் நயன்தாரா நடித்த 'ஸ்ரீ ராம ரஜ்ஜியம்' தெலுங்கு பட வெளியீட்டு திகதி தள்ளிப் போயுள்ளது.
- ஜெயம் ரவி, தமன்னா நடித்த 'தில்லாலங்கடி' கன்னடத்தில் ரீமேக் ஆகியறது. இதில் சுதிப் நடிக்கிறார்.
- பாலா இயக்கத்தில் மீண்டும் நடிக்க விருப்பம் தெரிவித்துள்ளார் சூர்யா.
- 'திருட்டுப் பயலே' படத்தின் இந்தி ரீமேக்கான 'ஷாட்கட் ரோமியோ'வில் ஹீரோயினாக அறிமுகம் ஆகியார் ரிச்சா.
- 'மயக்கம் என்ன' படம் நியூயோர்க்கில் நடக்கும் தெற்கு ஆசிய சர்வதேச பட விழாவில் திரையிட தேர்வாகி உள்ளது.
- தமிழ், தெலுங்கு, மலையாளத்தை தொடர்ந்து 'இ பூமி ஆ பானு' கன்னட படத்தில் ஹீரோயினாக நடிக்கிறார் சரண்யா மோகன்.
- வீதியில் சுற்றி திரிந்த 7 பூனை, 7 நாய்க்குட்டிகளை பிடித்து தனது வீட்டி வளர்க்கிறார் பூஜா.

## ...விருது

...ல் ஏ.ஆர்.
...ரஹ்மான் ''ஸ்லம்டாக்
...ாவுக்கு பெருமை
...முறையில் ஒரிஜினல்
...க்கு
...ல்ஜியம் நாட்டில்
...சயமைத்தற்காக
...க்கு மக்கள் தெரிவு
...மார்ந்த நன்றியைத்



## ...? - த்ரிஷா மறுப்பு!

...வந்த செய்திகளை மறுத்துள்ளார் நடிகை
...கா'. ஏற்கெனவே பாடிகார்ட் படத்தை
...ப்புகளில்லை. தமிழில் விஷாலுக்கு
...ம் இல்லை. இந்த நிலையில் த்ரிஷாவை
...இருப்பதாக வதந்தி பரவியது. பட
...வும் கூறப்பட்டது. அப்படத்தில்
...டேஷின் தம்பியாக மகேஷ்பாபு
...வது மகேஷ் பாபுவின் அண்ணியாக
...கட்டதுமே கடுப்பாகிவிட்டார். அவர்
...துக்கு நான் ஒப்பந்தமாகவில்லை.
...யே எழவில்லை. விஷால் ஜோடியாக



# சிம்புவுடன் அமலாபால்!

தனுஷ் படத்திலிருந்து வெளியேறிய அமலா பால், அடுத்து அதை விட பெரிய படமான 'வட சென்னை'யில் சிம்புவுக்கு ஜோடியாக ஒப்பந்தமாகியுள்ளார். ஆறு தேசிய விருதுகளை வென்ற 'ஆடுகளம்' படத்துக்குப் பின் வெற்றிமாறன் இயக்கும் படம்தான் 'வட சென்னை' இதுவரை வெற்றி மாறன் இயக்கிய இரண்டு படங்களிலும் தனுஷ்தான் ஹீரோ. மூன்றாவது படத்திலும் அவர்தான் நடிப்பார் என்று பேசப்பட்டு வந்த நிலையில், சிம்பு அந்த இடத்துக்கு வந்துள்ளார். தெலுங்கு நடிகர் ரகுபதி ராணாவுக்கும் இந்தப் படத்தில் முக்கிய கேரக்டர் உண்டாம். சிம்பு ஜோடியாக அமலாபாலை தேர்வு செய்துள்ளதாக தெலுகிறது. 'ராணா'வுக்கு ஜோடியாக ஆன்ட்ரியா வருகிறார். அமலா, ஆன்ட்ரியாவுக்கு இதில் சமமான கேரக்டராம். குறிப்பாக அமலாவுக்கு இணையாக காட்சிகள் வைத்தால்தான் நடிப்பேன் என்ற கண்டிஷனோடு தான் ஆன்ட்ரியா நடிக்கவே ஒப்பந்தமானாராம். 'ஒஸ்தி' முடிந்ததும் வட சென்னை பட வேலையை தொடங்குகின்றனர்.



# திரைப்பட விமர்சனம்




ஏழாம் அறிவு தமிழ் சினிமாவின் கதை களத்தில் ஓர் விஸ்வரூபம் எடுத்திருக்கிறது. படத்தை பற்றிய அதீத எதிர்பார்பில் படம் பார்த்த சிலர் எதிர்பார்த்த அளவு இல்லை என கூறுகின்றார்கள். ஆனால் என்னை பொறுத்தவரை படம் தமிழ் சினிமாவின் மைல்கல் என்றே கூறுவேன்.

படத்தில் நிறைய குறைகள் லாஜிக் மீறல்கள் உள்ளன. ஆனால் அதை எல்லாம் தாண்டி படத்தின் கதைக்களம், திரைக்கதை, ஆக்ஷன், சூர்யாவின் நடிப்பு என படத்தை தூக்கி நிறுத்தும் சமாச்சாரங்கள் ஏராளம்..

தமிழர்கள் பெருமைப்படும் படியான ஒரு படத்தை கொடுத்ததற்கும் வித்யாசமான கதைகளத்திற்கும் சேர்த்து இரட்டிப்பு வாழ்த்துக்கள் ஆர். முருகதாசுக்கு சொல்லவேண்டும். முதல் அரை மணி நேரம் மட்டும் மிஸ் செய்துவிடாதீர்கள். கண்ணுக்கு குளிர்ச்சியான காட்சிகள் போதி தர்மனின் வரலாற்றை சுருக்கமாகவும் கம்பீரமாகவும் பதிவு செய்திருக்கிறார் இயக்குநர். அதன் பிறகு தற்காலத்திற்கு திரும்புகிறது கதை. போதி தர்மரின் மறக்கடிக்கப்பட்ட வரலாற்றை போலவே நம்மிடமிருந்து மறைத்து வைக்கப்பட்ட நமது பாரம்பரியம், நமது வீரம், மருத்துவம் உள்ளிட்ட நமது பண்டைய பெருமைமிகு மகத்துவங்கள் குறித்து அறிந்துகொள்ள வேண்டிய அவசியத்தை, மிரட்டும் வில்லன், அழகிய கதாநாயகி, அட்டகாசமான ஒளிப்பதிவு, விஞ்ஞானம் அஞ்ஞானம் எல்லாம் கலந்து சொல்வதே ஏழாம் அறிவு.


முதலில் கதைக்கு வருவோம் சீனாவிலிருந்து ஒரு கொடிய வைரஸ் இந்தியாவிற்கு பரவ இருக்கும் அபாயத்தை முன் கூட்டியே அறியும் போதிதர்மர் (சூர்யா) அதை தடுக்கும் விதமாக சீனாவுக்குச் செல்கின்றார். அங்கு மக்களை தாக்கும் கொடிய நோய்களிலிருந்து காப்பாற்றுகின்றார். இதனால் அங்கு உள்ள மக்களின் அன்பினை பெற்று அவர்களில் ஒருவராகின்றார். பின்னர் தனது தாய்நாட்டு திரும்ப அவர் முடிவெடுத்த சமயம் அங்குள்ள மக்கள் அவர் உடல் சீனாவிலேயா புதைக்கபட்டால் தங்களை நோய்கள் அண்டாது என நம்புகின்றனர். அதனால் அவரின் உணவில் விஷத்தை கலந்து கொடுக்கின்றனர். உணவில் விஷம் இருந்ததை அறிந்த போதி தர்மர் அவர்களின் விருப்பத்திற்காகவே அந்த உணவை அருந்தி அங்கேயே உயிரை விடுகின்றார். இப்போது கதை தற்காலத்திற்கு பயணிக்கின்றது. போதிதர்மனின் வாரிசாக அவரை போலவே உருவம் கொண்ட சூர்யா, போதிதர்மரை ஆராய்ச்சி செய்யும் சுருதி ஹாசன், சுருதி ஹாசனை கொல்ல வரும் வில்லன் என ஆடுபுலி ஆட்டம் ஆடுகிறது ஏழாம் அறிவு. இந்தியாவில் ஆதிக்கம் செலுத்த விரும்பும் சீனா 1600 ஆண்டுகளுக்கு முன்னால் போதி தர்மரால் குணப்படுத்தப்பட்ட வைரஸை மீண்டும் இந்தியாவிற்குள் பரப்ப திட்டமிடுகின்றது. அதே சமயம் சுருதிஹாசனால் மீண்டும் போதிதர்மர் உருவானால் அவர்களின் திட்டம் வெற்றி அடையாது என நம்பும் சீனா சுருதிஹாஸனை கொல்ல வில்லனை அனுப்புகின்றது. வைரஸை கட்டுப்படுத்த முடிந்ததா? சூர்யா மூலம் போதிதர்மரை உருவாக்க முடிந்ததா?. சுருதிஹாஸனின் நிலை என்ன என்பதை திரையில் காணலாம்.

சூர்யா போதி தர்மர் வேடத்திற்கு கச்சிதமாக உழைத்திருக்கிறார். ஆக்சனில் கிளைமாக்ஸில் தூள் கிளப்பிருக்கார். டாங் லீ தான் படத்தின் உண்மையான ஹீரோ. பார்வையிலேயே மிரள வைக்கிறார். படத்தின் மற்றொரு பெரிய பிளஸ் வசனங்கள். 'இந்தியனா இருக்கிறதுனால வெளிநாட்டுல மதிக்க மாட்டேங்குறான், தமிழனா இருக்கிறதுனால இந்தியாவில மதிக்க மாட்டேங்குறான்' போன்ற வசனங்கள், செவியில் அறைந்தாற்போல் உணர்ச்சி வசப்பட வைக்கின்றன. ஸ்ருதி அழகாக இருக்கிறார். அழுத்தம் திருத்தமாய் தமிழ் பேசுகிறார். ரவி கே.சந்திரனின் ஒளிப்பதிவும், ஆண்டனியின் எடிட்டிங் படத்திற்கு கூடுதல் பலம். ஹாரிஸ் ஜெயராஜின் வழக்கமான இசை. 'முன்னந்தி சாரல்..., யம்மா யம்மா...' அவருக்கே உரிய மெலடி ஸ்டைல். முதல் பாதியில் பழையகால சீன கிராமத்தை காண்பிக்க உழைத்தவர்களுக்கு சபாஷ்! போதிதர்மரால் காப்பாற்றப்படும் சிறுமியின் சிரிப்பும் அதன் பின்னணி இசையும் இதம்.

இயக்குனர் எ.ஆர். முருகதாஸ் ஒரு சிக்கலான கதையை அதே சமயம் மறைக்கபட்ட தமிழனின் பெருமையை எடுத்துக் கூறும் விதமாக படமாக்குவதில் மிகவும் சிரமப்பட்டுள்ளார். ஆனால் அதை திறமையாக கையாண்டு வெற்றியும் பெற்றிருக்கின்றார் என்றே கூறுவேன். இதேபோன்று இன்னும் பல சிறந்த கதைகளை அவர் தமிழ் சினிமாவுக்கு கொடுக்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பு.

உண்மையில் அனைவரும் அவசியம் பார்க்கப்பட வேண்டிய படம் இந்த ஏழாம் அறிவு.

ராஜ்



# கடாபியின் எழுச்சியும் வீழ்ச்சியும்



மக்கள் போராட்டத்தினால் அராபிய நாடுகளின் அரசியல் அரங்கில் பல புரட்சிகர மாற்றங்கள் அண்மைக்காலங்களாக ஏற்பட்டு வருகின்றன. எகிப்து நாட்டு ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கை தொடர்ச்சியான போராட்டங்கள் மூலம் மக்கள் கவிழ்த்தனர். மக்களின் கிளர்ச்சிகரமான போராட்டங்கள் டியூனிசியா, லிபியா, யெமன் என பரிணமிக்கத் தொடங்கின. சர்வாதிகார முறையிலான நீண்ட அரசாங்க கட்டமைப்புக்களை மக்கள் விரும்பாது அதனை ஒழிக்க வீதிகளில் இறங்கிப் போராடினார்கள். இந்த வகையில் லிபியாவில் இவ்வாண்டின் ஆரம்பத்தில் தொடங்கிய மக்கள் கிளர்ச்சிப் போராட்டம் கடந்த 19 ஆம் திகதி லிபிய மன்னன் மும்மர் கேணல் கடாபியின் மரணத்துடன் முடிவுக்கு வந்தது.

கடாபியின் 42 வருட கால ஆட்சியின் கீழ் வாழ்ந்து வந்த லிபிய மக்கள், அவரின் இறுதிக்கால நடவடிக்கைகளால் அதிருப்தியுற்று அவரை இல்லாதொழிக்கும் போராட்டத்தில் குதித்தனர். இதனை கடாபியை விரும்பாத மேற்குலக நாடுகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டன. அதில் வெற்றியும் கண்டன. தம்மை எதிர்ப்பவர்களுக்கு மரணம்தான் தீர்வாகும் என்பதை சதாம் ஹுசைன், பின்லேடன் முதல் இன்று கடாபி வரையானவர்களின் சாவுகள் மூலம் மேற்குலகம் வெளிக்காட்டியுள்ளது.

## கடாபியின் எழுச்சி

1942 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7 ஆம் திகதி லிபியாவின் கடாஹ் பா என்ற நாடோடிப் பழங்குடி குடும்பமொன்றில் பிறந்த கடாபி, ஆரம்பக் கல்வியை மதப் பாடசாலையொன்றில் கற்றுக் கொண்டிருக்கும்போதே அரபு நாடுகளில் இடம்பெற்ற புரட்சிப் போராட்டங்களில் ஈடுபாடு காட்டத்தொடங்கினார். மிஸ்ரடா நகரில் உயர் கல்வியைக் கற்று வந்த கடாபி நாடுகளின் வரலாறுகளைப் படிப்பதில் ஆர்வம் காட்டினார். 1961 இல் பென்காஸியிலுள்ள இராணுவப் பாடசாலையில் இணைந்து இராணுவப் பட்டம் பெற்றார்.

விடுதலைப் போராட்டங்களால் ஈர்க்கப்பட்டிருந்த கடாபி, 1969 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி கனிஷ்ட இராணுவத் தலைவர்களுடன் இணைந்து லிபிய மன்னன் ஐட்றிஸ்லின் ஆட்சியை இராணுவப் புரட்சி மூலம் வீழ்த்தினார்.

27 ஆவது வயதில் லிபிய நாட்டின் அதிபரான கடாபி, தன்னை ஒரு புரட்சித் தலைவனாகவே காட்டிக் கொண்டார். தன் ஆட்சியை எதிர்ப்பவர்களுக்கு தன்னிச்சையான முறையில் மரண தண்டனைகளை வழங்கி வந்தார். தனக்கு எதிராக எவரும் கிளர்ந்தெழுந்துவிடக் கூடாது என்பதில் தீவிர கவனம் செலுத்தினார். இதன் காரணத்தினால் தன்னைச் சுற்றி தனக்கு நம்பிக்கையானவர்களை நியமித்திருந்தார். அதில் அதிகமானவர்கள் அவரின் உறவினர்களாகவே இருந்தனர்.

தனக்கென ஓர் அரசியல் சித்தாந்தத்தை உருவாக்கி ஆட்சி செய்து வந்த கடாபிக்கு மிகப் பெரும் பலமாக இருந்தது அந்நாட்டின் எண்ணெய் வளம். இதனால் பொருளாதாரச் சிக்கல் எதுவுமின்றி சுகபோகமான வாழ்க்கையை அனுபவித்து வந்தார். அத்துடன் இறுக்கமான ஆட்சிக் கட்டமைப்பு அவரை 42 வருடங்களாக பாதுகாத்து வந்தது எனலாம். சீனாவின் உதவியுடன் அணு ஆயுதங்களையும் இராணுவ ஆயுதங்களையும் வாங்கிக் குவித்தார். ஆசியாவில் இலங்கை உட்பட்ட சிறிய நாடுகளுடன் நட்புறவை வளர்த்துக் கொண்டார்.

இரண்டு மனைவிகளுடனும் ஏழு புதல்வர்களுடனும் ஒரு புதல்வியுடனும் சுகபோக வாழ்க்கை வாழ்ந்த கடாபி, தன்னைத் தவிர தன் பிள்ளைகள் பிரபல்யம் பெறுவதை விரும்பாதவராகவே நடந்து கொண்டார்.

## கடாபியின் வீழ்ச்சி - ஆரம்பம்

1986 ஆம் ஆண்டு பேர்லின் நகரில் இரவு விடுதியொன்றில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலுக்கும் 1988 இல் ஸ்கொட்லாந்தின் லொக்கர் பீ நகரில் பறந்த விமானத்தை தகர்த்து 270 பேர் பலியானதற்கும் லிபியாவின் முகவர் தான் காரணம் என மேற்குலகம் குற்றம் சாட்டிய பின்னரும் அமெரிக்காவை எதிர்த்தமையே கடாபியின் வீழ்ச்சிக்கு வழி சமைத்தது எனலாம். இக் குண்டு வெடிப்புக்களுடன் தொடர்புடையவர் எனக் கைதாகி ஆயுள் தண்டனை பெற்ற அப்டெல் பாஸேட் மொஹமட் அல் - மெக்ராஸி உடல் நலக் குறைவால் விடுதலையாகி வந்தபோது, அவரை கடாபி லிபியாவின் வீர புருஷனாக வரவேற்றமை அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளை இன்னும் வெறுப்பேற்றின. இதன் பின்னர் கடாபி மேற்குலக நாடுகளிடமும் லிபியாவின் மேற்தட்டு மக்களிடமும் கடும் பகையைச் சம்பாதித்துக் கொண்டார்.

கடாபி தனது கடும் போக்குக் கொள்கையினாலும் விலை உயர்வு, வேலையின்மை போன்றவற்றினாலும் லிபிய மக்களினால் வெறுக்கப்படும் தலைவராக மாறத் தொடங்கினார். அத்துடன் இவரின் புதல்வர்களின் தான் தோன்றித்தனமான செயற்பாடுகளும் அதிகார துஷ்பிரயோகங்களும் இவரின் ஆட்சியின் மீது மக்களை நம்பிக்கை இழக்கச் செய்தது. எந்தக் கட்டமைப்பினூடாக தனது ஆட்சி அதிகாரத்தை நீட்டித்துச் சென்றாரோ அதே கட்டமைப்புத்தான் பின்னர் அவருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தது.

பெப்ரவரி 15 ஆம் திகதி லிபிய மக்கள் பென்காஸி நகரில் கடாபிக்கு எதிராக போராட்டத்தில் குதித்தனர். இதில் கடாபிக்கு எதிராக செயற்பட்டு வந்த கிளர்ச்சிக் குழுவினரும் இணைந்து கொண்டனர். பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் கிளர்ச்சியாளர்களுடன் இணைந்து கடாபியின் முக்கியமான இடங்களில் விமானத் தாக்குதல்களையும் கடற்படைத் தாக்குதல்களையும் மேற்கொண்டன. லிபியாவில் நடப்பது வன்முறையாளர்களுக்கும் அரசுக்கும் எதிரான யுத்தம். இதில் மேற்கு நாடுகளோ ஐ.நாவோ தலையிடவேண்டாம் எனவும் மீறித் தலையிட்டால் இரத்த ஆறு ஓடும் என கடாபி எச்சரித்து தனது இராணுவத்தை கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகப் போராடப் பணித்தார். இதன்போது ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். கலவரத்தை

(30 ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு: அஸ்வின்

# அரசியல் அமைப்பில் திருத்தங்கள் (பகுதி 17)


(சென்ற வாரத்தொடர்ச்சி)


இந்த இனக்கலவரம் பற்றி விசாரணை நடத்திய சன்சோனிக் கமிஷன் பொலிஸார் மீது குற்றம் சாட்டியது. ஆனால் பொலிஸ் சேவை புனரமைக்கப்படவில்லை. மாறாக அரசியல்வாதிகளின் கைப்பொம்மையாக்கப்பட்டார்கள்.

இதைத் தொடர்ந்து கொள்ளுப்பிட்டியில் ஒரு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மூத்த அரசியல்வாதியான (vetaran politician) திருமதி விவியன் குணவர்த்தனா கொள்ளுப்பிட்டி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி கணேசானந்தன் என்பவரால் தாக்கப்பட்ட வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட பொலிஸ் அதிகாரிக்கு தண்டனை வழங்கப்படவில்லை. இப்படியாக பல சம்பவக் கோர்வைகள் அரசியல் மயப்படுத்தப்பட்ட பொலிஸ் திணைக்களம் மீது மக்கள் நம்பிக்கை இழக்கக்காரணமாயிற்று. பொலிஸ்- பொதுமக்கள் உறவுகள் பேணப்படவில்லை. எத்தகைய ஸ்தாபனமயமாக்கலும் இடம்பெறவில்லை. குற்றச்செயல்கள் அதிகரித்தன. வடக்கிலும் கிழக்கிலும் தமிழ்த்தீவிரவாதிகள் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தினார்கள். இத்தகைய தாக்குதல்கள் பற்றி புலன்விசாரணை செய்ய சென்ற பொலிஸ் அதிகாரிகளும் படுகொலை செய்யப்பட்டார்கள். இவற்றின் உச்சக்கட்டமாக 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி யாழ்ப்பாண பொலிஸ் நிலையம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலின் விளைவாக பொலிஸ் நிலையம் முற்றாகத் தாக்கியழிக்கப்பட்டது. இதன் பின்னர் யாழ்ப்பணா குடாநாட்டில் நீதி நிர்வாக சேவைகள் சீர்குலைக்கப்பட்டன. நீதிமன்றங்கள் செயல்பட முடியாது போயின. தகுதி வாய்ந்த நீதிமன்றங்கள் எவையும் (competent courts) இயங்கவில்லை. பொலிஸ் சேவைகள் சீர்குலைக்கப்பட்டமையால் சட்டபூர்வமான நீதிமன்றங்கள் சீர்குலைந்து போயின. சட்டவிரோதமான காங்காரு நீதிமன்றங்கள் ஆங்காங்கே உருவாக்கப்பட்டன. இந்த நீதிமன்றங்கள் எந்தச் சட்டப் புத்தகங்களாலும் உள்வாங்கப்படவில்லை. பொலிஸ் சேவை இல்லாமையால் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தமிழ்த்தீவிரவாத இயக்கங்கள் பெருகின. அவை ஒவ்வொன்றும் விசாரணை மன்றுகளை அமைத்தன. அவற்றிற்கு சட்டவல்லுனநர்களின் பின்புலம் ஏதும் இருக்கவில்லை.

இறுதியில் புலிகள் காவல்துறை என்ற பெயரில் ஈழம் பொலிசாரை நியமித்தனர். ஆனால் இந்த காவல்துறை உறுப்பினர்கள் பொலிஸ் சேவைக்கு உள்வாங்கப்படுகின்றபோது இருக்க வேண்டிய அடிப்படைக் கல்வித்தராதரத்தைக் கொண்டிருக்கவில்லை. அவர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்கு எதுவித பொலிஸ் பயிற்சிக் கல்லூரிகளும் இருக்கவில்லை. ஆங்காங்கே சோதனைச் சாவடிகளில் நிறுத்தப்பட்டிருந்த காவல்துறை உறுப்பினர்கள் தமது மனம் போன போக்கில் தான் நடந்து கொண்டிருந்தார்கள். இதனால் அவர்கள் பொதுமக்கள் வெறுப்புக்கு இலக்கானார்கள். இதே போல தென்னிலங்கையிலும் 1971 ஆம் ஆண்டு ஜே.வி.பி.யினர் நடத்திய கிளர்ச்சியின் போது முதலில் வெள்ளவாயா பொலிஸ் நிலையத்தை தாக்கி சிவில் நிர்வாகத்தை சீர்குலைக்க முயன்றார்கள். 1988 - 1989 ஆம் ஆண்டு கால கிளர்ச்சியின் போது அவர்கள் சிற்சில இடங்களில் பொலிஸ் நிலையமும் நீதிமன்றமும் நடத்தினார்கள். இவையாவும் முறியடிக்கப்பட்டு 2009 மே 18 க்குப் பின்னர் இலங்கை முழுவதும் ஒரே சேவையின் கீழ் கொண்டு வரப்பட்டது. ஆனால் 17 ஆவது திருத்தச்சட்டத்தின்படி தேசிய பொலிஸ் ஆணைக்குழு அமைக்கப்படவில்லை. **(தொடரும்)**

## சட்டமும் சமூகமும் 49






சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**
**யாழ் ஓசை**
**வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
**117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

# நிலாவரை நீர்ப்பாசனத் திட்டம் மீண்டும் நடைமுறைக்கு வருமா?

புத்தூர் சுன்னாகம் வீதியில் இராச வீதி சந்திக்கு முச்சந்தியில் வீதிக்கு வடக்குப்புறமாக அமைந்திருக்கின்றது வற்றாத நீர் ஊற்று நிலாவரைக் கிணறு. இதன் தோற்றம் தொடர்பாக புராண கதைகளிலும் கர்ண பரம்பரைக் கதைகளிலும் கூறப்பட்ட போதிலும் புவியியலாளர்களின் கருத்துப்படி இது சுண்ணக்கற்பிரதேசத்தில் இரசாயன மாற்றங்களினால் ஏற்பட்ட தரை உருவ அமைப்பு. இயற்கையின் கொடை என்பதே ஆகும்.

நிலாவரை நீர் தொடர்பாக முழுமையான ஆழம் கண்றியப்படாத போதிலும் அதிலுள்ள நீரின் அளவு 20 அடிக்குக் குறையவே உள்ளது. பயிர்ச் செய்கை நடவடிக்கைக்கு பயன்படுத்தக்கூடியது என்பதும் 1987 ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் பயிர்ச் செய்கை நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டது என்பதும் உண்மை.

இதற்கு சான்றாக நீர்ப் பாசனத்துக்கு பயன்பட்ட சீமெந்தினால் நிர்மாணிக்கப்பட்ட வாய்க்கால்களின் சிதைவுகளை இராச வீதியின் கிழக்குப் பக்கமாகவும் புத்தூர் சுன்னாகம் வீதியின் வடக்குப் பக்கமாகவும் இன்றும் காணலாம். நீண்ட தூரத்திற்கு 3 x 3 அடி அகல ஆழத்தில் வாய்க்கால் உள்ளது.

1960 ஆம் ஆண்டுக்கு முந்திய காலப் பபகுதியிலிருந்து 1987 ஆம் ஆண்டுவரையும் ஏறத்தாழ 25 வருட காலத்துக்கு மேற்பட்டகாலம் இந்த நீர்ப்பாசனத் திட்டம் நடைமுறையிலிருந்தது. மிகக் குறைந்த கட்டணத்தில் விவசாயிகளுக்கு நீர் வழங்கப்பட்டது. குறித்த காலப்பகுதியில் சலுகைக் கட்டணமாக மாதாந்தம் 10 ரூபா வரையான கட்டணம் விவசாயிகளிடம் இருந்து அறவிடப்பட்டது.

ஆரம்ப காலத்தில் 8 அங்குல விட்டமுள்ள பாரிய குழாய் மூலம் நீர் இறைக்கப்பட்டு காலையிலும் மாலையிலும் குறிப்பிட்டளவு நேரம் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டது. நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்தி எஞ்சிய நீர் சிறுப்பிட்டி வயல் வெளியிலுள்ள குளத்தில் சேரவிடப்பட்டு நெற் பயிர்ச் செய்கைக்கும் கால் நடைகளுக்கும் பயன்படுத்தப்பட்டது.

நிலாவரை நீர்ப் பாசனத்திட்ட நீர்ப் பாசனம் ஆரம்பத்தில் நீர் இறைக்கும் இயந்திரம் மூலமும் பிற்காலத்தில் மின்சாரம் மோட்டார்கள் மூலமும் மேற்கொள்ளப்பட்டன. விவசாயிகள் மிகக் குறைந்த செலவில் ஒரே நேரத்தில் பல தோட்டங்களுக்கு நீர்ப்பாசனம் செய்தனர்.

1987 ஆம் ஆண்டு இந்திய அமைதிப் படையினரில் ஷெல் வீச்சு தாக்குதலால் நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்தப்பட்ட கருவி சாதனங்கள் குழாய் இணைப்புக்கள் சேதமடைந்ததோடு வாய்க்கால்களும் சேதமடைந்தன. குறிப்பிட்டளவு காலப்பகுதியில் நிலாவரைப் பகுதி மக்கள் நடமாட்டம் இல்லாத சூனியப்பிரதேசமாக விளங்கியது. இந்திய இராணுவம் திருப்பிய பின்னர் இன்று அழிபாடுகளுடன் காணப்படுகின்றது. அந்தப் பிரதேசத்தில் இந்திய இராணுவத்தின் எச்சமாக பாதினீயம் நச்சு பூடு பரவிக் காணப்படுகின்றது.

நிலாவரை தற்பொழுது காட்சிப் பொருளாக மட்டுமே உள்ளது. கால ஓட்டத்துக்கு ஏற்ப நீர்ப்பாசன வாய்க்கால்கள் புரனமைப்புச் செய்யப்பட்டு மீண்டும் நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்தப்படுமா?. யாழ். குடாநாட்டில் நடைமுறையிலிருந்த ஒரேஒரு நீர்ப்பாசனத் திட்டம் மீண்டும் தனது பெருமையை நிலைநாட்டுமா? என விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாட்டிலுள்ள வலி. கிழக்குப் பிரதேச செயலகம் யாழ். மாவட்ட செயலகம் என்பன உரிய முறையில் ஆக்க பூர்வமான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளுமானால் பொருத்தமான உதவித்திட்டங்கள் ஊடாக நிலாவரை நீர்ப்பாசனத் திட்டத்தை மீண்டும் உயிர்ப்படையச் செய்யலாமென விவசாயிகள் நம்புகின்றனர்.

விவசாயிகளின் எதிர்பார்ப்புடன் இத் திட்டம் நடைமுறைக்கு வருமா?.

**அச்சுவேலி நிருபர்**

# குறுக்கெழுத்துப் போட்டி 51

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | ■ | 06 | 07 |
| 08 | 09 | 10 | ■ | 11 | | 12 | 13 |
| 14 | 15 | ■ | 16 | 17 | 18 | 19 | ■ |
| 20 | ■ | 21 | 22 | 23 | 24 | ■ | ■ |
| 25 | 26 | 27 | 28 | ■ | ■ | 29 | 30 |
| ■ | ■ | 31 | ■ | 32 | 33 | 34 | ■ |
| 35 | 36 | 37 | 38 | 39 | ■ | 40 | 41 |
| ■ | 42 | 43 | 44 | 45 | ■ | ■ | 46 |

**இடமிருந்து வலம்-**

1. வடக்கில் மேற்கொள்ளப்படும் அரசின் அபிவிருத்தித்திட்டத்தை இப்படி அழைப்பர்
06. பந்துக்காப்பாளர்
08. சுவரில் ஊர்வது (திரும்பியுள்ளது)
12. இடது - எதிர்ச்சொல் (திரும்பி/இறுதி எழுத்து இல்லை)
13. தென்னிலங்கையில் உள்ள சுற்றுலா நகரம்
16. கொடை
21. பாதுகை வைத்து ஆட்சி செய்தவர்
25. ராசிகளில் ஒன்று (திரும்பியுள்ளது)
29. இந்தியாவில் பிரபல்யமான ஆறு
32. நரி இதற்குப் பெயர் பெற்றது
40. பல அல்ல
42. இன்பம் - எதிர்சொல் (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. யாழ். மாவட்டத்தின் நிர்வாகப் பிரிவுகளில் ஒன்று
02. பணம் - சிங்களச் சொல்
03. விளையாட்டுப் பொருள் (தலைகீழ்/இறுதி எழுத்து இல்லை)
05. சந்தர்ப்பம்
06. காலையில் வீட்டு வாசலில் போடுவது
07. வேதனை
16. இரு தரப்புக்கிடையேயான தொடர்பு
18. மகாபாரதத்தில் பலசாலி (முதல் எழுத்து இல்லை)
21. பாரம்பரிய விளையாட்டுப் பொருள்
29. குருபூர்ணிமா அனுஷ்டிக்கப்படும் மாதம்
32. கேள்வியால் கிடைப்பது
36. ஆக்கம்/சங்கு/பறவை
38. என்
41. வீரம் (தலைகீழ்/இறுதி எழுத்து இல்லை)

**குறுக்கெழுத்துப் போட்டி 49க்கான விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சி | த் | தி | ர | வ | தை | ■ | ச |
| க | தி | ரை | ■ | சு | ல | ப | ம் |
| ர | சி | ■ | க | தே | ம் | ■ | ப |
| ம் | ■ | ல் | ய | வ | ■ | சு | ள |
| ■ | ஆ | ட | வ | ன் | ■ | க | ம் |
| அ | ழ | க | ன் | ■ | ப | ந் | ■ |
| க | ம் | ■ | ■ | நெ | த் | த | லி |
| ழி | ■ | ப | றை | ■ | து | ம் | பு |

## பாராட்டுப் பெறும் அதிஷ்டசாலிகள்

1. செ.றெபேட்
114 1/1, நியூநாம்குயர்
கொழும்பு.
2. கே.இராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை.
3. திருமதி.தி.சிதம்பரநாதன்
டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

குறுக்கெழுத்துப் போட்டி 51க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கவும்.

**அனுப்பவேண்டிய முகவரி**

குறுக்கெழுத்துப் போட்டி
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.





''ஏன்டா இண்டர்வியூவுக்குப் போகலியா?''
''நீங்கதானேப்பா நாலு பேர் கேள்வி கேட்கிற மாதிரி நடக்காதே என்று சொன்னீங்க!''




''ஆத்தா ஆடு வளர்த்தா கோழி வளர்த்தா... நாய் மட்டும் வளர்க்கலியே ஏன்?''
''நாயை அடிச்சு சாப்பிட முடியாதே!''





''நான் எப்போ உங்க முன்னாடி வந்தாலும் கண்ணாடியை எடுத்துப் போட்டுக்கிறீங்களே,ஏன்?''
''டாக்டர் தான் சொன்னார் தலை வலி வரும்போதெல்லாம் கண்ணாடியைப் போட்டுக்கிறச் சொல்லி!''




''மலிவு விலையில் செருப்பு வாங்கினேன் காலைக் கடிக்குது!''
''அதிக விலை கொடுத்து வாங்குவது தானே!''
''அப்போ கையைக் கடிக்குமே?''




''இந்தா பாரு அடிக்கடி ஓட்டலுக்குப் போய் சாப்பிட முடியாது செலவு அதிகமாகிறது.....!''
''சரிங்க இனி நான் மட்டும் போறேன்!''




''கஞ்சன்னா யாருப்பா!''
''பெற்ற பிள்ளைகளுக்குக் கூட காசு கொடுக்காதவன்!''
''காசுன்னா என்னப்பா?''

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

கற்காலத்தில் மனித ஜனனங்கள் அதிகம் நிகழ்ந்தபோது கலாசாரம் கானல் நீராக இருந்தது. மனிதர்கள் விலங்கினத்தின் சாயலையும் தன்மைகளையும் ஏற்றிருந்தனர். ஆண் - பெண் என்ற உறவுப் பங்கீடுகள் பிணைப்புகள் அனுமதியின்றி கட்டற்று நிகழ்ந்தன. விலங்கினங்கள் சந்ததி விருத்திக்காகவும் கட்டவிழும் பாலியல் கிளர்ச்சிகளுக்காகவும் எதிர்ப்பாலினத்தை நாடின. இத்தன்மை பொருந்தியவனாகவே அக்கால மனிதர்கள் விளங்கினார்கள். தற்போது எமது ஊர் வழக்கில் பொதுவாக பிரயோகிக்கப்பட்டு வரும் 'கள்ளக் காதல்' என்ற சொற்பதம் அக்காலத்தில் அனுமதிக்கப்பட்ட உறவாக காணப்பட்டது. வயதுக்கு வந்த ஆணும் சரி பெண்ணும் சரி அக்கண நேரத்தில் தோன்றி மறையும் பாலியல் உணர்வுகளை வடிகட்ட எதிர்ப்பாலினத்தை நாடவேண்டிய தேவை ஏற்பட்டது. அக்காலத்திலிருந்த உறவுகள் உடலை மையப்படுத்தியதாக இருந்தனவே தவிர உள்ளத்தை மையப்படுத்தியதாக இருக்கவில்லை.

காலங்கள் செல்லச் செல்ல மனித இனக் குழுமங்களிடையே வர்க்கப்பாகுபாடுகள் முளைவிட்டன. தமக்கென்ற ஒரு நிலப்பகுதியை வரையறுத்து சிறு சிறு கூட்டங்களாகப் பிரிந்து தமக்கிடையில் ஒரு தனித்தன்மையை உருவாக்கத் தலைப்பட்டனர். இதன் விளைவு சாதி, இனம், மொழி, கலை, பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றைத் தனித்துவ அடையாளங்களாகக் கொண்டு தனித்தனிக் கூட்டப் பிரிவினர் தோற்றம் பெற்றனர். இத் தனித்துவக் கூறுகள் ஏனைய குழுமங்களிடமிருந்து தனித்துவப்படுத்திக் காட்டுவதற்காகவே உருவாக்கப்பட்டன. ஒரு இனக் குழுமத்திற்குள் அவ் இனத்திற்கே உரிய மொழி, பண்பாட்டு விழுமியங்கள், கலைகள் என்பன கருக்கொண்டதன் காரணத்தினால் சிற்சில நன்மைகள் இருந்தாலும் இன முரண்பாடுகள், சாதியப் பிரச்சினைகள் என நீண்டு இறுதியில் உட்பகை வலுத்து இனப்போராக, அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கான யுத்தமாக வெடித்தது.

இதனால் ஓர் இனம் இன்னோர் இனம் மீது ஆதிக்கம் செலுத்தத் தலைப்பட்டது. சனத்தொகையில் கூடிய பங்கினைக் கொண்டஇனம் பெரும்பான்மை - அதிகார வர்க்கமுள்ள இனமாகவும் இதற்கு மாறாக சனத்தொகையில் சிறிய தொகையைக் கொண்ட இனம் சிறுபான்மையினமாகத் தோற்றம் பெற்றது.

அதிகாரத்தில் வலுக்கூடிய நிலையிலுள்ள இனம் வலிமை குறைந்த இனத்தை ஏதோ ஒரு காரணத்தைக் கற்பித்து அவ்வினத்தை அடக்கியாள முற்படுகின்றது. இதற்கு யுத்தம் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது. படை வலிமையில் கூடிய நிலையிலுள்ள இனம், குறைந்த வலிமையுள்ள இனத்தை தனது அதிகார பலத்தின் மூலம் அடக்கி ஒடுக்கி எதேச்சாதிகாரப் போக்கின் மூலம் அவ்வினத்தின் கட்டுமானத்தை உடைத்தெறிய முற்படுகின்றது. இதுவரை சிறுபான்மை இனக் குழுமத்தின் அடையாளங்களாக இருந்து வந்த மொழி, கலை, கலாசார கூறுகளை சிதைக்கவோ அழிக்கவோ முற்படுகின்றது. அல்லது தனது இனக் கலாசாரத்தை பிற இனத்தின் மீது திணிக்க முற்படுகின்றது. அச் சிறுபான்மை இனத்தின் அதிகாரப் பிரிவினரின் ஆட்சி ஒழுங்குகளால் இறுக்கமாகப் பின்பற்றப்பட்டு வந்த இன அடையாளங்கள் அவ் அதிகாரப் பிரிவினரின் செயற்திறனை உடைத்தெறிந்தவுடன் மக்களின் வாழ்வியல் முறைகளிலும் மாற்றங்கள் தென்பட்டன. இதுவரை காலமும் இறுக்கத்துடன் கடைப்பிடித்த உயர் பண்பாட்டு விழுமியங்களை புறமொதுக்கி அன்னிய கலாசார வலையில் விழுந்து மனம் போன போக்கில் வாழத் தலைப்பட்டனர். இதனால் கற்கால மனிதனின் குணாம்சங்களையும் பண்புகளையும் தெரிந்தோ தெரியாமலோ வரவழைத்துக் கொண்டனர். இதனால் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்களின் குண வியல்புகள் இக்கால மக்களிடையே பதிவு பெற்று வருகின்றன.



எத்தனையோ மன முறிவுகள் மண முறிவுகளுக்கு வழிவகுத்து வருகின்றன. கணவன் - மனைவி என்ற புனிதமான உறவுமுறை மேற்கத்தேய கலாசார உள்வாங்கலால் சிதைந்து போயிருக்கின்றது. இத்தகைய மண முறிவுகளுக்குப் பெரும்பாலும் கள்ளக்காதல் உறவு பிரதான காரணியாக விளங்குகின்றது.

தற்போதுள்ள சூழலில் கள்ளக் காதல்கள் முளைவிட்டுக்கொள்கின்றன. ஒருவனுக்கு ஒருத்தி என்ற இறுக்கமான பண்பாடுகளுடன் சிறப்புப் பெற்றிருந்த இனம் அதன் தனி இயல்புகளிலிருந்து விலகி மிருகத்தனமான செயல்களில் ஈடுபட முனைப்புக் காட்டுகின்றது. கல்வி கற்று அறிவு ரீதியில் முதிர்ச்சியடைந்து விருத்தியடைந்தவர்கள் கூட அந்த விடயத்தில் மிருக உணர்வுள்ளவர்களாகவே இருக்கின்றனர்.

எத்தனையோ மன முறிவுகள் மண முறிவுகளுக்கு வழிவகுத்து வருகின்றன. கணவன் - மனைவி என்ற புனிதமான உறவு முறை மேற்கத்தேய கலாசார உள்வாங்கலால் சிதைந்து போயிருக்கின்றது. இத்தகைய மண முறிவுகளுக்குப் பெரும்பாலும் கள்ளக்காதல் உறவு பிரதான காரணியாக விளங்குகின்றது. இந்த உறவு நிலை பதியப்படாத உறவு நிலையாக நீள்கின்றன. இவ்வுறவு சமூகக் கட்டுமானங்களை உடைத்தெறியச் செய்துள்ளது.

பல குடும்பப் பிரிவினைகளுக்கு வழி வகுத்துள்ளது. இன்று நீதிமன்றங்கள் தாபரிப்பு வழக்குகளால் நிரம்பி வழிகின்றன. கருத்தொருமித்த புரிந்துணர்வின்மை கணவன் - மனைவிக்கிடையில் நிகழத் தவறியதனால் புனிதமான குடும்ப உறவு நிலையில் பிளவுகள் ஏற்பட்டு வருகின்றன. இவ் உறவுப் பிரிவினையால் பாதிப்படைவது அவர்களது பிள்ளைகள்தான். பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையை சூனியப்படுத்துவதற்கான சதுரங்க விளையாட்டில் இன்று பல கணவன் - மனைவி உறவுகள் இறங்கியுள்ளன. இப்பலப் பரீட்சையால் சமூகத்தின் இருப்பே கேள்விக்குறியாக்கப்பட்டு வருகிறது. கணவன் - மனைவி உறவென்பது தனித்துவமானது. அன்னியொன்னியமானது. மரண பரியந்தம் வரை தொடரும் தன்மையுடையது. இப்புனித உறவுக்கு களங்கம் விளைவிக்கும் பல சம்பவங்கள் சமூகத்தில் இடம்பெற்று வருகின்றன. இதற்கு படித்த மேற்தட்டு வர்க்கத்தினரே அதிகம் பலியாகி வருவது துரதிஷ்டவசமானது. இன்றைய திருமண உறவு நிலை உடலை, அந்தஸ்தை, பண பலத்தைப் பார்த்தே தீர்மானிக்கப்படுகின்றது. இதனால் மனித மனங்கள் ஒன்றிணையத் தவறிவிடுகின்றன.

முன்னர் இருந்த வாழ்க்கை முறை வேறு. இப்போது இருக்கும் வாழ்க்கை முறை வேறு. முன்னர் மூத்தோருக்கு மதிப்புக் கொடுத்து அவர்தம் சொற்படி நடந்து வந்த கீழ்ப்படிவுள்ள சமூகம் இருந்தது. இதனால் கணவன் - மனைவிக்கிடையே இடம்பெறும் பிணக்குகள் மூடு மந்திரமாகத் தீர்க்கப்பட்டன. மூத்தோரின் கருத்து நிலைக்கு மதிப்புக் கொடுக்கும் பண்பு அன்று மேலோங்கியிருந்தமையால் மணமுறிவு தடுக்கப்பட்டது. தவிர்க்கப்பட்டது. ஆனால் இன்று நிலைமை அவ்வாறில்லை. மூத்தோருக்கு மதிப்புக் கொடுக்கும் பண்புகள் அருகி வருவதனால் நிலைமை விபரீதமாகவே உள்ளது. இதனால் தாபரிப்பு வழக்குகளும் வகைதொகையின்றி நீண்டு செல்கின்றன. தீர்ப்பு வழங்கும் கால எல்லைகளும் நீள்கின்றன. இதனால் தேவையற்ற சிக்கல்களும் அதிகளவு பணமும்தான் விரயமாகின்றன. சட்டம் படித்தவர்கள் தமது பணப் பெட்டிகளை நிரப்பிக் கொள்கின்றனர்.


போரின் திரைகளுக்குள் மக்கள் மூடப்பட்டிருந்த வேளை மக்களின் சிந்தனைகள் ஒருமை நிலைப்பட்டதாக இருந்தன. போரையும் அது தந்த அவல வாழ்வையும் பற்றிய சிந்தனைகள் மேலோங்கியிருந்த சூழ்நிலை. அப்போதிருந்த ஆட்சிக் கட்டமைப்பு மக்களின் கட்டற்ற சுதந்திரத் தன்மைக்கு வேலி போட்டது. ஆண் - பெண் என்ற சமவலு நிலை பேண்தகு நிலையில் இயக்கப்பட்டது. சட்டம் என்ற இரும்பு வேலிகளை உடைக்க முற்பட்டவர்கள் உடைபட்டே போன வரலாறுகள் ஏனைய மக்களுக்கு முன்னுதாரணமாய் இருந்தன. ஆனால் போரின் திரை விலக்கப்பட்டு மக்களுக்கு கலாசார விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு கட்டற்ற சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கிறது. சட்டங்கள் உறங்கு நிலையில் இருக்கின்றன.

நடைபெற்று முடிந்த யுத்தம் ஏராளமான கைம்பெண்களையும் இளம் விதவைகளையும் எச்சங்களாக விட்டுச் சென்றுள்ளது. இவர்களின் எதிர்கால வாழ்வு சூனியமாக்கப்பட்டுள்ளது. அவர்களது பிள்ளைகள் ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி ஏங்கியபடி நிற்கின்றனர். இளம் விதவைப் பெண்களின் வாழ்வுக்கு உரமூட்டவும் அவர்களது பிள்ளைகளின் எதிர்கால வாழ்வுக்கும் ஒளியூட்ட வேண்டியுள்ள நிலையில் கணவன் - மனைவி உறவில் ஏற்படும் விரிசல் நிலைகளால் ஏராளமான குடும்பங்கள் பிரிகின்றன. இதனால் குடும்பம் ஒரு கதம்பம் என்ற முறையில் வாழ்ந்து வந்த மக்கள் சமூகம் குடும்பக் கட்டமைப்பு தகர்க்கப்பட்டு சிதறடிக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலை சமூக இயங்கு தளத்திலும் தாக்கம் செலுத்துகிறது. இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என்ற முதுமொழி இள வயதினர்களிடையே சரியான புரிதல்கள், தன்னிலையுணர்தல் கல்வியறிவு நிலை என்பவற்றுக்கு பெற்றோர்கள் சரியான அடித்தளமிட வேண்டும். சிறந்த அத்திவாரம் அமைந்தால்தான் கட்டடம் பலமாக சிறப்புற்றிருக்கும். இல்லையேல் சில காலங்களின்பின் அக்கட்டடம் உடைந்து விழக்கூடிய அபாயங்களும் காணப்படும். அதேபோலத்தான் எமது வாழ்க்கைகளும் பெற்றோர் தமக்கிடையே சரியான புரிந்துணர்வுகளுடன் அன்னியோன்னியமாக ஒத்திசைவுடன் வாழப் பழகினால் அவர்களது பிள்ளைகளின் சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கிய பயணம் பிரகாசமானதாக இருக்கும். இல்லையேல் எதிர்கால சந்ததியின் வளமான வாழ்வு கேள்விக்குரியதாகிவிடும். இவ்விடயத்தைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொண்டு செயற்பட முன்வரவேண்டும் என்பதே எமது தாழ்மையான வேண்டுகோள்.

- உதிஷ்டிரன்

# பெண்களும் சட்டங்களும் 07



*(சென்றவாரத் தொடர்ச்சி)*

பெண் கல்வியின் ஆரம்பம்

மேலைத்தேச அறிவியல் வளர்ச்சியோடு ஆரம்பமாகி எமது பிரதேசத்திற்கும் புதிய பரிமாண வடிவத்தைக் கொடுத்தது. இலங்கையில் போத்துக்கேயரின் வருகையோடு ஏற்பட்ட சிந்தனைப் புரட்சியும், சிந்தனை மாற்றங்களும் பெண்களுக்கு கல்வி மற்றும் எழுத்தறிவும் அவசியம் என்பதை உணர்த்தியது. இக்கால கட்டத்தோடு ஏற்பட்ட எழுச்சியானது மரபு நிலைக்கும் நவீனத்துவத்திற்கும் இடையே நடைபெறப்போகும் மாற்றங்களின் சுட்டியாக காட்டப்பட்டது.

போர்த்துக்கேயரின் வருகையோடு இடம்பெற்ற கட்டாய மதமாற்றத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட சமூக மாற்றங்கள் பெண்களை விழிப்பூட்டியது. அந்நிய

**இலங்கையில் போத்துக்கேயரின் வருகையோடு ஏற்பட்ட சிந்தனைப் புரட்சியும், சிந்தனை மாற்றங்களும் பெண்களுக்கு கல்வி மற்றும் எழுத்தறிவும் அவசியம் என்பதை உணர்த்தியது**

மான பழக்கவழக்கங்கள், மொழி, பாடசாலைகளின் நிறுவன மயப்பட்ட வருகை யாவும் யாழ்ப்பாண பெண்களிடையே புதியதோர் மாற்றத்தை ஏற்படுத்தியது. பெண்கள் தேவாலயங்களில் நடைபெறும் விழாக்களில் பங்கு பற்றினர். சிறுமிகளுக்கு பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி புகட்டப்பட்டது. பெண்களுக்கு தேவாலயங்களில் மாலைநேர வகுப்புக்கள் நடைபெற்றன. ஆனால் பெண்களுக்கென்று தனிப்பாடசாலைகள் நடைபெறவில்லை. இவ்வாறு ஏற்பட்ட மாற்றம் யாழ்ப்பாண சமூகத்தில் மிகப் பாரிய தாக்கத்தையும் சமூக மாற்றத்தையும் ஏற்படுத்தியது. இப்புதிய உணர்வுகள் புதுமைப்பெண் என்ற உணர்வை பெண்கள் மத்தியில் தூண்டியது. அந்நிய மொழியறிவு, புதிய நாகரிக உடைகள், பணம் படைத்த நடுத்தர வர்க்க ஆண்கள் யாவையுமே பெண்கள் வாழ்வியலில் மாற்றத்தை ஏற்படுத்தியது. புதிதாக வீட்டை விட்டு புறப்படத் துணிந்த நடுத்தரவர்க்கப் பெண்கள் தமது தேசிய அடையாளத்தையும் தேசிய கலாசாரத்தையும் விடவில்லை. அதேபோல ஏனைய பெண்களும் அதனை விட்டுவிடக்கூடாது என விரும்பினர். இதனால் கலாசார சீரழிவு ஒன்று அப்போது இருக்கவில்லை.

கல்விக்கான சந்தர்ப்பங்கள் விரிவுபடுத்தப்பட்டதனால் பெண்கள் உயர் கல்வி கற்கும் வாய்ப்புக்களும் ஏற்பட்டன. மத்தியதர வர்க்கத்தின் எழுச்சி பெண்களும் மேற்குலப் பெண்கள் போல் கல்வியறிவு பெறவேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டிருந்த போதிலும் யாழ்ப்பாண சமூகத்தின் ஆணாதிக்க சிந்தனைகள் சமூக பழக்க வழக்கங்களை தகர்த்தெறியும் போக்கிலிருந்து அவை நழுவி விட்டதாகவே அறிய முடிகின்றது.

ஆயினும், ஏற்பட்ட சமூக மாற்றம் பெண் கல்வி யாவும் எவ்வகையான மாற்றங்களை யாழ்ப்பாண சமூகத்தில் ஏற்படுத்தின என்ற விடயங்கள் வெளிப்படுத்தப்படாத புதிராகவே உள்ளது.



தற்கால அல்லது இன்றைய பெண்கள் பற்றிய சமூக விழிப்புணர்வு ஓர் பாய்ச்சல் வேகத்தில் யாழ்ப்பாண சமூகத்தில் மரபு வழிகளைப் புறந்தள்ளும் போக்கைக் கொண்டதாக மாற்றமடைந்து வருகின்றது. கல்வியில் முன்னேற்றமடைந்து சாதனைகளைப் படைத்துவரும் பெண்கள் தங்களுக்கெதிராக சமூகத்தில் நிலவும் தடைகள், ஆணாதிக்க சிந்தனைகளை எதிர்த்துப் போராடத் தொடங்கி விட்டனர். தந்தை வழி ஆணாதிக்க சமூக கட்டமைப்பு பேணப்படாத ஒன்று என எதிர்த்துப் போராடி வரும் பெண் விடுதலை இயக்கங்கள் அரசியல் சமூக ரீதியான மாற்று வழிகள் பெண்களுக்குத் தேவை எனக் குரல் கொடுக்கின்றன. எது எப்படி இருந்த போதிலும் போராட்டங்களின் தாக்கங்கள் இன்றும் யாழ்ப்பாணப் பெண்களின் குடும்பத்திலும் சமூகத்திலும் பெண்களின் நிலையில் அதிக மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. யாழ்ப்பாணப் பெண்களின் திருமண வாழ்க்கை முறைகள் ரோமன் சட்டத்தின் அறிமுகத்தோடு சீர்ப்படுத்தப்பட்டபோதிலும் சொத்துரிமை, சீதனம் போன்ற வழக்காற்று முறைகள் தற்போதும் பெண்களை தாக்கத்திற்குள்ளாக்குவதாகவே உள்ளன.

*(தொடரும்)*

● **சரோஜா சிவசந்திரன் (M.A.)**
*மகளிர் விவகார அமைச்சின்*
*தேசிய மகளிர் குழுவின் அங்கத்தவர்*

# மூலிகை மருத்துவம்

## சிறு பீழை

**Biw Alrva lanata**

O.N:- சிறு கண் பீழை, கற்பேதி, பாஷணபேதி



**உபயோக பாகம் :** சமூலம்

**சுவை :-** கைப்பு

**வீரியம் :-** வெப்பம்

**விபாகம் :-** ககு

**செய்கை :-** சிறுநீர் பெருக்கி
கற்கரைச்சி

**குணம்** - இதனால் பாண்டு ரோகம், பெரும்பாடு, நீரடைப்பு, கல்லடைப்பு, நீர் எரிச்சல், குருதிச்சூடு என்பன தணியும்.

**உபயோகம்** - இதன் இலைச்சாற்றில் 1/8 - 1/4 ஆழாக்கு (1/4 - 1/2 அவுன்ஸ்) கொடுத்துவர கல்லடைப்பு நீர் அடைப்பு என்பன தணியும்.

சிறுபீழை வேர்ப் பட்டையுடன் சம அளவு பனை வெல்லம் சேர்த்து மை போன்று அரைத்து 1/2 ஆழாக்கு பசுப்பால் கலந்து காலை, மாலை உட்கொண்டு வர மேலே சொல்லப்பட்ட ரோகங்கள் தணியும்.

ஏதாவது கஞ்சிவகை போன்று சிறுபீழை வேர் சேர்த்துக் காய்ச்சிக்கொடுக்க சூல் கொண்ட பெண்களுக்கு வலிமையைக் கொடுக்கும்.

சிறுபீழை, சமூலக்குடிநீர், சிறுபீழை சமூலம், சிறு நெருஞ்சில், மாவிலங்கை வேர், பேராமட்டி இவற்றை எடுத்து முறைப்படி குடிநீர் செய்து கொடுக்க கல்லடைப்பு நீங்கும்.

**ரி. உமா** *(3 ஆம் வருடம்)*
லங்கா சித்த - ஆயுர்வேதக் கல்லூரி - சுன்னாகம்.

# யோகாசனமும் ஆரோக்கிய வாழ்வும் 13

(சென்ற வாரத் தொடர்ச்சி)

**15. உஷ்ராசனம். (ஒட்டகவடிவ ஆசனம்)**

**செய்முறை :** 1. நேராக நிமிர்ந்து உட்கார்ந்து கால்களை நீட்டி பாதங்கள் இணைந்திருக்கட்டும். உள்ளங்கைகள் புட்டத்துக்கு இருபக்கவாட்டிலும் தரையில் பதிந்திருக்கட்டும்.

2. வலது முழங்காலை மடித்தும் பின் இடது முழங்காலை மடித்தும், பாதங்களை புட்டத்துக்கு கீழே வைக்கவும். (வஜ்ராசனம்)

3. முழங்கால்களின் மேல் நின்று உடம்பை நேராக வைக்கவும்.

4. உடம்பை பின்புறம் மூச்சை வெளிவிட்டவாறு வளைத்து உள்ளங்கைகளை உள்ளங்கால்களின் மேல் ஊன்றவும். உச்ச நிலையில் ஆழமாக ஒரு நிமிடம் வரை சுவாசிக்கவும்.


5. பின் மெதுவாக உள்ளங்கைகளை விடுவித்து 3 ஆம் நிலைக்கு வரவும்.

6. பின் மெதுவாக குதிக்கால்களின் மீது உட்காரவும். (வஜ்ராசனம்)

7. இடது காலையும் பின் வலதுகாலையும் மெதுவாக விடுவித்து ஆரம்ப நிலைக்கு வரவும்.

**பலன்கள் :** மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டம் அதிகரிக்கும், சிறுநீரகங்கள் நன்கு வேலை செய்கின்றன. முதுகுத்தண்டு வளையும் தன்மை பெறுகின்றது. வயிற்று உள்ளுறுப்புகள் நன்கு வேலை செய்கின்றன. நெஞ்சுப் பகுதி நன்கு விரிவடையும். இதனால் முதுகு வலி, சுவாசக்கோளாறு, முழங்கால்கள், கணுக்கால்கள், இடுப்பு வலிகள் போகும். குடற்புண்கள், வாயுக் கோளாறுகள் நீங்கும். ஜீரண சக்தி அதிகரிக்கும்.

**14. அர்த்தமத்ஸ்யேந்திராசனம்** (பாதிமுறுகிய தோற்றம்)



**செய்முறை :**

1. நேராக நிமிர்ந்து உட்கார்ந்து கால்களை நீட்டி பாதங்கள் இணைந்திருக்கட்டும். உள்ளங்கைகள் புட்டத்தின் இருபக்கமும் ஊன்றியிருக்கட்டும்.

2. வலதுகாலை மடக்கி குதிக்காலை இறுக்கமாகத் தொடையின் கீழ்ப்பாகத்தில் வைக்கவும்.

3. இடதுபாதத்தை வலது தொடையின் வலது பக்க முழங்காலுக்கருகில் வைக்கவும்.

4. வலது கையை வலது மார்புக்கும் இடது முழங்காலுக்கும் ஊடாகச் செலுத்தி இடது முழங்காலின் வெளிப்புறப் பகுதி மீது பதிந்திருக்கட்டும்.

5. இடக்கை முதுகைச்சுற்றிச் சென்று வலத் தொடைப் பகுதியை தொட முயற்சிக்கட்டும்.

6. உடம்பை நிமிர்த்தி பார்வை இடது தோளின் மீது இருக்கட்டும். உச்ச நிலையில் ஆழமாக ஒரு நிமிடம் வரை சுவாசிக்கவும்.

7. இடக்கையை விடுத்து 4 ஆம் நிலைக்கு வரவும்.

8. மெதுவாக முழங்காலை வெளிப்புறம் சுற்றியுள்ள வலதுகையை விடுத்து மூன்றாம் நிலைக்கு வரவும். பின் 2ஆம் நிலைக்கு வந்து பின் ஆரம்ப நிலைக்கு வரவும்.

**பலன்கள்:**

முதுகெலும்பை நன்றாக முறுக்கேற்றி உரமேறச் செய்கின்றது. கீழ் முதுகு, முள்ளந்தண்டு வளையும் தன்மைபெற்று ஆரோக்கியமடைகின்றது. கல்லீரல், மண்ணீரல், பங்கிரியஸ், சிறுநீரகங்கள், சிறுநீர்ப்பை குடல்கள் என்பன அழுத்தப்பட்டு அவற்றின் செயற்பாடு அதிகரிக்கின்றன. ஆண்மை, பெண்மைத் தன்மை அதிகரிக்கும். பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் கோளாறுகள் முதலிய உடலியல் ரீதியான பிரச்சினைகள் கட்டுப்படுத்தப்படும். விந்து உற்பத்தியை கூட்டுகின்றது. அட்ரீனஸ் சுரப்பி நன்கு வேலை செய்கின்றது. கர்ப்பம் சம்பந்தமான பிரச்சினை இல்லாமல் போகும். மலச்சிக்கல், சிறுநீரகக் கோளாறு மூட்டுவலி, சமிபாட்டுப் பிரச்சினை மற்றும் வாயுக்கோளாறுகளுக்கு நல்ல பயிற்சி. சோம்பலை நீக்கி சுறுசுறுப்பை ஏற்படுத்தும். நீரிழிவு நோய் குணமாகும். அதிக இரத்த ஓட்டம் உண்டாகி இளமைப் பொலிவு பெறும்.

(தொடரும்)

எஸ். நதிபரன்

# HOME டிப்ஸ்

★ சாலட் தயாரிக்கப் பச்சைக் காய்கறி போதவில்லை என்றால் பொடியாக நறுக்கிய வெங்காயத்தோடு உதிர்த்த பச்சைப் பட்டாணி அல்லது வேகவைத்த கொண்டைக் கடலையை சேர்த்துப் பரிமாறலாம்.

★ சூப்பை அலங்கரிக்க, சுவை கூட்ட - நறுக்கிய கொத்தமல்லித் தழை அல்லது நறுக்கிய வெங்காயம் சேர்க்கலாம்.

★ முள்ளங்கி பரோட்டா செய்ய துருவிய முள்ளங்கியை மெல்லிய துணியில் மூட்டை கட்டி சாறை எடுக்கவும். மூட்டையில் உள்ள துருவலை மாவுடன் சேர்த்துப் பிசையவும். உப்பு சேர்த்தாலும் தண்ணீர் அதிகமாகாது. பரோட்டாவை உருட்டுவதும் சுலபம்.

★ குஜியா (gujia) ஃபில்லிங்கை அதிக எண்ணெயில் பொரிக்கும் போது பிரியாமல் இருக்கச் சிறிது மா சேர்க்கவும்.

★ விரிசல் விட்ட முட்டையை வேக வைக்கும் போது ஒரு தேக்கரண்டி வினிகர் சேர்த்தால் முட்டை கசியாமல் இருக்கும்.



★ கறியில் தயிர் சேர்ப்பதற்கு முன்பு ஒரு தேக்கரண்டி கடலை மாவைத் தயிரில் கலக்கவும். அதனால் கொதிக்கும்போது தயிர் பிரியாமல் இருக்கும்.

★ உணவுப் பாத்திரத்தில் உப்பின் சுவை அதிகமாக இருந்தால் கீழ்க் கண்டவற்றுள் எதையாவது சேர்ப்பதால் உப்பின் சுவை குறையும். பால், க்ரீம், வேக வைத்து உரித்த உருளைக்கிழங்கு ஒரு சிட்டிகை சக்கரை லேசாக வறுத்த கடலை மா சப்பாத்தி மாவால் ஆன உருண்டைகள்.

★ ஆம்லெட் தயாரிக்க அடித்த முட்டையோடு ஒரு ரொட்டித் துண்டைத் தண்ணீரில் நனைத்துப் பிசைந்து சேர்க்கவும்.

★ பக்கோடா கரகரவென்று பொரித்து எடுக்க கடலை மாவோடு சிறிது மக்காச்சோளம் சேர்க்கவும்.

★ வேர்கடலையையும், எள்ளையும் வறுத்துப் பொடியாக்கவும். கிரேவி கெட்டியாக ஆவதற்குஇந்தப் பொடியைச் சேர்க்கலாம்.

★ அப்பளத்தைப் பொரித்தவுடன் சின்ன எவர் சில்வர் பாத்திரத்தில் வைத்து சூடாக இருக்கும் போதே அதன் பக்கங்களை அழுத்தி விடவும். அந்தப் பாத்திரத்தின் உருவத்தில் அப்பளம் ரெடி. புது விதமாக அப்பளம் பரிமாறலாம்.

★ ஆம்லெட்டுடன் காய்கறி சேர்ப்பதால் அதிக ஊட்டச் சத்தைப் பெறலாம்.

# ஒளிக் கீற்றுகள்

தொகுப்பு: அஸ்வின்



# இளம் குறும்பட இயக்குநர்

# ரெ.நிஷாகரன்

**யாழ்ப்பாணத்தில் இன்று இளைஞர்கள் குறும்பட உருவாக்கங்களில் தமது ஈடுபாட்டை காட்டி வருகிறார்கள். தயாரிப்பு, இயக்கம், இசையமைப்பு, கதை ஆக்கம் எனப் பல்வேறு வகையில் தங்களின் திறமைகளை வெளிக்காட்டி வருகிறார்கள். அந்த வகையில் 'காயம்' குறும்படத்தின் மூலம் தன்னை இயக்குநராக அறிமுகப்படுத்திக் கொண்ட சுண்டிக்குழியைச் சேர்ந்த ரெங்கநாதன் நிஷாகரன் இன்று பல்வேறு துறையில் தன்னை வளர்த்துக் வருகின்றார். ஒளிக்கீற்றுகள் பகுதிக்காக அவரை நாம் சந்தித்தபோது....**

**★ உங்களைப் பற்றி ஓர் அறிமுகம் ...?**

நான் ரெங்கநாதன் நிஷாகரன். சென். ஜோன்ஸ் கல்லூரியில் கலைப்பிரிவில் கல்வி கற்று இவ்வருடம் பரீட்சைக்குத் தோற்றியுள்ளேன். என் சொந்த இடம் சுண்டிக்குழி. வீட்டில் அப்பா, அம்மா, அண்ணா, அக்கா உள்ளனர்.

**★ இந்த இளம் வயதில் குறும்படம் இயக்க வேண்டும் என்ற ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது?**

எனது தந்தையார் யாழ்ப்பாணத்தில் அபர்ணாலயா, சாரங்கா இசைக் குழுக்களில் பாடகராக இருந்தவர். அதனால்தான் என்னவோ சிறு வயது முதல் எனக்கு இசைத் துறையில் நாட்டம் அதிகம். ஆரம்பத்தில் திரைப்பட இயக்கம் பற்றி நான் சிந்தித்தது கூட இல்லை. எனது அண்ணன் துவாரகன் இந்தியா சென்று திரைப்பட இயக்கம் பற்றி கற்று வந்தார். அவரின் தூண்டுதலாலும் சிறு வயது முதல் நான் ரஜினியின் தீவிர ரசிகனாக இருந்ததாலும் எனக்கு திரைப்படத்தில் நடிக்க வேண்டும் என்ற ஆர்வம் மட்டுமே இருந்தது.

யாழ்ப்பாணத்தில் AAA மூவிஸ் நிறுவனத்தின் 2010 இற்கான குறும்படப் போட்டி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்போட்டிக்கென எனது முதல் குறும்படத்தை இயக்கினேன். இதற்கு வழிகாட்டியாக இருந்தவர் என் அண்ணா.

**★ காயம் குறும்படம் இயக்கும்போது என்ன நோக்கத்தோடு, எதிர்பார்ப்போடு உருவாக்கினீர்கள்?**

எந்தவொரு எதிர்பார்ப்பும் இல்லாமல் உருவாகியதே காயம் குறும்படம். போட்டியில் பங்குபற்ற வேண்டும் என்ற நோக்கத்துடனேயே அதை இயக்கினேன். AAA யின் 2010 இற்கான குறுந்திரைப்படப் போட்டியில் பாடசாலை மட்டப் பிரிவில் 7 விருதுகளை காயம் வென்றது. இந்த வெற்றி எனக்கும் எனது நண்பர்களுக்கும் குறும்பட இயக்கத்தில் இளருந்த ஆர்வத்தை மேலும் தூண்டியது. (காயம் குறும்பட உருவாக்கத்திற்கு ஊக்கமளித்த எமது கல்லூரி அதிபர் வண. என்.ஜே. ஞானப்பொன்ராஜா, ஆசிரியர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளை இதன் போது தெரிவிக்கின்றேன்).

எம்மைவிட எமது வெற்றியில் மிகவும் சந்தோஷமடைந்தவர் பனை மரக்காடு திரைப்பட இயக்குநர் ந. கேசவராஜா தான். இத்துறையில் எமக்கு அவர் நல்லதொரு வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும் குருவாகவும் இருக்கின்றார். தற்போது அவரிடம் உதவி இயக்குநராக பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். இச் சந்தர்ப்பத்தை எனக்குத் தந்த தயாரிப்பாளர் க. செவ்வேளுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**★ குறும்படத்தின் மூலமாக இளைஞர்களிடையே எவ்வாறான மாற்றத்தைக் கொண்டுவரலாம் என்று நினைக்கிறீர்கள்?**

தற்போது யாழ்ப்பாணத்தில் பல இளைஞரக்ள் குறும்பட இயக்கத்திலும் இசைத் தொகுப்புக்களை உருவாக்குவதிலும் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர். இதுவே பெரியதொரு மாற்றமாக தான் நான் கருதுகின்றேன். தற்போது குறும்படங்கள் வெளியாவது அதிகரித்துள்ளதைப் போன்று அதனைப் பார்ப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்குமிடத்து நாம் பல நல்ல விடயங்களை சமூகத்திற்கு குறும்படங்கள் மூலம் இலகுவாக எடுத்துச் சொல்லலாம். இதற்கு எமக்கு ஊடகத்துறை சார்ந்த நண்பர்களினது ஒத்துழைப்பு மிகவும் அவசியம். இன்று கலைப்படைப்புக்கள் அனைத்தும் தொழில்நுட்பம் சார்ந்தே செல்கின்றன. அவற்றோடு நாமும் சேர்ந்து பயணிக்க வேண்டிய தேவை இப்போதுள்ளது.

**★ உங்களின் அடுத்த படைப்புக்களைப் பற்றி கூறுங்களேன்?**

இந்த வருடம் ஷானா என்ற குறுந்திரைப்படத்தை இயக்கியுள்ளேன். எனது முதற் குறும்படத்தை விட இதற்கு அதிகளவு வரவேற்பு இத்துறை சார்ந்த பெரியோர்களால் கிடைத்துள்ளது. எனது நண்பர் பிரணவனுடன் இணைந்து இசைத் தொகுப்தொகுப்பொன்றை உருவாக்கி வருகின்றேன். இதனைத் தவிர ஒரு குறும் படத்திற்கும் இரு இசைத் தொகுப்புக்களுக்கும் இருவரும் இணைந்து இசை அமைத்து வருகின்றோம். ஹிமாலயா கிரியேஷன்ஸ் திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தின் மூலம் எனது சகோதரனின் தயாரிப்பில் மிகவும் பிரம்மாண்டமானதொரு திரைப்படத்தினை உருவாக்குவதற்கான முன் ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டுள்ளோம். இத்திரைப்படத்தின் தொழில் நுட்பத்துறையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல இளைஞர், யுவதிகள் பணியாற்ற உள்ளனர். அதிகளவு தொழில் நுட்ப வசதிகள் இக்கதைக்குத் தேவைப்படுவதனால் அதற்கான தேடல்களில் ஈடுபட்டு வருகின்றேன். இத்திரைப்படத்திற்கான பின்னணி இசையினை இசையமைப்பாளர் எஸ்.ஜே. ஸ்ரலினும் 3 D Animation and Visual Effects னை ரி. சிவநேசனும் உருவாக்கவுள்ளனர்.

இதற்கு உங்கள் அனைவரது ஒத்துழைப்பினையும் எதிர்பார்க்கின்றோம்.

## குறும் திரைப்பட விமர்சனம்

### நெருஞ்சி

வாழ்க்கையில் தோல்விகளாலும் அவமானங்களாலும் சோர்ந்து போன மனிதன் சாவுதான் முடிவென சாவைத் தேடி பயணிக்கின்றான். அவன் பயணிக்கும் வழி எங்கும் சவாலான பல தடைகள் அவனைத் தடுக்கின்றன. அதையும் தாண்டி மரணத்தை நோக்கிச் செல்கின்றான். கல்லறைகள் நிறைந்த சவச்சாலையில் முடிவு இதுதான் என மரணிக்க முற்படுகின்றான்.

'சவால்களை ஏற்காத மனிதனை சாவும் ஏற்காது' என்ற கருப்பொருளை கதையாக்கி நெருஞ்சி என்ற குறும்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஜெயா புரடெக்ஷன் சார்பில் ஜெயா இயக்கியுள்ள இப்படத்தில் தோல்விகளால் துவண்டு போகும் ஓர் இளைஞன் சாவை நோக்கிச்செல்வதைக் காட்டுகின்றது. அவன் வாழ்க்கையில் விரக்தியுற்று வீதியில் நடந்து போகின்றான். அவன் போகும் பாதையில் நிறையத் தடைகள் வருகின்றன. கல்லில் தடக்கி விழும்போது அவன் தலையில் சுமந்து சென்ற பொதியிலிருந்த பொருட்கள் கீழே விழுகின்றன. அதில் அவன் காதலியின் நினைவுச் சின்னங்கள். அவற்றைப் பார்க்கும்போது அவளின் நினைவு அவனுக்கு வருகின்றது. இவனை அவள் இறுதியில் வெறுத்துச் சென்றதை நினைக்கின்றான். எழுந்து மீண்டும் செல்லும்போது முள், பனை ஓலை, முறிந்த பனைமரம் என்பவற்றால் காயப்படுத்தப்படுகின்றான். அதன் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தான் வீட்டில் உள்ளவர்களாலும் நண்பர்களாலும் ஒதுக்கப்பட்ட சந்தர்ப்பங்களை நினைத்துப் பார்க்கின்றான். இந்த உலக வாழ்க்கையே வேண்டாம் என்ற மனநிலையுடன் பயணிக்கின்றான். சவச்சாலையிலுள்ள யேசுநாதரின் சிலை முன் இறுதியாக விழுகின்றான். அப்போது சிலையின் அடியில் எழுதியிருக்கும் வாசகத்தைப் பார்க்கின்றான். அதில் 'சவால்களைக் கடக்காதவனை மரணம் ஏற்காது' என எழுதப்பட்டிருக்கின்றது. சிந்திக்கின்றான். எழுந்து வந்த பாதையை நோக்கி ஓடுகின்றான். முதலில் தடையாக இருந்தவற்றை விலக்கி ஓடுகின்றான். ஒவ்வொரு தோல்விக்கும் அவமானத்திற்கும் நிந்தைக்கும் தற்கொலை தீர்வல்ல என்ற வாசகத்துடன் படம் நிறைவு பெறுகின்றது.

இப்படத்தில் கதையும் திரைக்கதையும் மிகச் சிறப்பாக உள்ளன. வாழ்க்கையில் ஏற்படும் தடைகளை எவ்வாறு தாண்ட வேண்டும் என்பதையும் சவால்களைக் கண்டு பயப்படாமல் அதனை எதிர்கொள்பவன் தான் மனிதன் என்பதையும் இப்படம் எடுத்துக் காட்டுகின்றது.

தோல்விகளுக்கும் அவமானங்களுக்கும் தற்கொலை ஒருபோதும் தீர்வாகாது என்ற கருத்தை ஒளிப்படமாகக் காட்டியுள்ளார் இயக்குநர் ஜெயா. தான் எண்ணியதை ஒருமனிதனினூடாக கொண்டு வந்துள்ள இயக்குநர் ஒளிப்பதிவிலும் இசையிலும் அதனைத் தவறவிட்டுவிட்டார். ஒளிப்பதிவில் காட்சிகளின் மாற்றத்தில் வெளிச்சத்தின் வேறுபாடுகள் தெரிகின்றன. இதனை இயக்குநர் கவனித்திருக்கலாம். சவச்சாலைக்கு செல்லும் போது இருளாகவும் வரும்போது வெளிச்சமாகவும் காட்சிகள் தெரிகின்றன. இதனை ஒளிப்பதிவின்போது கவனித்திருக்க வேண்டும்.

இசை படத்தோடு அவ்வளவாக ஒன்றிக்கவில்லை. காட்சிகள் மாறும்போது இசையால் வேறுபாட்டை காட்ட இயக்குநர் முயன்றாலும் அது சரியாக அமையவில்லை. உரையாடலின் ஒலிப்பதிவிலும் ஏற்ற இறக்கம் தெரிகின்றது. இக் குறும்படத்தின் ஒளிப்பதிவை அனித்தும் படத்தொகுப்பை முரளியும் செய்துள்ளார்கள். அகிலன் முக்கிய கதாபாத்திரமேற்று நடித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருக்கும் தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு குறைந்த செலவில் இக்குறும்படம் உருவாக்கப்பட்டுள்ளது. கொஞ்சம் கவனம் எடுத்திருந்தால் இப்படம் இன்னும் சிறப்பாக வந்திருக்கும். இயக்குநர் ஜெயாவின் முதல் முயற்சி என்பதால் அவரையும் அவருடன் இப்பட உருவாக்கத்திற்கு துணை நின்ற நண்பர்களையும் பாராட்டலாம்.

# மருத்துவத்தால் உடல் காயங்களை ஆற்றினாலும் உளக்காயங்களை இலகுவில் மாற்றமுடியாது



வைத்திய கலாநிதி எஸ்.சிவதாஸ்

(சென்றவாரத் தொடர்ச்சி)

**கேள்வி: வன்னி உறவுகளுடன் நீண்ட காலம் கடமையாற்றிய அனுபவம் தங்களுக்கு இருக்கின்றது. பொதுவாக பாதிக்கப்பட்டவர்கள் (client) உங்களிடம் வரும்போது பொதுவாக என்னென்ன அறிகுறிகளுடன் வருவார்கள்?**

**பதில்:** ஆம் நான் கடமையாற்றும் வவுனியா வைத்திய சாலையில் வெளி நோயாளர் பிரிவில் அதிகளவு மக்கள் திரண்டு இருப்பார்கள். ஒவ்வொருவரும் தமக்கு இருக்கும் பிரச்சினைகளை வெவ்வேறு விதமாக வெளிப்படுத்துவார்கள். அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு உளவியல் பிரச்சினைகளே அதிகம் இருக்கும். ஆனால் இவர்கள் தமக்கு உளநலப்பிரச்சினை உண்டு என்பதை தெரிந்தோ தெரியாமலோ ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். சிகிச்சைபெற வருபவர்கள் மெய்ப்பாட்டு முறைப்பாடுகளுடன்தான் (somatic complaints) வருவார்கள். மனதிலே பிரச்சினைகள் இருந்தால் உடலிலும் இதன் தாக்கத்தை உணர முடியும். குறிப்பாக நெஞ்சு நோ, தலையிடி, பசியின்மை, நித்திரையின்மை, தலைச்சுற்று, பதகளிப்பு, நாரி நோ முதலிய பல்வேறு நோய் அறிகுறிகள் காணப்படும். இவர்களுக்கு மனரீதியான பிரச்சினை தான் இருக்கும். ஆனால் மன ரீதியான பிரச்சினை தான் இருக்கிறது என்று நேரடியாகக் கூறினால் ஏற்க மாட்டார்கள். எனவே தான் மனந்திறந்து அவர்களிடம் கதைத்தால்தான் அவர்களுக்குத் தேவையான மருத்துவ முறைகளை பிரயோகிக்க முடியும்.

**கேள்வி : மெய்ப்பாட்டு முறையீடுகள் என்றால் என்ன?**

**பதில் :** மெய்ப்பாட்டு முறையீடுகள் என்பது மனப் பிரச்சினையை உடல் ரீதியாக வெளிப்படுத்துவதாகும். மனக் காயத்தை வெளிப்படுத்தும் மொழி உடல் மொழி தான். எனவே தான் மனக் காயங்களை உடல் ரீதியாக மேற் சொன்ன நோய் அறிகுறிகளினூடாக வெளிப்படுத்துகின்றனர். இவர்களுக்குத் தேவையான சிகிச்சைகளை எமது நவீன மருத்துவத்தினூடாக தீர்க்க முடியும். ஒருவர் இழப்புத் துயரில் (grief) மூழ்கியிருக்கும் போது அவர் சரியான முறையில் சிந்தித்து முடிவெடுக்கும் ஆற்றல் இல்லாமல் இருப்பார். தன்னைப் பற்றிய சுய கவனிப்பு எதிர் மறையானதாக இருக்கும். எனவே தான் இவர்களுக்குரிய உள சிகிச்சைகளை முறைப்படி வழங்க வேண்டும். இல்லையானால் நீண்ட காலத்தில் மீண்டும் பல உளப்பாதிப்புக்களை இழப்புத் துயர் கொண்டுவரும். இதனை ஆங்கிலத்தில் (reemerging grief) என்று கூறுவார்கள். எனவே பாதிக்கப்பட்ட ஒருவருக்கு தகுந்த சிகிச்சைகளை முறையாக வழங்கும்போதுதான் அவர் நீண்ட காலத்தில் ஆரோக்கியமானவராக வாழ முடியும்.

**கேள்வி : தமிழ்ச் சமூகத்திற்கு மன நல மருத்துவம் என்ற ரீதியில் நீங்கள் அளித்துள்ள, அளித்துவரும் பங்களிப்புகள் எவை. அப்பங்களிப்புகள் சமூகத்தில் எவ்வளவு பிரதிபலிப்புக்களை ஏற்படுத்துகின்றன?**

**பதில்:** ஒவ்வொரு மனிதரும் மகிழ்ச்சியுடன் வாழ்வதையே விரும்புகின்றனர். ஒவ்வொருவருக்குள்ளும் இன்பமும் துன்பமும் உறைந்து காணப்படுகின்றன. மகிழ்ச்சியாக இருப்பதற்குரிய வழி வகைகள் பற்றி பல கோணங்களில் அலசுகின்ற 'மகிழ்வுடன்' என்ற நூலை வெளியிட்டேன். ஒருவர் மகிழ்ச்சியாக இருப்பதால் நலமாக இருக்கின்றார் என அர்த்தப்படுத்தி விட முடியாது. நலமுடையவர்களாக வாழ்வதற்கு மகிழ்ச்சிக்கு அப்பாலும் சில விடயங்கள் இருக்கின்றன. இதை பல கோணங்களில் ஆராயும் விதத்தில் மகிழ்வுடன் என்ற நூலையும் எழுதி வெளியிட்டேன். நூல் ஒன்றை வெளியிட்டு அதனை மக்கள் மத்தியில் சென்றடையச் செய்வதென்பது கடினமான பணியாகும். ஆனால் எனது இரு நூல்களும் மக்களிடத்தில் வெற்றிகரமாகச் சென்று காத்திரமான மாறுதல்களை ஏற்படுத்தின என்றால் மிகையில்லை. அத்துடன் மனநல மேம்பாடு பற்றி இத்தீவு முழுவதும் கருத்தரங்குகளை நடத்திவருகின்றேன். யுத்தத்தினால், சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலும் மற்றும் வறுமை, மதுப்பாவனை, போதை வஸ்து பாவனை, உள சமூக பிரச்சினைகளால் பாதிப்படைந்த பிரதேசங்களுக்கும் சென்று கருத்தரங்குகளை நடத்தி மக்கள் மனங்களில் நேர்க்கணிய மாறுதல்கள் பலவற்றை ஏற்படுத்தியிருக்கிறேன்.

அத்துடன் வவுனியா செட்டிக்குளத்தில் போரினால் பாதிப்படைந்தவர்களுக்கு ஆதரவு நல்குவதற்கென்று சுமைதாங்கி என்ற உணர்ச்சி ஆதரவு நிலையம் ஒன்றை கடந்த ஒரு வருடகாலமாக ஆரம்பித்து நடத்திவருகிறேன். தடுப்பு முகாமில் தங்கியிருக்கின்ற பெருமளவு மக்கள் இந்த மையத்திற்கு வந்து தமது மனச்சுமைகளை இறக்கி வைத்துச் செல்வது வழமை. இச்சுமை தாங்கி நிறுவனத்தைப் போல நாமும் நலிவுற்றவர்களுக்கு ஆதரவு தரும் சுமைதாங்கிகளாக இருப்பதுடன் அதற்கு மேலாக குணமாக்கும் வெளியினை (healing space) வழங்குவதற்கு வழிசமைக்க வேண்டியவர்களாக இருக்க வேண்டும். இதற்கு ஊடகங்கள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு நிச்சயம் தேவை.

**கேள்வி : பொதுவாக மக்கள் பல்வேறுபட்ட நெருக்குவாரங்களுக்கு மத்தியில் தான் தமது வாழ்க்கையை நகர்த்த வேண்டியிருக்கிறது. இதனால் பெருமளவானோருக்கு உளப்பாதிப்புக்கள் இருக்கின்றன. ஆனால் இத்தகைய உளப்பாதிப்புக்களை குறைப்பதிலோ அல்லது குணப்படுத்துவதிலோ இன்றைய நவீன மருத்துவ விஞ்ஞானத்தாலும் முடியாமல் இருக்கிறதே?**

**பதில்:**-மனிதனை உடல், மனம் எனப் பிரித்துப் பார்ப்பதினால் அவன் பல சந்தர்ப்பங்களில் மனப் பிரச்சினைகளை உடல் ரீதியாக வெளிப்படுத்துகிறான். வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்களில் 70 வீதமானோருக்கு உளரீதியான பிரச்சினை அதாவது வாழ்க்கை பிரச்சினைகளால் ஏற்பட்ட அழுத்தங்களின் விளைவாக வெளிப்படுத்தும் முன்னர் குறிப்பிட்டவாறு மெய்ப்பாட்டு முறைப்பாடுகளுடன்தான் வருகின்றனர். அதுவே அவர்களுக்கு பழக்கமாகி விடுகிறது. இதற்கு மருத்துவர்களும் ஒருவகையில் காரணம். உதாரணமாக எச்சில் விழுங்குவதற்கு கடினமாக இருந்தால் அது தொண்டை புற்றுநோயாக இருக்கலாம் என எழுந்தமானமாக கூறும் ஒரு மருத்துவரின் அறிவுரை பலரை வைத்தியசாலைக்குச் சென்று தொண்டைக்குழியை பரிசோதிக்க வைக்கிறது.

எந்த விதமான விழிப்புணர்வும் இல்லாமல் உடல் முறைப்பாடுகளுடன் வருபவர்களை நாம் வலிந்து உடல் உள ஒருமைப்பாட்டை வலியுறுத்த வேண்டி ஏற்படுகின்றது. இது மிகவும் பரிதாபமான நிலையாகும். எனவேதான் எம்மைப்பற்றி நாம் புரிந்துகொள்ள முடியாதுள்ளமையே பல்வேறு பிரச்சினைகளுக்கும் காரணமாக அமைகிறது. பூரணத்துவமான மனிதனை புரிந்து கொள்ள முற்படாது விரும்பியவாறு பகுதி பகுதியாக விஞ்ஞானிகளும் மெஞ்ஞானிகளும் பிரித்துப்பார்த்ததன் விளைவாகவே மனிதன் ஆரோக்கிய மற்று அலைந்து திரிய நேர்ந்தது.

கண் மருத்துவர் ஒருவருக்கு நோயாளியின் ஊதிப்போயிருக்கும் வயிற்றைப்பற்றி எந்த அக்கறையும் இல்லை. அதே நோயாளியின் வயிற்றுக்குள் நுண்ணிய கருவியை (lapros copy) விட்டுப் பரிசோதிக்கும் வைத்தியருக்கு அந்த நோயாளிக்கு இருக்கும் மனச் சோர்வு பற்றி (depression) அவதானிக்க வேண்டிய தேவையில்லை.

அதுமாத்திரமன்றி மக்களில் பெரும்பாலானவர்களுக்கு எல்லாவற்றையும் விடுத்து நூல் கட்டுவதிலும் பேய் ஓட்டுவதிலும் நம்பிக்கை வைத்து ஆரோக்கியத்தைப்பேண முயற்சிப்பது நவீன மருத்துவத்தின் பால் இத்தகைய பலவீனங்கள் தோற்றுப்போகும் என எண்ணத்தோன்றுகிறதல்லவா?.

நேர் கண்டவர் :
**எஸ். நதிபரன்**

குடும்பத்தில் ஏற்படும் சச்சரவுகளால் பாதிக்கப்படும் ஒருவருக்கு ஏற்படும் தலைவலிக்கு நவீன மருத்துவத்தில் வைத்தியம் பார்க்க முற்படுவது எவ்வளவு மடமைத்தனமானது. இதற்குப் பின்னால் லாபமீட்டுவதற்கான மருத்துவ நிலையங்களின் நலன் இருப்பதை மறுக்க முடியுமா?.

மருத்துவம் இன்று தனது ஆத்மாவை இழந்து விட்டு வெறும் அலங்காரங்களாகத் தோன்றுவதால் ஆரோக்கியம் பற்றிய பார்வை பெரிதும் பாதிக்கப்படுகிறது. இது வெறுமனே அறியாமை என்பதற்கப்பால் ஒருவித மறுதலிப்புடன் கூடிய திட்டமிட்ட செயல் எனவும் கொள்ள முடியும். எனவேதான் இன்று நெருக்கீடு (stress) என்பதை முதன்மைப் பிரச்சினையாகப் பார்க்கும் மருத்துவ உலகம் மனிதனின் தாங்குதிறனுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களே காரணம் என்பதை சூசகமாகவே மறைத்துவிடப்பார்க்கிறது.

(முற்றும்)

# இலக்கிய இன்பம்

## சங்கத் தமிழர் வாழ்வியல்

கவிஞன் தான் கண்ட எண்ணிய, அனுபவித்த ஒன்றைத் தனது சொந்த உணர்ச்சிகள் சுவறும் வண்ணம் வெளிப்படுத்துவான். தமிழில் தலைசிறந்த கவிஞர்கள் தம் உணர்ச்சிகளைப் புலப்படுத்துவதற்கு இயற்கைக் காட்சிகளைத் துணைக்கழைத்திருப்பதைப் பரக்கக் காணலாம். சங்கப் புலவனின் தனிச் சிறப்புக்களுள் ஒன்று இயற்கைப் பொருட்களைத் தனது உணர்ச்சிகளுக்கான வடிகாலாகக் கொள்வதாகும். சங்கத் தமிழரின் வாழ்வியலை முதல், கரு, உரி என்ற கட்டமைப்பில் வகுத்துக் காட்டிய புலவன் கருப் பொருட்கள் ஊடாகத் தன் உணர்வுகளை வெளிப்படுத்தும் விதம் சிறப்பானது.

சங்க இலக்கியப் பரப்பை எமக்குத் தெளிவுடன் காட்டி நிற்பது தொல்காப்பியப் பொருளதிகாரம். தொல்காப்பிய பொருளதிகாரம் கருப்பொருள் பற்றிப் பின் வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

*'தெய்வம் உணாவே மா மரம் புள் பறை*
*செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ*
*அவ்வகை பிறவும் கரு வென மொழிப'*

என்று தொல்காப்பியப் பொருளதிகாரம் அகத் திணையியலின் 966 ஆவது சூத்திரம் சுட்டிக்காட்டுகின்றது. ஒவ்வொரு நிலத்துக்குமுரிய தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, தொழில், பண்ணிசை என்பனவும் இவையொத்த பிறவும் கருப்பொருள் என்பர் பெரியோர் என்பது இச் சூத்திரத்தின் விளக்கமாகும்.

ஒவ்வொரு நிலத்துக்கும் குறித்துக் காட்டப்பட்ட கருப்பொருள்களுள் பூவும் பறவையும் அந்த நிலத்துக்கும் அதற்குரிய காலத்துக்கும் பொருந்தாமல் வேறொரு நிலத்துக்கு வருமானாலும் அவை அப்படி வந்த நிலத்துக்கு உரிய கருப்பொருளாகவே கொள்ளப்படுமெனவும் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

*'எந்நில மருங்கின் பூவும் புள்ளும்*
*அந்நிலம் பொழுதொடு வாரா ஆயினும்*
*வந்த நிலத்தின் பயத்த ஆகும்'*

*(சூத்- 967)*

இயற்கையோடு பொருந்திய வகையிலும் இயற்கை நிகழ்வுகளின் அவதானிப்பைப் பெற்றுக்கொண்ட வகையிலும் சங்கச் செய்யுள்கள் இயற்கையின் சொல்லோவியங்களாகவே வடிக்கப்பட்டன. மரம், செடி, கொடி, மண், மலர், மலை, காற்று, வானம், விலங்கினம், பறவையினம் முதலான எல்லாமே சங்கப் புலவனின் உணர்வுக் குமிழிகளுக்கு வடிவங்கொடுப்பனவாக அமைந்தன. கருப்பொருள்களுள் விலங்கினங்களையும் பறவைகளையும் சுட்டிக்காட்டுவதன் வாயிலாகத் தான் பாடவிழைந்த விடயத்தையும் தம் உணர்ச்சிகளையும் சங்கப் புலவன் கவிதைச் செறிவுடன் காட்டி விடுகின்றான். நிலத்தில் வாழ்வன, நிலத்திலும் நீரிலும் வாழ்வன, மரங்களில் வாழ்வன, நீரில் வாழ்வன, விண்பரப்பில் வாழ்வன ஆகிய பல பிரிவுகளிலும் அடங்கும். பறவை மற்றும் விலங்கினங்களைப் பற்றி நுணுகி அவதானித்த சங்கப் புலவர்கள் அவற்றை மக்களின் வாழ்வியலோடு பொருத்தமான வகையில் பொருத்திப் பாடியுள்ளனர்.

பறவைகளைத் தம் செய்யுளுக்கான கருப்பொருளாகக் கண்ட புலவர்கள் அவற்றின் பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் முதலானவற்றைச் சுட்டிக்காட்டுவதனூடாக மாந்தரின் உணர்வுநிலைகளை வெளிப்படுத்தினர். மயில், குயில், கிளி, கொக்கு, அன்னம், மைனா, நாரை, அன்றில், குருகு, காகம், புறா, குருவி, சேவல், மீன்கொத்தி, பருந்து, ஆந்தை, கணத்துள், கழுகு, தும்பி, வண்டு முதலான பறவைகள் சங்க இலக்கியப் பரப்பில் கருப்பொருள்களாகக் குறிக்கப்பெற்றுள்ளன.

சங்கச் செய்யுள்கள் பலவற்றில் மயில் என்ற பறவை உணர்வு நிலையை வெளிப்படுத்த உதவும் கருப்பொருளாக அமைவதைக் காணலாம். குறிப்புப் பொருளின் பொருட்டும் உள்ளுறை உவமத்தின் பொருட்டும் கணிசமான செய்யுள்களில் மயில் என்ற பறவை பயன்படுத்தப்பட்டுள்ளது. மயில், மாமயில், அணிமயில், மஞ்ஞை, தோகை, பேடை, முதலான சொற்கள் மயில் என்ற பறவையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கார்காலம் இருந்தல், ஒழுக்கம், புணர்தல் ஒழுக்கம் என்பவற்றோடு தொடர்புடைய கருப்பொருளாக மயில் என்ற பறவை கவனிக்கப்பெறுகின்றது. குறிப்பாக த் தலைவியின் உணர்வு நிலைகளைச் சுட்டுவதற்கு ஏற்ற பறவைகளுள் மயில் அதிகமான புலவர்களின் கவனத்தைப் பெற்றிருக்கின்றது. தலைவன் மீது தலைவி கொண்டுள்ள காதலின் ஆழம் ..........

(தொடரும்)

வே.சந்தியவேந்தன்

## ஊர்ப் புதினம்



*கார் கால மழைக்கு கண்ணில்லை. 'வெளியால எங்கேயும் போய் வரும்போது மழையில் நனையாமலிருக்க தகுந்த ஆயத்தங்களுடன் போக வேணும்'' பெரியவர் ஒருவர் கூறிக் கொண்டிருந்த வார்த்தைகள் என் காதுகளில் விழுந்தன.*

*வாழ்ந்து தாம் பெற்ற அனுபவங்களை மூத்தோர் கூறும்போது அவை எமக்கும் அனுபவங்களைக் கற்றுத் தருவதுடன் சிறப்பாக வழிகாட்டும். மழைக்காலம் இப்போது. இன்று மழை பெய்யாது. காலையில் நல்ல வெய்யில் எறிக்கிறது.*

*குடையில்லாமல் வெளியில் போவோம். உடுப்பை வெளியில் காய விடுவோம் என்றவாறெல்லாம் நினைத்து மழையினால் பாதிக்கப்பட்டிருப்பீர்கள்.*

*அப்பெரியவரின் கூற்றிலிருந்து மழைக் காலம் வந்து விட்டாலே எப்போதுமே மழையிலிருந்து நனையாமலிருக்க முன்னேற்பாடுகளுடன் இருக்கவேண்டும்.*

*திடீர் திடீரென மழை வரலாம். அதனால் மழை தொடர்பான விழிப்பில் எப்போதும் இருக்கலாம்.*

*காலநிலை, சூழல் தொடர்பான அவதானிப்புக்களை பெரியவர்கள் கூறுவதைக் கைக்கொண்டால் நலமாக வாழலாம்.*

*'இளங்கன்று பயமறியாது' என்பது போல பெரியோரின் வார்த்தைகளை அலட்சியம் செய்தால் அதன் விளைவு தீமையாகவே முடியும். மூத்தோர் வார்த்தை தேவாமிர்தம் என்பார்கள். எனவே மண்ணில் நலமுற வாழ பெரியோர் சொற்களை மதிப்போம்.*

● சிவகாமி -

## கவிதைச் சிறகுகள்

சிறகுகள் முளைத்து பறப்போம்
செந்தமிழ் மொழியை வளர்ப்போம்
கொடுமைகள் அழிய எழுதுவோம்
கொள்கைகள் நிலைக்க எழுவோம்

காற்று வெளியில் மிதப்போம்
கவிதை ஒளியில் நடப்போம்
சேற்று வயலில் புரள்வோம்
தேசிய வாழ்வில் இணைவோம்

மரபுகள் காத்து பழகுவோம்
மக்களை நோக்கி பாடுவோம்
புதுமைகள் நிறைய தீட்டுவோம்
புன்னகை வாழ்வை காட்டுவோம்

கொழுந்தின் வியர்வை துடைப்போம்
கூவிடும் குயிலை அழைப்போம்
அகதிகள் வாழ்வை தூக்குவோம்
அழுவோர் கண்ணீரை நீக்குவோம்

செங்கதிர் ஒளியாகி சிவப்போம்
சிவக்கும் விழியாகி உயிர்ப்போம்
தங்கத் தமிழை காப்போம்
தவிக்கும் மனிதங்களை சுமப்போம்

பொங்கல் படைத்து பகிர்வோம்
பொதுமை விளைய உழைப்போம்
சங்கக் குமரியை வணங்குவோம்
சமத்துவ மனங்களை வாழ்த்துவோம்

நல்லை அமிழ்தன்

## மதிப்பு

உத்தமனாய் ஆனாலும்
மறைத்து
பொய்யை போர்வையாக்கு...
எதிர்ப்பது நிறுத்தி அடங்கிப்போ...
உயர்ந்தவர்களின்
ஏச்சுக்கும் பேச்சுக்கும்
காது கொடுக்காதே...
பொறுத்துப்போ
ஆனந்தமாக ஆசைப்படு...
ஆனால் அடையமுடியாத
அவமானங்களை
அள்ளிக் கொண்டு
ஏக்க பெருமூச்சுகளை
கொஞ்சம் மெதுவாக விடு...
பொங்கிடும் சினத்தை
புதைத்துவிடு...
நியாயம் கண்டு எழுந்திடாத
அநியாயத்தை அழகாக ரசி...
நீதிக்காக நிமிர்ந்திடாமல்
அநீதிக்கு அருகில் இருந்து
காட்சி போல பார்வையிடு...
ஒன்றிலே ஒன்றித்து விடாமல்
அடிக்கடி அதிகமாக
கொள்கைகளை மாற்று...
புரட்சி என்று புறப்படாமல்
தப்பை தட்டி கேளாமல்
தயவாக உடன் நடைபோடு
இப்போது பார்
நீ தான் மதிப்புமிக்க
நபர் .....

ஜே. சாந்தன்
புதுக்குடியிருப்பு

## பிள்ளைகள் பள்ளிகளை நம்பச் செய்வோம்

பிள்ளைகளுக்காக ஆசிரியர்க்கு
ஆறு மணி நேர வேலையாச்சு
ஆனாலும் பிள்ளைக்கு அறிவூட்டும் ரியூசனால்
ஆறோடாறு மணி அவலமாச்சு

விதிகளையே வெறும்
பதிவுகளாக்கிடும் (5 E , 6 S)
வீணர்கள் உள்ள எம் பள்ளிகளால்
விதிமுறையற்ற பூசையின் அருளைப் போல்
கதியென தனியாரை நாடுகின்றார்

பயிற்சி வகுப்பினில் பங்கு பற்றி யங்கே
தழுக்கி மினுக்கியே செய்து காட்டி
முயற்சியேது மின்றி வகுப்பறைகளிலே
குந்தியிருப்போருங் காரணியே

முத்தான சில ஆசிரியர் எங்கள்
சொத்தான பள்ளிகளிலிருந்தாலும்
தனியார் கல்வியின் பங்களிப்பே இவர்
பெறுபேற்றில் விஞ்சி நிற்பதுண்மை

தனியார் கல்வியின் தயவினிலே எங்கள்
சந்ததியிங்கே வாழலாச்சு
இனியார் சொன்னாலும் ஏற்கமாட்டோம் என்ற
இழிநிலையுமிங்கே தோன்றலாச்சு

ஆசுப்பத்திரியின் டாக்டரைப் போல் எங்கள்
ஆசிரியர்களும் உழைத்தாலென்ன?
இருவரும் வெளியினில் செய்திடும் சேவையை
எள்ளி நகையாட முடியுமோ சொல்!

அதிபரும் ஆசிரியரும் அலுவலருங்கூட
மாலை மரியாதைக்காய்ப் பறந்து
வேளைகளை (நேரம்) வீணாய்க்
களிப்பதாலும் இந்த
வேதனைகள் இங்கே தோன்றலாச்சு

பைம்பலடிப்பதும் பகிடிவிடுவதும்
பள்ளிகளிலேயும் உள்ளதையா
வம்புதும்பொன்றும் எமக்கு
வேண்டாம் நாங்கள்
பிள்ளைகள பள்ளிகளை
நம்பச் செய்வோம்

முதுகெலும்புள்ளோரே
முயற்சியுங்கள் நாங்கள்
முற்றாக இவற்றை வளர்ப்போமென்று
வருவது வரட்டும் பள்ளியை நம்புவோம்
பாலர்க்கு வழி காட்டிடுவோம்

கவிமணி அன்னைதாஸன்

## கவிதைகள் மாதிரி

- எனது தொலைபேசி அழைப்பை தூக்காவிடிலும்
- துண்டித்தாவது விடுவாயா..?..?
- உன் இருத்தலையாவது நான்
- உறுதிப்படுத்தி கொள்வதற்கு????

- ஒரு முறை பயணம் போகும் போது உன்னை
- பஸ்சில் சந்தித்தேன் - இப்போது
- உன்னை சந்திப்பதற்காகவே
- நான் பயணம் போகிறேன்

- கடைசியாய் உன்னை
- கறுப்பு சுடிதாரில் பார்த்ததாலோ என்னவோ
- பிடிக்கிறது எனக்கு
- இரவையும்??

- பூக்கடைக்காரியை திட்ட வேண்டும்
- போல இருக்கிறது ??
- ஏமாற்றி பூவிடமே பூவை விற்கிறாளே

எனது தேவதை
ஊர்வலம்
வரப்போகிறாள்
சாமரம் வீசுவதற்கு
தயாராகுங்கள்
அழகிகளே

பூக்களில் நடக்க
விட்டு... பார்க்கவும்
பிடிக்கவில்லை - ஒரு
வேளை உன்
பாதங்கள்
நசிந்து விட்டால்...

அந்த சின்ன வயதில் துரத்திச் சென்ற
வண்ணத்துப்பூச்சி
பறந்து விட்ட போது பக்கத்தில் இருந்த
வண்ணத்துப்பூச்சியை பிடித்திருக்கிறேன்.
இந்த பெரிய வயதில் துரத்தி செல்லும்
வண்ணத்துப்பூச்சி அகப்படாத போது
இன்னொரு வண்ணத்துப்பூச்சியை
நினைத்துப்பார்க்கவே முடியவில்லையே??..



நெடுந்தீவு
முகிலன்

# சமுதாயத்தில் பெண்கள்?



பாரதி கண்ட புதுமைப் பெண்ணைப்பற்றி நாம் அறிந்துள்ளோம். பெண் என்பவள் ஒரு மலருக்கு சமமான ஒரு பிறவி. கயல் விழியாள், மெல்லிடையாள் என்றெல்லாம் பெண்ணைப் பற்றி அறிஞர்கள் புகழ்ந்துள்ளார்கள். இவை எல்லாம் ஆண்களுக்கு அமைவதில்லை. ஒரு மென்மையான துணையை உருவாக்கி ஆண்டவன் உலக நியதியை படைத்துள்ளான் என்றே சொல்லவேண்டும்.

இன்று நாம் பெண்ணுரிமை அவர்களுக்கு உரிய சம உரிமை என்பவற்றை எல்லாம் பெரிது பெரிதாக கதைக்கின்றோம், எழுதுகின்றோம், வாசிக்கின்றோம். ஆனால் எமது வீட்டில் அவளுக்கு அந்த உரிமை எவ்வளவு தூரம் நிலைநாட்டப்பட்டுள்ளது என்பது கேள்விக்குறியாகும். இந்த சம உரிமை ஒவ்வொரு வீட்டிலும் நிலைநாட்டப்படும் போது பெண்களின் சம உரிமைக் கொள்கை நிலைநாட்டப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கலாம்.

என்னடி கனக்க கதையளக்கிறாய்?. அவனை ஏன் இப்படி பார்க்கிறாய்?. நான் சொல்கிறபடி கேட்டு நட. அல்லது வீட்டை விட்டு வெளியேறு. நான் இன்னொரு கிளிப்பிள்ளையை கொண்டு வருவேன். (ஆனால் அந்தக் கிளிப்பிள்ளையும் ஒரு பெண்ணே?) என்னடி இன்றைக்கு சமைத்திருக்கிறாய்? ஒரு ருசியுமில்லை. எனக்கு சாப்பாடு தேவையில்லை. நான் கடையில சாப்பிடுகிறேன். நான் எவ்வளவு பாடுபட்டு உழைக்கிறேன். நீ மரம் மாதிரி நிற்கிறாய். எனியும் வைத்து பார்க்க மாட்டேன். உன்னைக் கொல்வேன். இவை தான் வீட்டில் ஆண்கள் பெண்களுக்கு கொடுக்கும் சம உரிமை. இதை ஆணாதிக்கம் என்று கூறலாம்.

ஆனால் பெண்கள் தாங்கள் ஆணுக்கு சளைத்தவர்கள் அல்ல என்று நிரூபித்திருக்கிறார்கள். எமது நாட்டில் சிறிமாவோ பண்டாரநாயக்க, சந்திரிக்கா குமாரதுங்க என்போர் ஆட்சி தலைவர்களாகி புதுமை படைத்திருக்கிறார்கள்.

எமது அயல் நாடுகளைப் பொறுத்த மட்டில் இந்திரா காந்தி, பெனாசிர்பூட்டோ என்பவர்களும் இதை நிலைநிறுத்தியுள்ளனர். மேலை நாடுகளைப் பொறுத்தமட்டில் இங்கிலாந்தில், பிலிப்பைன்சில் எல்லாம் இவை நடைபெற்றன.

இன்று உலக ரீதியில் கிலாரி கிளின்டன், நவநீதம்பிள்ளை என்று பலர் பிரபல்யமான பதவிகளை வகித்து ஆண்களுக்கு சமமானவர்கள் என்பதனை நிரூபித்துக்கொண்டிருக்கிறார்கள். அதை விட யாழ்ப்பாண அரச அதிபராக இமெல்டா சுகுமாரும், மேயராக எயோகேஸ்வரி பற்குணராஜாவும் நிர்வாகப் பொறுப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எமது யாழ்ப்பாண பல்கலைக்கழக வேந்தராக வசந்தி அரசரட்ணம் தனது கடமைகளை சிறப்பித்துக் கொண்டிருக்கிறார்.

எனவே பெண்களின் சம உரிமை நிலைநாட்டப்பட்டு அதற்கு மேலாக அவர்கள் தாம் ஆண்களுக்கு சளைத்தவர்கள் அல்லர் என்பதனை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பாரதி அன்று கண்ட புதுமைப் பெண்கள் இன்று எம்மத்தியில் இருக்கிறார்கள் என்றே சொல்லவேண்டும். எனவே எம்மவர்கள் இனியாவது ஒவ்வொரு வீட்டிலும் பெண்களுக்குரிய அந்தஸ்தை கொடுக்கவேண்டியவர்களாகிறார்கள்.

சில வீடுகளில், ஏதாவதொரு ஒரு முடிவை எடுக்க வேண்டியவர்களாக ஆண்களே செயற்படுகிறார்கள். 'அவரில்லை'. 'அவரைத்தான் கேட்கவேண்டும்'. அவரிருக்கும் போது வாருங்கள் என்றெல்லாம் சொல்லப்படுவதை நாம் இன்றும் கேட்டுக்கொண்டு தானிருக்கிறோம். இனியாவது இவற்றை நிறுத்தி பெண்களும் வீட்டு முகாமைத்துவத்தில் பங்கு கொண்டு தமது முடிவுகளை எடுக்க வேண்டியவர்களாக வேண்டும். அவரை கேட்க தேவையில்லை. இது தான் முடிவு. இதைத்தான் அவரும் எடுப்பார் என்ற நிலையில் ஒவ்வொரு வீட்டுப் பெண்ணும் சமூகத்தில் தனது பொறுப்பை நிலைநாட்ட வேண்டும்.

இதை விட ஒவ்வொரு வீட்டிலும் ஆண்கள் செய்யும் தவறுகளை தட்டிக் கேட்கவேண்டியவர்களாக பெண்கள் செயற்படவேண்டும். மாதர் சங்கங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் செயற்பட வேண்டும்.

ஒரு வீட்டில் ஆணுக்கு எவ்வளவு அதிகாரம் இருக்கிறதோ அதே அதிகாரம் பெண்ணுக்கும் கொடுக்கப்படும் போது அந்த வீடு சிறப்படைகிறது. வேலைப்பளு, வீட்டிலிருப்பது குறைவு. எனவே அம்மாவிடம் எமது பிரச்சினைகளை முடித்துக்கொள்வோம் என்றளவில் பிள்ளைகள் இருக்கவேண்டும்.

பெண்களும் தங்களுடைய பணியை மிகவும் அவதானமாக மேற்கொள்ள வேண்டியவர்களாகிறார்கள். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவற்றைப் பேணி தமது கணவர்களுக்கான கலாசாரத்தை அனுசரிக்கும் போது ஒரு குடும்பம் மிகவும் சிறப்பானதாக அமைகிறது. அங்கே அமைதி, ஆலோசனை மனப்பான்மை, குடும்ப முகாமைத்துவம் என்பன பேணப்படுகின்றன.

சிவனும், சக்தியும் ஒன்றே. இறைவன் சக்தியை தனது பாதியாக ஏற்றுக் கொண்டார். அவளுக்குரிய இடத்தைக் கொடுத்தார். சைவ சமயத்தில் கல்விக்கு சரஸ்வதியும், செல்வத்துக்கு இலட்சுமியும், வீரத்திற்கு துர்க்காதேவியும் வழிபாட்டு தெய்வங்களாக அமைகிறார்கள். இதை கவனிக்கும் போது பெண்களுக்குரிய இடம் எமது சமயத்திலும் கொடுக்கப்பட்டிருப்து புலனாகின்றது.

கிறிஸ்தவர்கள் யேசுவின் தாய் மேரியை தெய்வமாக, தேவியாக, தூய்மையானவராக போற்றி வழிபடுகிறார்கள். இந்தவகையில் பெண்களும் ஆண்களுக்கு சமமானவர்கள் என்பது புலப்படுகிறது.

ஒரு பெண்ணை அவளது தாயைத் தவிர,கணவனே பிறந்த மேனியுடன் பார்ப்பதற்கு உலக நியதி அனுமதிக்கிறது.

*(தொடரும்)*

சித்தன்கேணியூர்
**செல்வரத்தினம் சௌந்தரராஜன்**
(ASSM-UK,AUKAP-UK)

# 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன்

## (28.10.11 முதல் 03.11.11 வரை)

## கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)

### ★ மேஷம்

மேடராசி அன்பர்களுக்கு அனு [illegible] கள் ஏற்படும். தொழில் நிலையில் ஓரளவிற்கு நன்மைகள் அமையும் பலன் உண்டு. குடும்பத்தில் சிறப்பான பலாபலன்கள் ஏற்படும் நிலையுண்டு. பணவரவு ஓரளவிற்கு அனுகூலமானதாய் அமையும் பலனுண்டு. கடன் நிலையில் சிறு சிறு மந்தமான பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு மகிழ்ச்சி உண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.

### ★ இடபம்

இடபராசி அன்பர்களுக்கு சற்று [illegible] மந்தமான பலனே ஏற்படும். குடும்பத்தில் சிறு சிறு மந்தமான பலன்களே அமையும் நிலையுண்டு. உடல் நிலையில் சுகயீனம். மருத்துவ செலவுகள் அமையும். பணவரவில் சற்று சுமாரான மத்திமமான பலன்களே ஏற்படும். கடன் நிலையில் சிறு சிறு இழுபறி நிலைகள் ஏற்படும் பலனுண்டு. பெண்களுக்கு மத்திம பலன் இருக்கும். மாணவர்கள் முயற்ச்சி தேவை.

### ★ மிதுனம்

மிதுனராசி அன்பர்களுக்கு மிக [illegible] பலன்களே அமையும். தொழில் நிலைகளில் நல்ல வெற்றியுண்டு. குடும்பத்தில் மிகவும் சிறப்பான அனுகூலமான பலன் உண்டு. பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையே அமையும் பலனுண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் நல்ல வெற்றிகள் அமையும் பலனுண்டு. கடன் நிலைகளில் சுமுகமான பலா பலன்கள் அமையும் நிலையுண்டு. பெண்களுக்கு மகிழ்ச்சி உண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.

### ★ கடகம்

கடகராசி அன்பர்களுக்கு ஓரள [illegible] அமையும் நிலையுண்டு. எடுக்கும் முயற்சிகளில் நிதானம் தேவை. தொழில் நிலையில் இழுபறி தாமத நிலை இருக்கும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும். பணவரவு சற்று சுமாரானதாகவே அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் இருக்கும். பெண்களுக்கு மத்திம பலன் அமையும். மாணவர்களுக்கு முயற்சி தேவை.

### ★ சிம்மம்

சிம்மராசி அன்பர்களுக்கு அனுகூலமான பலாபலன்கள் அமையும். குடும்பத்தில் சிறப்பான பலா பலன்கள் அமையும் நிலையுண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலைகளில் சிறு சிறு பிரச்சினைகள் அமையும் நிலையுண்டு. பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமைகின்ற நிலை உண்டு. சகோதரர் வழியில் பிரச்சினை, சிக்கல்கள் அமையும் நிலையுண்டு. பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்கள் நிதானம் தேவை.

### ★ கன்னி

கன்னிராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலா பலன்கள் அமையும். தொழில் நிலையில் நல்ல வெற்றிகள் உண்டு. குடும்பத்தில் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலையில் முன்னேற்றகரமான பலாபலன் ஏற்படும். பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையிலே அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் ஏற்படும் நிலையுண்டு. பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

### ★ துலாம்

துலாராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான சுமாரான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். தொழில் நிலைகளில் இழுபறி தாமத நிலை இருக்கும். பணவரவு சற்று சுமாரானதாகவே அமையும். குடும்பத்தில் மத்திமமான சுமாரான பலனே ஏற்படும். கடன் நிலைகளில் சற்று மத்திமமான பலனே ஏற்படும். பெண்களுக்கு மத்திம பலனே ஏற்படும். மாணவர்களுக்கு முயற்சி தேவை.

### ★ விருச்சிகம்

விருட்சிகராசி அன்பர்களுக்கு மத்திம பலன்களே ஏற்படும். எதிர்பாராத திடீர் செலவீனங்கள் அமையும் நிலையுண்டு. குடும்பத்தில் சுமாரான மத்திமமான பலன்களே அமையும். தொழில் நிலையில் நிதானமான செயற்பாடு வேண்டும். பணவரவு சற்று மத்திமமாகவே அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் மத்திமமான பலன்களே அமையும். பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்கள் நிதானம் தேவை.

### ★ தனுசு

தனுசுராசி அன்பர்களுக்கு சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகளில் சிறப்பான பலன் ஏற்படும். குடும்பத்தில் அனுகூலமான பலா பலன்கள் ஏற்படும். பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமையும். தொழில் நிலைகளில் மேன்மையான பலன் உண்டு. கடன் நிலையில் சுமுகமான பலன்கள் ஏற்படும் நிலையுண்டு. பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

### ★ மகரம்

மகரராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகளில் சிறு சிறு தடை தாமத நிலைகள் இருக்கும். குடும்ப நிலையிலே அனுகூலமான பலா பலன்கள் அமையும் நிலையுண்டு. எதிர்பாராத வகை திடீர் பிரயாணங்கள் ஏற்படும் பலனுண்டு. பணவரவு சற்று சுமாரான மத்திம நிலையிலேயே அமையும். பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்கள் முயற்சி தேவை.

### ★ கும்பம்

கும்பராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலன் அமையும் நிலையுண்டு. எடுக்கும் முயற்சிகள் நல்ல வெற்றியைக் கொடுக்கும். தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் அமையும். குடும்பத்தில் மகிழ்வும் சுபகாரிய நிலைகளும் ஏற்படும். பணவரவு மிகவும் திருப்திகரமானதாக அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

### ★ மீனம்

மீனராசி அன்பர்களுக்கு சுமாரான மத்திமமான பலன்களே ஏற்படும். எடுக்கும் முயற்சிகளில் நிதானம் வேண்டும். தொழில் நிலைகளில் இழுபறி தாமத நிலை இருக்கும். குடும்பத்தில் மத்திமமான சுமாரான பலனே அமையும். கடன் நிலைகளில் சிறு சிறு மந்த நிலைகள் இருக்கும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்கள் முயற்சி தேவை.

# குழிகளிலிருந்து வெளிவரும் புகையால் மக்கள் பீதி

நிலத்தில் திடீர் திடீரென்று தோன்றும் குழிகள்.. அதில் புதையல் இருப்பதாக உலா வரும் பேச்சுகள்.. மன்னர் காலத்து ரகசிய பாதாள அறைகள் இருப்பதாக சொல்லப்படும் விஷயங்கள்.. இவை ஒரு கிராமத்தையே ஆட்டிப் படைத்துக் கொண்டு இருக்கிறது.

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே பட்டகப்பட்டி கிராமத்திலுள்ள மாந்தோப்பில் இருந்துதான் இந்த பீதி கிளம்பியது. ஒரு ஏக்கர் பரப்புள்ள தோப்பை புல்டோசர் மூலம் சமப்படுத்திக் கொண்டிருந்தனர். அப்போது தோட்டத்தின் மையப் பகுதியில் பிரமாண்ட கல் மேடை ஒன்று தட்டுப்பட்டது. சுமார் 50 அடி அகலத்தில் பாறை, சுண்ணாம்பு கலவையால் கட்டப்பட்ட கல் மேடை. அதன் கட்டிட அமைப்பு வித்தியாசமாக இருந்தது. மன்னர் காலத்தில் கட்டப்பட்டதுபோல இருந்தது.

"அரசர்கள் காலத்தில் கட்டிய மேடைக்குள் புதையல் இல்லாமல் இருக்குமா? கண்டிப்பாக தங்கம், வைரம் பொக்கிஷங்கள் இருக்கும்'' என்று பரபரப்பாக மக்கள் பேசினர். பல ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதியை ஆட்சி செய்த மைசூர் மன்னர் திப்பு சுல்தான், பெருஞ் செல்வத்தை உள்ளே புதைத்து மேலே பாதுகாப்புக்காக இந்த பிரமாண்ட கல் மேடையை அமைத்ததாகவும் பேசிக் கொண்டனர்.

பட்டகப்பட்டி கிராமத்தின் சுற்றுப்பகுதி முழுவதும் பொக்கிஷத் தகவல் காட்டுத் தீயாக பரவியது. மக்கள் கூட்டம் கூட்டமாக படையெடுத்தனர். மாந்தோப்பு கல்மேடை பரபரப்பான பகுதியாக மாறியது. அதன் பின்னால் மறைந்திருக்கும் மர்மம் என்ன என்ற கேள்வி மக்களை ஆட்டிப் படைக்கத் தொடங்கியது.

இதற்கிடையில், கல்மேடை கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் இருந்து 60 அடி தூரத்தில் மேலும் 3 கல்மேடைகள் கண்டுபிடிக்கப்பட்டமை பரபரப்பையும் எதிர்பார்ப்பையும் அதிகப்படுத்தியது.

இதுபோல சேலம் மாவட்டம் மேட்டூர் பகுதியில் உள்ள விவசாய நிலத்தை வெட்டியபோது திடீரென் ஒரு பெரிய குழி தோன்றியது. அதில் இருந்து புகை கிளம்பியதால் மக்கள் பீதியும் திகிலும் அடைந்து ஓடினார்கள். புதையல் இருக்கலாம் என்ற ஆசையில் சிலர் தைரியமாக சென்று குழியை பார்த்தனர். குழியில் இருந்து இரும்பு ஆயுதம், எலும்புகள் வெளியே வந்ததால் அவர்களும் பீதியடைந்து ஓடினர்.

''பேய், பிசாசு மற்றும் துர்மரணத்தை சந்தித்து பேயாக அலையும் ஆவி போன்றவற்றை மண்பானையில் போட்டு புதைத்து விடுவது வழக்கம். அவ்வாறு மூடப்பட்ட மண் பானையைத்தான் உடைத்துவிட்டார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு புதைக்கப்பட்ட ஆவி தற்போது வெளியே வந்துவிட்டது'' என்று சிலர் கூறுகிறார்கள். இது அப்பகுதியினர் மத்தியில் பெரும் பீதியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இதுதொடர்பாக கோவை தொல்லியல் ஆய்வாளர் ஜெகதீசன் கூறுகையில், ''விவசாய நிலங்களில் உள்ள நிலவறைகளில் முன்னோர்கள் தானியங்களை சேகரித்து வைப்பர். இதில் நகைகள் இருக்க வாய்ப்பு இல்லை. கோயில் நிலவறைகளில்தான் நகைகள் வைப்பர். ஏனென்றால் கோயில்கள்தான் அன்றைய காலங்களில் கருவூலமாக இருந்தன. கோயில் தவிர அரண்மனை கருவூலங்களில் பொக்கிஷங்கள் வைத்திருந்தனர். நிலவறைகளில் தானியங்களை புதைத்து விட்டு தேவை ஏற்படும் காலத்தில் எடுத்து பயன்படுத்தி வந்தனர். இதன்மூலம் மழை, வெள்ளம், தீ போன்ற இயற்கை சீரழிவிலிருந்து தானியம் அழிவது தவிர்க்கப்பட்டது.

பண்டைக் காலத்தில் இறந்தவருக்கு பிடித்த உணவுகள், பயன்படுத்திய ஆடை, ஆபரணங்கள், ஆயுதங்கள், ஆகியவற்றையும் மட்பாண்டத்துக்குள் சடலத்துடன் வைத்து புதைப்பர். ஆங்காங்கே தற்போது தட்டுப்படுபவை கற்கால எச்சங்கள்தான்.

எனவே இவற்றில் பொன், பொருள், புதையல் இருக்க வாய்ப்பில்லை'' என்றார். ஆனாலும், கல்மேடையால் ஏற்பட்ட பரபரப்பும் 'ஆவி குழி' ஏற்படுத்திய பீதியும் அப்பகுதியில் இன்னும் ஓயவில்லை.

# யாழ். மாவட்டத்தில் புதிதாக றக்பி விளையாட்டு அறிமுகம்

அச்சுவேலி,

யாழ். மாவட்டத்தில் றக்பி விளையாட்டின் அறிமுக நிகழ்வும் பயிற்சி முகாமும் அண்மையில் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

[illegible] ரிவு ஆண்/ பெண் அணிகளுக்கிடையிலான றக்பி காட்சிப் போட்டிகளும் நடைபெற்றன.

பயிற்சி நிகழ்வில் பங்குகொண்ட பாடசாலைகளுக்கு றக்பி பந்துகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

றக்பி பயிற்சி முகாம் ஆரம்ப நிகழ்வில் யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி ஜெனரல் ஹத்துருசிங்க, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு [illegible] ராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பயிற்சி முகாமுக்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைகளின் தலைமையகம் செய்திருந்தது.


# நானாட்டான் மகா வித்தியாலய அணி வடக்கு மாகாண சம்பியனானது

அச்சுவேலி,

வடக்கு மாகாண நவவோதயாப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மன்னார் நானாட்டான் மகா வித்தியாலய அணி வெற்றி யனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் மன்னார் நானாட்டான் மகா வித்தியாலய அணியும் வவுனியா இந்துக் கல்லூரி அணியும் மோதிக்கொண்டன.

மன்னார் நானாட்டான் மகா வித்தியாலய அணி 25:21, 25:17,25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வவுனியா இந் [illegible] சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.




# ஊரெழு றோயலை வென்றது வலைப்பாடு ஜெகமீட்பர் அணி

கிளிநொச்சி,

கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் உருத்திரபுரம் விளையாட்டு கழகம் நடத்திய 11 பேர் கொண்ட வடமாகாணம் தழுவிய விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்ட கிளிநொச்சி பூநகரி வலைப்பாடு ஜெகமீட்பார் விளையாட்டுக் கழக அணி 2-0 கோல் கணக்கில் வென்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

உருத்திரபுரம் விளையாட்டு மைதானத்தில் மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இறுதிப் போட்டிக்கும் பரிசளிப்பிற்கும் பிரதமவிருந்தினராக கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் தலைவரும் ஆசிரியருமான ஜோய். பியசீலனும், கரைச்சி பிரிவு விளையாட்டதிகாரி எஸ். குமாரும் கலந்துகொண்டனர்.

ஆட்ட நாயகனாக வலைப்பாடு ஜெகமீட்பார் அணியைச் சேர்ந்த எஸ். ஜீவகுமார் தெரிவானார். சிறந்த கோல் காப்பாளராக உருத்திரபுரம் உழவர் ஒன்றிய வீரர் கே. விமலேஸ்வரனும் தொடர் ஆட்ட நாயகனாக ஊர்ரெழு றோயல் விளையாட்டுக் கழக வீரர் தர்மகுலநாதனும் தெரிவானார்கள்.

வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்த ஜெகமீட்பார் அணிக்கு 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் இரண்டாம் இடத்தைப் பெற்ற ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்திற்கு 7 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.

# தேசிய சதுரங்கப் போட்டியில் பங்கேற்க தெரிவான யாழ். மாவட்ட மாணவர்கள்

அச்சுவேலி,

டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள தேசிய மட்ட சதுரங்கப் போட்டிக்கான மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு நடத்தப்பட்ட போட்டிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலிருந்து போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு-

**ஆண்கள் பிரிவு -** நாகராசா வர்மன் -(யாழ். இந்துக் கல்லூரி), இராசசேகர் மதுஷன்- (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), ரகுநாதன் மகிந்தன்- (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), சிவலிங்கம் அனந்தசயனன்- (யாழ். இந்து கல்லூரி), ஜெயராஜா கபிலானந்- (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), அலோசியஸ் ஜஸ்ரின்- (யாழ். இந்துக் கல்லூரி).

**பெண்கள் பிரிவு -** பார்த்திபன் பிரவினா - (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), தேவதாஸ் உமையாழினி- (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), மகாலிங்கம் கௌதமி- (வட இந்து மகளிர் கல்லூரி), கோவிந்தராஜா தீபனா- (யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ஸ்ரீ மோகன் வேதிகா- (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), இராமச்சந்திரன் பிரபாலினி- (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி).

# அஞ்சல் உதைபந்தாட்டப் போட்டியில் மன்னார் மாவட்ட அணி சம்பியன்

அச்சுவேலி,

137 ஆவது சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாவட்ட அஞ்சல் அணிகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மன்னார் மாவட்ட அஞ்சல் அணி வெற்றிபெற்று வடக்கு மாகாண அஞ்சல் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட அஞ்சல் அணியும் மன்னார் மாவட்ட அஞ்சல் அணியும் மோதிக் கொண்டன. இரண்டு அணிகளும் வெற்றிக்காகத் தீவிரமாக விளையாடிய போதிலும் மன்னார் மாவட்ட அணி முல்லைத்தீவு மாவட்ட அணியை 0:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு வடக்கு மாகாண அஞ்சல் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. கடந்த வருடம் நடைபெற்ற அஞ்சல் தின போட்டிகளிலும் மன்னார் மாவட்ட அணி வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் கோட்ட சம்பியன்

ஏழாலை,

நல்லூர் கோட்ட மட்ட 18 வயதுப்பிரிவு உதைபந்தாட்ட போட்டியில் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய அணி சம்பியனானது.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து விளையாடிய கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரு அணிகளும் கோல் எதுவும் போடாது விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் இறுதி 3 ஆவது நிமிடத்தில் ஜெ. றெக்சனால் அடிக்கப்பட்ட கோல் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய அணியின் வெற்றிக்கு வழி வகுத்தது.

---

## கடாபியின்

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடக்குவதற்கு கடாபி விமானத்தையும் பீரங்கிகளையும் பயன்படுத்துவதாகக் கூறி ஐ.நா. மனித உரிமைகள் சபை லிபியாவின் உறுப்புரிமையை நீக்கம் செய்தது. வரலாற்றில் ஒரு நாடு இவ்வாறு ஐ.நா. உறுப்புரிமையை இழந்தமை இதுவே முதற் தடவையாகும். ஜனநாயக ரீதியில் நடைபெறும் மக்கள் போராட்டத்தை கடாபி இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவதாக பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் வன்மையாகக் கண்டித்தன. கிளர்ச்சியாளர்கள் ஒவ்வொரு நகரமாக கைப்பற்றி, கடாபியை நெருங்கிச் சென்றபோதும் 'சரணடையமாட்டேன் இறுதிவரை போராடுவேன்' என அவ்வப்போது தொலைக்காட்சிகளில் தோன்றி தன் ஆதரவாளர்களை உற்சாகப்படுத்தி வந்தார். கிளர்ச்சியாளர்களின் போராட்டம் உக்கிரமடைந்ததால் லிபியாவின் தலைநகரான திரிபோலியை விட்டு கடாபி வெளியேறினார். 'கடாபி லிபியாவை விட்டே ஓடி விட்டார்' என கதைகள் பரவியபோது இந்த போராட்டத்தில் ''வெல்வேன் இல்லையேல் வீர மரணமடைவேன்'' என சூளுரைத்தார்.

இதனையடுத்து கிளர்ச்சியாளர்கள் அவரின் சொந்த ஊரான சிர்ட் நகரில் சல்லடை போட்டுத் தேடத்தொடங்கினர். இதுவே கடாபியின் வசமிருந்த இறுதி நகரமாகும். இங்கு நடந்த கடும் மோதலில் இறுதியாக கடாபி உயிருடன் கிளர்ச்சியாளர்களினால் பிடிக்கப்பட்டு சில மணி நேரங்களின் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

லிபியாவை 1969 ஆம் ஆண்டு முதல் தொடர் ஆட்சி செய்து வந்த கேணல் முஅம்மர் கடாபியின் ஆட்சி 2011 ஆம் ஆண்டு அக்டோபர் 20 ஆம் திகதி அவரின் மரணத்துடன் வீழ்ச்சி கண்டது. கடாபியை, மன்னர் ஆட்சியிலிருந்த லிபிய மக்களுக்கும் அரபு நாடுகளுக்கும் மீட்சியைக்கொடுத்து மேற்குலகின் நவ காலனித்துவத்துக்குப் பணியாது இறுதிவரை போராடிய மா வீரன் எனச் சொல்வதா? அல்லது தன்னை ஒரு ஆபிரிக்கக் கண்டத்தின் மீட்பாளராக சித்தரித்து அதீத கற்பனையில் மிதந்து சர்வாதிகாரம் செய்த சர்வாதிகாரி எனச் சொல்வதா?....

# பதில் கொடுத்தது இந்தியா

தன் சொந்த மண்ணில் வைத்து இங்கிலாந்து அணிக்கு தகுந்த பதிலைக் கொடுத்துள்ள இந்திய அணி உலக சம்பியன் அணி தாம் என்பதை நிரூபித்துள்ளது. இடைவிடாத விமர்சனங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் சொந்த மண்ணில் இங்கிலாந்தை எதிர்கொண்ட இந்திய அணி அனைத்துக்கும் ஒட்டுமொத்த பதிலடி கொடுத்துள்ளது என்றே சொல்லவேண்டும்.

முன்னர் கடந்த ஜூன் மாதம் மத்தியில் இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்து கிரிக்கெட் அணியுடனான டெஸ்ட், இருபது-20 மற்றும் ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது.

டெஸ்ட் தரப்படுத்தலில் முதல் அணியாகவும் ஒரு நாள் போட்டியின் உலக சம்பியனாகவும் அங்கு சென்ற இந்திய அணி எதிர்பாராதவாறு அவ்வணியிடம் மோசமான இடைவிடாத தோல்வியைச் சந்தித்தது.

ஐ.சி.சி.யின் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றின் 2,000 ஆவது மைல்கல்லாக அமைந்த அவ்வணியுடனான டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் தோல்வியை கண்ட இந்திய அணி இங்கிலாந்து மண்ணில் அவ்வணியிடம் அனைத்து போட்டிகளிலும் தோல்வியையே [illegible]வரித்தது.

உலகக்கிண்ண வெற்றியின் பின் சில கால இடைவெளியில் இவ்வாறு இந்தியஅணி கண்ட தோல்வி அவ்வணியை கடுமையான விமர்சனத்துக்குள்ளாக்கியது மறுப்பதுக்கில்லை. ஆயினும் அத் தொடரில் இந்திய அணியின் தோல்விக்கு காயமும் ஒரு காரணமாக அமைந்திருந்தது. அணியின் முன்னணி வீரர்கள் தொடரின் ஆரம்பம் முதல் காயத்துக்குள்ளானமை அணியை பின்னடையச் செய்தது. இதேவேளை உலகக்கிண்ணத்தை வென்ற இந்திய அணியை தேர்வு செய்த தேர்வுக்குழுவும் இத் தோல்வியைடுத்து கடுமையான விமர்சனத்துக்குள்ளானது.

இந்நிலையில், சிறிது கால இடைவெளியின் பின் மீண்டும் இங்கிலாந்து அணியியை தன் சொந்த மண்ணில் சந்தித்துள்ள இந்திய அணி அவ்வணியிடம் கண்ட தொடர் தோல்விகளுக்கு பதில் கூறியுள்ளது.

பதவியைப் பாதுகாக்க வேண்டிய நேரமும் பதில் கூறவேண்டிய நேரமும் ஒருங்கே சேர்ந்திருந்த வேளையில் இந்திய தேர்வுக்குழுவின் தலைவராக மீண்டும் ஸ்ரீகாந்த் தலைமையேற்றார். இவர் தனது திறமையினால் இத்தொடருக்கான சிறந்த இளம் அணியை தேர்வு செய்தார்.

காயமில்லாததொரு இந்திய அணியை இத் தொடரில் களமிறக்க எண்ணிய அவர் காயங்களுடன் இருந்த மூத்த வீரர்களுக்கு ஓய்வு கொடுத்து இளம் வீரர்களைக்கொண்ட அணியாக இத் தொடருக்குரிய அணியை தேர்வு செய்தார். இது அவருக்கு வெற்றியளித்துள்ளதென்றே சொல்லவேண்டும்.

இந்திய- இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது போட்டி கடந்த 14 ஆம் திகதி ஹைதராபாத்தில் நடைபெற்றது. பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஆரம்பமான இப்போட்டியில் இங்கிலாந்துக்கு அதிர்ச்சியைக் கொடுத்த இந்திய அணி முதல் போட்டியை கைப்பற்றியது.

இதனால் ஆட்டம் கண்ட இங்கிலாந்து அணி 2 ஆவது போட்டியில் எழுச்சிபெறும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அதிலும் இந்தியாவிடம் பணிந்து தொடர்ச்சியாக அனைத்துப் போட்டிகளிலும் தோல்வியைத் தழுவியது.

இந்திய அணி முதலாவது போட்டியில் 126 ஓட்டங்களாலும் 2 அவது போட்டியில் 8 விக்கெட்டுக்களாலும் 3 ஆவது போட்டியில் 5 விக்கெட்டுக்களாலும் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியதுடன் 4 ஆவது போட்டியை 6 விக்கெட்டுக்களாலும் 5 போட்டி தொடரை முழுமையாக தன்வசப்படுத்தியது.

இந்நிலையில், இந்த தெடர் வெற்றியானது இந்திய அணி உலக சம்பியன் அணி என்பதை மீண்டும் உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளது. இங்கிலாந்தில் அந்த அணியிடம் கண்ட தோல்விக்கு தன் சொந்த மண்ணில் முழுமையான பதில் கொடுத்துள்ளது என்றே சொல்லவேண்டும்.

முன்னர் இங்கிலாந்தில் அடைந்த தோல்வியினையடுத்து டோனியின் தலைமை மீது விமர்சனங்கள் எழுந்தன.

அதாவது 3 வகையான போட்டிகளுக்கும் தலைமை வகிக்கும் டோனி இடைவிடாத அதிக போட்டிகள் காரணமாக நெருக்கடிக்குள்ளாகின்றார். இதனாலேயே தொடரில் தோல்விகளை சந்திக்க நேரிட்டது என தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னரே அணித்தலைமைய பிரித்துக் கொடுக்கும் முடிவில் இந்திய கிரிக்கெட் சபை இறங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதாவது 3 வகையான போட்டிகளுக்கும் டோனியே தலைமை வகிப்பதால் அவருக்கு அதிக நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதால் தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்தில் உள்ளது போல் தலைமைப் பதவியை பிரித்துக்கொடுக்கும் திட்டத்தில் பி.சி.சி.ஐ. இறங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் தற்போது நடந்து முடிந்த தொடரில் இந்திய அணியின் வெற்றிக்கு பெரும் தூணாக டோனி விளங்கியதுடன் தொடர் நாயகன் விருதையும் வென்றுள்ளார் என்பது மறுப்பதுக்கில்லை. இங்கிலாந்து மண்ணில் பிரகாசிக்கத் தவறிய அவர் இத் தொடரில் தன் தலைமை மீதான விமர்சனங்களுக்கு முற்றுப் புள்ளி வைத்துள்ளார்.

இவ்வாறு இந்திய அணி தன் மீதான அனைத்து விமர்சனங்களுக்கும் குறுகிய காலத்திலேயே பதில் கொடுத்துள்ளது. இளம் வீரர்களின் திறமையை மட்டும் நம்பி களமறிங்கிய இந்திய அணி இங்கிலாந்தின் பலத்துக்கு எதிர்பாராத அதிர்ச்சியைக் கொடுத்ததுள்ளது.

இதேவேளை, மறுபுறத்தில் பார்த்தால் தன் சொந்த மண்ணில் வைத்து இந்திய அணியின் வெற்றிகளை இடைவிடாது வழித்தெடுத்த இங்கிலாந்து அணி, இந்திய மண்ணில் அவ்வணியிடம் தோல்வியை சந்தித்துள்ளது. சொந்த மண்ணில் இந்திய அணியிடமிருந்து தொடரை முழுமையாக கைப்பற்றிய பெருமிதத்துடனும் அதன் தரப்படுத்தல் நிலைகளை பறித்த இறுமாப்புடனும் களமிறங்கிய இங்கிலாந்து அணி இந்திய மண்ணில் ஆட்டம் கண்டது என்றே சொல்வேண்டும்.

இந் இந்திய அணியை மழுமையாக வெற்றி கொளும் என எதிர் பார்க்கப்பட்ட போதிலும் அது எதிர்மறையாகவே நிகழ்ந்துள்ளது. துடுப்பாட்டம், பந்து வீச்சு மற்றும் களத்தடுப்பு என அனைத்திலும் பிரகாசிக்கத் தவறிய இங்கிலாந்து அணி இந்திய அணியிடம் மண்டியிட்டது.

இதில் இங்கிலாந்து அணி வீரர்கள் தமது நிலைகளில் தடுமாற்றத்துடனே காணப்பட்டனர் . அதாவது முதல் போட்டியில் எதிர்பாராத விதமாக அடைந்த தோல்வி அவர்களை மனதளவில் பாதித்துள்ளது என்றே சொல்லவேண்டும்.

அதாவது போட்டிகளின் போது அவர்கள் இந்திய அணியின் பந்து வீச்சை எதிர் கொள்வதற்கு மிகுந்ந சிரமத்தை வெளிப்படுத்தினர். இதனால் இங்கிலாந்து அணியின் தோல்வி உறுதியாகியது.

இதேவேளை, இளம் வீரர்களைக் கொண்ட அணியாக தொடரில் களமிறங்கி இந்திய அணி தனது எதிர் கால பலத்தையும் இத் தொடல் எதிர்வு கூறியிருப்பது மறுப்பதுக்கில்லை. மூத்த வீரர்களுக்கு இத் தொடரில் ஓய்வு அளிக்கப்பட்ட போதிலும் இளம் வீரர்கள் தமது திறமையால் இங்கிலாந்து அணியை அச்சுறுத்தியுள்ளனர்.

இத் தொடரில் இந்திய அணியின் பலமும் இங்கிலாந்து அணியன் பலவீனமுமாக களத்தடுப்பே இருந்ததை அவதானிக்கமுடிகின்றது.

எது எவ்வாறாயினும் தோல்வியே சிறந்த அனுபவம் என்பதை இத் தொடர் வெளிப்படுத்தியுள்ளது.

ப.சுகிர்தன்



# வடமாகாண கல்வி - விளையாட்டுத் திணைக்களங்கள் இணைந்து நடத்திய Colour Night













Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday October 28, 2011